

கல்கி

KALKI 12-6-83 ரூ. 1.20


கல்கி
KALKI 12·6·83 ரூ 1·20
ஜனகபுரா ஹீரர் : கர்நாடக முதல்வர்!

எளிமைக்கு ஹெக்டே

ஹெக்டேயின் குடும்பமே சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட குடும்பம். ஹெக்டேயும், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதனால் படிப்பை விட்டு விட்டுத் தொடர்ந்தார். பனாரஸ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றார். 1957ல் சட்ட மன்ற உறுப்பினரானவுடன் கிடைத்தது துணை நிதி மந்திரி பதவி. நிஜலிங்கப்பா முதல்வர். பிறகு நிதி மந்திரியாக நிஜலிங்கப்பா மந்திரி சபையிலும், வீரேந்திர பாட்டீல் மந்திரி சபையிலும் இருந்தவர். பெங்களூர் ராஜ்மஹால் எக்ஸ்டென்ஷனில் உள்ள அவரது சொந்த வீட்டில் யார் வேண்டுமானாலும் எந்தவித முன்னறிவிப்புமின்றி ஹெக்டேயைச் சந்தித்துப் பேசலாம். தினசரி காலையில் எட்டரை மணியளவில் மக்களைச் சந்திக்கிறார். பிறகு அலுவலகத்துக்குச் சாதாரண அம்பாஸிடர் காரில் எந்தவித பந்தாவும் இல்லாமல் செல்கிறார். ஒரு ஆட்டோ ரிக்ஷாவைக் கூட 'ஓவர் டேக்' செய்து போகக் கூடாது என்று டிரைவருக்குக் கட்டளை இட்டிருக்கிறாராம். ஹெக்டேக்கு இரண்டு பெண்கள், ஒரு மகன். மகன் தனியாக ஒரு சிறு தொழிற்சாலை நடத்தி வருகிறார். ஒரு மாதிரி அரக்கு கலரில் குர்தாவும், வெள்ளை பைஜாமாவும் இவருக்குப் பிடித்த உடைகள். நிறுத்தி, நிதானமாக, மிகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் ஆங்கிலத்தை உபயோகிக்கிறார்.


—நமது நிருபர்

புகைப்படம்: சுபா

வண்ணம்: கல்பனா







“மந்த ஓட்டலைவிட எங்கள் ஓட்டல் பேப்பர் மசாலாவிற்கு ரொம்ப வித்தியாசம் இருக்குன்னு சொல்றியே, எப்படி?”
“எங்க ஓட்டல் பேப்பர் மசாலாவை ‘ஆப் செட்’டிலே தயாரிக்கிறோம்!”
-அ. குமார்

பாலசூரியன் உதயம்

திடீரென்று நிருபர் கூட்டத்தில், 'வரும் ஞாயிற்றுக் கிழமையன்று இளைய சங்கராச் சாரியார் நியமிக்கப்பட இருக்கிறார்' என அறிவித்தார் ஸ்ரீ காமகோடி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.


அவ்வளவுதான். பத்திரிகை உலகக் கூட்டமும், இப்படியொரு காட்சியை இந்த ஜன்மத்தில் பார்க்க முடியுமோ என்னவோ என்று பக்தர்கள் கூட்டமுமாக விழுந்தடித்துக்கொண்டு காஞ்சிபுரத்துக்கு ஓட—

காஞ்சி மாநகரமே அல்லோல கல்லோலப் பட்டு விட்டது. ஏற்கனவே தண்ணீர்ப் பஞ்சம். திடீரென்று திருவிழாக் கோலம் பூண்டுவிட்ட நகரைச் சமாளிக்க முடியாமல் திண்டாடித்தான் போய் விட்டார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி மடத்தின் எழுபதாவது பீடத்தை அலங்கரிக்கவிருக்கும் அந்தப் புண்ணியச் சிறுவன் யார் என்று விசாரித்தபோது—

வேதங்களைக் கற்றுத் தரும் ஓர் எளிய தெலுங்கு பிராமணக் குடும்பத் தலைவருக்கு நான்காவது மகனாகப் பிறந்தவராம் சங்கரன். பொன்னேரிக்கு அருகில் உள்ள தண்டலம் கிராமம் சொந்த ஊராம். அம்பத்தூர் தொழிற் பேட்டையில் வேலை செய்யும் இவருடைய இரண்டாவது அண்ணன் குமார் தான் சகஜமாகப் பேசும் நிலையில் இருந்தார்.

✖ சிங்கக்குட்டி பின் தொடர சிம்மத்தின் ராஜ நடை.





✖ ஜயேந்திரரின் ஆனந்தம், ஆனந்தேந்திரரின் அடக்கம்

''சங்கரன் எங்கள் குடும்பத்திலேயே வித்தியாசமானவனாக இருந்தான். சின்ன வயதிலிருந்தே யாரோடும் ஜாஸ்தி பேச மாட்டான். நாங்களெல்லாம் பொன்னேரியில் இருந்தபோது 'ஐந்தாவதோடு எனக்கு இந்தப் படிப்புப் போதும்' என்று அப்பாவோடு கிளம்பிவிட்டான்.

''ஊரில் விவசாயம் பார்த்துக் கொண்டிருந்த அப்பா பெரியவாளின் ஆக்ஞைப்படி போளூரில் வேத பாடசாலை ஆசிரியரானார். ஐந்தாவதை முடித்துக் கொண்டு அப்பாவிடமே சங்கரன் வேதம் சொல்லிக்கொள்ள ஆரம்பித்துவிட்டான். ஏழுவருஷமாகச் சொல்லிக் கொள்கிறான்.

''இதுவரைக்கும் ஒவ்வொரு பரீட்சையிலும் அவன்தான் முதலாவதாக வருவான். தஞ்சாவூர், திருச்சி ஊர்லயெல்லாம் மாநில அளவில் வைத்த வேதப் போட்டிகளில் அவன் தங்க மெடல் வாங்குவான்.

''திடீரென்று போன செவ்வாய்க் கிழமை இங்கேருந்து பெரியவாளோட மெஸேஜ் வந்தது. சங்கரனைத் தன்னுடைய சிஷ்யரா நியமிக்கப் போறதாகவும், ஹைதராபாதுக்குப்போய்பெரியபெரியவாளோட ஆசீர்வாதத்தை வாங்கிண்டு வரணும்னும்சொல்லியனுப்பியிருந்தார். முதல்லே 'திக்'குன்னுலும் அப்புறமா எல்லாருக்கும் சந்தோஷம் தான். ஆனா அம்மாவுக்குத்தான் தாள முடியலே.

''அம்மா, அப்பா ரெண்டு பேரும் சங்கரனை அழைச்சுண்டு ஹைதராபாத்துக்குப் போனாங்க. 'உங்க பிள்ளையை லோக க்ஷேமத்



⌘ பாலசூரியனைப் பெற்றெடுத்த புனிதர்கள்

துக்காக எங்களுக்குக்கொடுக்கிறீங்களா'ன்னு கேட்டாராம் பெரிய பெரியவா. இவா என்ன சொல்ல முடியும்? சரின்னு சொல் விட்டு நமஸ்காரம் பண்ணி யிருக்கா. அப்புறமா இங்க மடத்துக்கு வந்துட்டா.''

சங்கரனின் அப்பா கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் பெரும் இறுக்கம் குடிகொண்டிருந்தது. புத்திர சோகத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருந்தாரா? அல்லது 'இது ஒரு பாக்கியம்' என்று கலங்காத மனமா? எதுவானாலும் இறுகிப்போன முகத்திலிருந்து எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பெற்ற வயிறு மட்டும் நிலை கொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தது. அம்மா, அம்பாலக்ஷ்மியால் ஒரு இடத்தில் நிற்க முடியவில்லை. ஐந்து பிள்ளைகள் என்பதால் ஒரு பிள்ளையை விட்டுக் கொடுத்து விட முடியுமா என்ன? இதைப் பற்றி அவரிடம் கேட்டபோது.

''ஆறு மாசமாவே எங்களுக்குத் தெரியும். இவனுக்குத்தான் அடுத்த பட்டத்துக்கு வர எல்லாத் தகுதிகளும் இருக்குன்னு சொல்லிண்டிருந்தா. நாங்களும் மனசாலே இதுக்குத் தயாராயிட்டோம்தான். ஆனா திடீர்னு இவ்வளவு சீக்கிரம் நடக்கும்னு எதிர்பார்க்கலே. எப்படின்னாலும் என் வயிற்றில் பிறந்தானேன்னு ஒரு பக்கம் பெருமையாத்தான் இருக்கு...''

என்று மெல்லிய குரலில் சொல்லும்போது ஆதங்கத்தை அவரால் மறைக்க முடியவில்லை. இனி நம் மகனை அவர் கூட்டத்தோடு கூட்டமாக நின்றுதானே பார்க்க முடியும்!

இத்தனை கலக்கங்கள், பலவித பேச்சுக்கள், மக்கள் கூட்டத்தின் நெருக்கல், கோஷங்கள் அத்தனைக்கும் நடுவில் கொஞ்சமும் கலங்காமல், தீர்க்கமான கண்களும், சலனமற்ற உறுதியான முகமும், ராஜ கம்பீர நிதானமான நடையும். பந்த பாசங்களை எப்பொழுதோ விட்டு விட்டேனே என்பது போன்ற தோற்றமுமாக—

ஒரு பதினாறு வயதுச் சிறுவனுக்கு இது சாத்தியமா?

எல்லோருக்குமே இது ஒரு ஆச்சரியம் தான். ''எப்பேர்ப்பட்ட செலக்ஷன்! என்ன பிரும்ம தேஜஸ்! ச்ன்னியாச லட்சணம் எப்படிப் பொருந்தி யிருக்கு! பெரியவாளுக்கு இப்படி ஒரு தவ முனிவனைத் தேர்ந்தெடுக்க எப்படித் தோணித்து? சிங்கம் தனக்கு வாரிசா ஒரு சிங்கக் குட்டியைத் தான் செலக்ட் பண்ணியிருக்கு...'' என்றெல்லாம் அபிப்பிராயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

சனிக் கிழமை பித்ரு கர்மாக்களைச் செய்து ஹோமம்வளர்த்துத்தன்பிரம்மச்சர்யஆச்ரமக் கடன்களை முடித்துக் கொண்டு தலையை மழித்துக் கொண்டார் சங்கரன்.


சந்நியாசம் வாங்கிக் கொள்பவர் முன்னிரவு உறங்கக் கூடாது என்ற நியதிப்படி இரவெல்லாம் காயத்ரி ஜபம் ஓதி மறுநாள் புண்ய ஸ்நானம் செய்து, முன்னே எந்தப் பாவம் மிச்சமிருந்தாலும் எல்லாம் தொலையட்டும் என்று சங்கல்ப ஹோமம் வளர்த்து, புரோகிதர்களுக்குத் தட்சிணை கொடுத்து விட்டு சந்நியாசம் வாங்கக்கோயிலுக்குப்புறப் பட்ட அந்தப் பாலகன் முகத்தில் சிறிது சோர்வு இருக்க வேண்டுமே! ஊஹூம்.

⌘ முதல்நாள் நீராடி முடித்து உறங்கா இரவையும் ஜபதபனியானத்தையும் எதிர்நோக்கும் கோலத்தில்



அங்கே ஒரு பால யோகியை நிதர்சனமாகக் காண முடிந்தது.

அதிகாலை வேளையில் காமாட்சியம்மன் குளத்திற்கு சிஷ்யனை அழைத்துச் சென்ற குரு தீர்த்தக் கரையில் சந்நியாசம் தர இருவுளம் கொண்டார். குளத்தில் இடுப்பளவில் நீரில் நின்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார் அந்தப் பால யோகி. பின்னர் மழித்த தலையில் சிறிதே இருந்த முடிகளைத் தன் கையாலேயே பிடுங்கி எறிந்து இந்த உலக பந்தங்களை யெல்லாம் விட்டொழித்



தேன், சந்நியாசம் பெறுபவனுக்குச் சாங்கியங்கள் தேவையில்லை என்று பூணூலை அறுத்து எறிந்தபோது—

எல்லோர் கண்களுமே கலங்கிப் போய் விட்டன. வடித்து வைத்த சிலை போல எந்த உணர்ச்சியும் காட்டாமல் என்னருகில் நின்றிருந்த பாலகனுடைய தந்தை அந்தக் கணம் மட்டும் முகத்தைத் துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

இருட்டுப் பிரியாத அந்த உஷத்கால வேளையில் ஆயிரக் கணக்கானோர் குளத்தங் கரையில் கூடி 'ஜய ஜய சங்கர' என்று கோஷமிட்ட நேரத்தில் அதிர் வேட்டுக்கள் முழங்கின. தீர்த்தமாடிய மடத்து சிஷ்யர் ஒருவர் பெரியவாளிடமிருந்து காவி உடை வாங்கி வந்து பாலகனிடம் தந்தார். பிறகு முறைப்படி காவி உடை அணிவித்தபோது—

குளத்து மீன்கள் அத்தனையும் 'ஜிவ்' என்று துள்ளி விழுந்தது டீ. வி. காமரா ஒளி வெள்ளத்தில் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த இரண்டு கருடன்கள் குளத்து மண்டபத்தைச் சுற்றி வலமாகப் பறந்து ஆசீர்வதித்துவிட்டு நிமிஷமாய் மறைந்து போயின. தொடர்ந்து அதிர்வேட்டுக்கள் முழங்கி காஞ்சி மா நகரையே கிடுகிடுக்க வைத்தன.

கிருஷ்ணமூர்த்தியின் புதல்வன் சங்கரன், சங்கரானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆனார். சிஷ்யனுக்கு குரு உபதேசம் செய்வித்த ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சிஷ்யன் பின்தொடர அம்பாள் சந்நிதியை அடைந்த அழகைக் காணக் கண் கோடி வேண்டும். நீண்ட நாள் தான் தேடிக் கொண்டிருந்த தன்னுடைய குட்டி கிடைத்து விட்டால் சிங்கம் இப்படித்தான் ராஜ நடை போடுமோ? அந்த நடையில்தான் எத்தனை பெருமிதம், எத்தனை ராஜ கம்பீரம்? பசுவைத் தொடரும் கன்றாக, பால சந்நியாசியாகப் பின்னாலேயே வந்தார் இளைய சங்கராச்சாரியார்! ஆதி சங்கரரின் சந்நிதிக்கு முதலில் சென்று குருவும், சிஷ்யரும் வணங்கிவிட்டு, பிறகு காமாட்சியம்மன் கர்ப்பக் கிருகத்துக்குப் போய்த் தொழுதனர். பிறகு இருவருமாக மக்கள் வெள்ளத்தில் நீந்திக் கொண்டு, பூரண கும்ப வரவேற்புடன் ஸ்ரீமடத்துக்குள் பிரவேசித்தவுடன் வைபவம் கோலாகலமாக நிறைவடைந்தது.

''இவர் வரப்போகும் விஞ்ஞான யுகமான அடுத்த நூற்றாண்டில் பீடமேறப் போகிறவர். ஐந்தாம் வகுப்புப் படிப்பும், வேத பாடமும் வைத்துக் கொண்டு கால வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுவாரோ...''

மனுஷ்யர்களுக்கே உரிய சந்தேகத்துடன் முணு முணுத்த ஒருவருடைய அங்கலாய்ப்பையும் தாண்டி—

அந்தப் பாலசூரியனின் தேஜஸ் பொங்கும் களங்கமற்ற முகம்தான் நினைவில் நிற்கிறது. ஞானம் என்பது பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் மட்டும் பெறப்படுவது இல்லை. எதிர் நீச்சலுக்குத் தேவையான வைராக்கிய பலம் மனம் சம்பந்தப்பட்டது என்று அந்த முகம் மௌன அமைதியுடன் கூறுவது போல் தோன்றுகிறது. பாரதத்துக்கே வழிகாட்டியாக, தவ முனிவர்களைத் தந்து, ஆன்மீக ஜீவநதியாக விளங்கி வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் மீண்டும் ஓர் அற்புதத்தைத் தோற்றுவித்திருக்கிறது. பால யோகியின் முகம் எதிர் காலத்தில் உலகெங்கும் ஆன்மீக ஒளி பரப்பவிருக்கிறது.

—மஞ்சுளா ரமேஷ்

புகைப்படங்கள்: பால்ராஜ்

பட்டிக்காட்டுக் குயில்கள்

சில நேரங்களில் மனசு ஈரப் பசையில்லாமல் வறண்டு விடுகிறது.

உள் மனம் பாளம் பாளமாய்ப் பிளந்து விட்டது போன்ற ஒரு பிரமை.

அந்த நேரத்திலெல்லாம் மனத்தைக் காயப்படுத்தாத ஒரு மழை வேண்டியிருக்கிறது.

அந்த நிமிஷங்களில்தான் நாட்டுப் பாடல்களின் தொகுப்புக்குள் விழுந்து நான் தொலைந்து போகிறேன்.

ராஜ சபைகளில் வாசிக்கப்பட்ட சில மலட்டுச் செய்யுள்களை விட — வெயிலில் வேர்வைச் சட்டைகளை அணிந்து உழுது கொண்டிருக்கிறானே அந்த எழுத்தறிவில்லாத கலப்பைப் புலவனின் கவிதை எத்தனையோ மடங்கு இதமாக இருக்கிறது.

தவமாய்த் தவமிருந்து ஒரு தங்க மகனைப் பெற்றுளாம் தாயொருத்தி. இனிமேல்—

''பட்ட மரம் பாலூறும்
பாகற்காய் தேனூறும்
உளுத்த மரம் தான்தழையும்
உத்தமியாள் வாசலிலே''

என்று பாடும் அந்தக் கல்வியறிவில்லாத தாய் கம்பனுக்கு மகளாகிறாள். அவளுக்கோர் ஆசை:

தன் சின்னஞ் சிறு மகனை முன்னே நடக்க விட்டு அவன் நடை பார்க்க வேண்டும்;

நடந்து முடிந்ததும் அவன் தடம் பார்க்க வேண்டும்.

இப்படி ஒரு கனவையும் தன் கர்ப்பத்தோடு அவள் சுமந்து வந்ததுண்டு.

ஆனால் தார்ச் சாலையில் தடம் பார்க்க முடியுமா?

முடியாது.

தடம் பார்ப்பதற்கென்று ஓர் இடம் பார்க்கிறாள்.

''வடக்கே மழைபெய்து
வார்ந்த மணல் ஓடிவர
நடந்துபோ பாலகனே — உன்
நல்ல தடம் நான் பார்க்க.''

புனல் மெழுகிப்போன மணல்தான் அவளது பத்து மாதப் பௌர்ணமி நடந்து வரும் பாதையாகிறது.

அந்தத் தாயின் கோடு தாண்டாத கற்பனைக்குள் நான் கரைந்து போகிறேன்.

''என் பேனாவை நீ கொஞ்சம் தொட்டுத் தரமாட்டாயா தாயே'' என்று முகம் தெரியாதவளிடம் முறையிடுகிறேன்.

ஊரறிய விழிக்காமல் உள் மனசுக்குள் உறங்கும் ஆசைகளும் பொத்தி வைத்த

காதலும் மாறு வேஷம் போட்டல்லவா வெளியேற வேண்டியிருக்கிறது!

''தும்புச் செருப்பு மாட்டி
தொழுதிறக்கப் போற மன்னா!
தும்பைப் பூவேட்டியிலே
துவண்ட மஞ்சள் நான்தானா?''

அடடே, அந்தக் கேள்விக்குள்தான் எத்தனை காதல் திரண்டிருக்கிறது!

''மணிமேகலை''யில் சோலையின் அடர்த்தியைச் சொல்ல வந்த புலவன் ''வெயில் நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்'' என்று பிரமிக்கிறான்.

அதாவது, அந்தச் சோலையில் குயில் நுழைய முடியுமே தவிர வெயில் நுழைய முடியாது என்று வியக்கிறான்.

ஆனால் ஒரு நாட்டுப்புறக் கவிஞன் ஒரே வரியில் சாத்தனாரின் கற்பனைக் கதவைச் சாத்திவிடுகிறான்.

சாத்தனார் சோலைக்குள் நுழைவதற்குக் குயிலுக்கு அனுமதி கொடுக்கிறார்.

ஆனால் நாட்டுப்புறக் கவிஞனோ ஓர் ஈகூட நுழைய முடியாது என்கிறான்.

காரணம் — அடர்த்தியான அந்தச் சோலையில்,

''ஈப்புகுந்தால் இறகொடியும்''

என்று எச்சரிக்கிறான்.

இது என்ன ஒரு புலவனுக்கு உழவன் விட்ட சவாலா?

புழுதிக்குள் புதைந்துபோன பல வாழ்க்கைகள்; நிறைவேறாத ஆசைகளின் நியாயமான கொந்தளிப்புகள்; முளைத்து முளைத்துப் பூமிக்குள்ளே கருகிப்போன பல காதல்கள்—

இவைகளையெல்லாம் பதிவு செய்து வைத்திருக்கும் பத்திரங்களே நாட்டுப் பாடல்கள்.

அவற்றை நாடோடிப் பாடல்கள் என்று மரியாதை தெரியாமல் சொன்னவர்கள் மறைந்து விட்டார்கள்.

புலவர்கள் எல்லோரும் ராஜ சபைகளுக்குப் போய்விட்டதால் தங்களைப் பாடுவதற்கு ஆளில்லாத உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே பாடிக் கொண்டார்கள்.

அவைதாம் நாட்டுப் பாடல்கள்.

ஒதுக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல; ஒதுக்கப்பட்டவர்களின் இலக்கியங்களும் கௌரவம் பெறவேண்டிய காலமிது.

என்னைப் பொறுத்தவரையில் என் பேனாவின் நுனியில் மாட்டப்பட்டிருக்கும் முள்ளைவிடவும், ஒரு கலப்பையின் முனையில் மாட்டப்பட்டிருக்கும் கொழுவே உயர்ந்ததென்று கூறுவேன்.

புகைப்படம்: உத்ரா





கலைஞர் கடிதம்

அன்புள்ள,

கல்கி ஆசிரியருக்கு வணக்கம்.

வாழ்த்துக்கள்.

கல்கி ஜூன் 5-ஆம் நாள் இதழில் ''நெஞ்சுக்கு நீதி'' என்று தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தைப் படித்தேன். அறுபதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் எனக்குத் தாங்கள் கூறியுள்ள வாழ்த்துக்களுக்கும், பாராட்டுக்களுக்கும் இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலையங்கத்தின் முதல் பகுதியில் ''சர்க்காரியா கமிஷன் தீர்ப்புப்படி பல அநீதிகளை இழைத்துள்ள கருணாநிதி'' எனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சர்க்காரியா கமிஷன் எந்த நேரத்தில் எதற்காக அமைக்கப்பட்டது என்பது தாங்கள் அறியாதது அல்ல. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் பிரசாரத்துக்காகத் தமிழகம் வந்த மொரார்ஜி தேசாய், ஜெகஜீவன்ராம், சாந்தி பூஷன், அசோக்மேத்தா போன்ற தலைவர்கள் எல்லாம் கருணாநிதி மீது போடப்பட்ட வழக்குகளும், சர்க்காரியா கமிஷனும் அரசியல் பழிவாங்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை எனக் கூறியதைத் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். இருந்தாலும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். 1972-ம் ஆண்டு என்மீதும், அமைச்சர்கள் நாவலர், ப. உ. சண்முகம், மாதவன், சத்தியவாணி முத்து, மற்றும் சில தி. மு. கழகத் தலைவர்கள் மீதும் திரு எம். ஜி. ஆர். அவர்களால் பிரதமரிடம் அளிக்கப்பட்ட புகார்கள் 1975ம் ஆண்டு நெருக்கடி காலப் பிரகடனத்தை தி. மு. கழகம் வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியும், கூட்டங்கள் நடத்தியும் குரல் கொடுத்த காரணத்தால் உயிர் பெற்றெழுந்து சர்க்காரியா கமிஷனுக்கு உள்ளாக்கப்பட்டன என்பதும், நெருக்கடி நிலைக்கு எதிராக இருந்த திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்ற பெரிய தலைவர்களின் விடுதலைக்காகப் போராடியதால் ஆட்சியையும் இழந்தது தி. மு. கழகம் என்பதையும் தங்களுக்குக் கவனமூட்டுவது என்னுடைய கடமையாகும்.

தங்கள் அன்புள்ள,

மு. கருணாநிதி

''ஆட்டோ ரிக்ஷா ரிப்பேர் செய்யறவர் கிட்ட என் ஸ்கூட்டரை ரிப்பேருக்குக் கொடுத்தது தப்பாயிடுச்சு.''

''ஏன்?''

''ஸ்கூட்டரின் மீட்டர் ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு இருநூறு கிலோ மீட்டர் ஓடினதாகக் கணக்குக் காட்டுது.''


—ராமுசாமி






ஸ்வல் பர்மாவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி. சமீபத்தில் பர்மாவில் உள்ள கராத்தே குழு இவருக்கு கறுப்பு பெல்ட் அளித்தது. இந்தியத் தூதுவர்களில் கராத்தேயில் கறுப்பு பெல்ட் பெற்றவர் இவர் ஒருவர்தான்.

—கணபதி சுப்பிரமணியம்





தமிழக அரசுக்கு எதிராக பதினான்கு கட்சிகள் கிளர்ச்சி!



1983 ஜூன் 12
ருத்ரோத்காரி வைகாசி 29
மலர் : 41 இதழ் : 46



கல்கி

பஞ்சாபில் பிரதமர்

பிரதமரின் பஞ்சாப் விஜயத்தின்போது சில பெண்கள் பட்டாசு வெடித்துக் கூட்டத்தில் கலவரம் விளைவிக்க முயன்றனர். ஆனால் பிரதமரின் இந்தத் திக்விஜயம் வெற்றுப் பட்டாசாகிவிடவில்லை. அவருக்கு நேரம் இருந்து இன்னும் இரண்டு தடவை பஞ்சாப் சென்று வந்தால் அங்கே பிரிவினை சக்திகளின் ஆர்ப்பாட்டங்கள் நனைந்த பட்டாசாகப் பிசுபிசுத்துப் போய்விடும் என்று கணிக்கும் அளவில் பெரும் வெற்றியாக அமைந்தது.

இத்தனைக்கும் ஒரே ஒரு நாள்தான் பஞ்சாபுக்கென்று ஒதுக்கியிருந்தார் பிரதமர். மிகக் குறைந்த முன்னறிவிப்புடன் வந்து சேர்ந்தார். அவர் வருகையை விளம்பரப்படுத்தப் போதிய அவகாசமிருக்கவில்லை. இருப்பினும் அவரைக் காணவும் அவர் பேச்சைக் கேட்கவும் பெருந்திரளான மக்கள், குறிப்பாகச் சீக்கியர் திரண்டதானது பொதுவில் பஞ்சாபியர் மதப் பூசல்களையும் பிரிவினை முயற்சிகளையும் விரும்பவில்லை என்பதைத் தெளிவாக்கியது.

கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் தவறில்லை; ஆனால் அவை நிறைவேற வன்முறைக் கிளர்ச்சிகளைத் தூண்டி விடுவது ஜனநாயகப் பண்பாகாது. மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவது ஒன்றே வழி. கோரிக்கைகளைப் பரிசீலிக்கவும் பேச்சு வார்த்தைகளை நடத்தவும் தயாராக இருப்பதாக மத்திய அரசு பலமுறை பலவிதமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் மதப் பூசலுக்கோ பிரிவினை முயற்சிக்கோ வித்திடும் எந்தக் கோரிக்கையையும் அரசு ஏற்க முடியாது. அகாலிகளின் நிபந்தனைகள் பல ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டன: ஆனால் வேறு சிலவற்றில் இதர அண்டை மாநிலங்களின் நலன்கள் சம்பந்தப்பட்டுள்ளன. இவ்விஷயங்களில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இரு தரப்பினருக்கும் வேண்டும்.

பஞ்சாபியர் — சீக்கியரும் சரி, ஹிந்துக்களும் சரி — தேச பக்தி மிக்கவர்கள். நாட்டின் பாதுகாப்புக்கும் தொழில் விவசாய வளர்ச்சிக்கும் சீக்கியர் ஆற்றியுள்ள பணி மகத்தானது. அப்படிப்பட்டவர்கள் சுயநலமிக்க சில தலைவர்களின் தவறான வழிகாட்டலில் ஏமாந்து திசை தப்பிப் போய்விட மாட்டார்கள்.

பிரதமரின் பஞ்சாப் விஜயம் அங்கே உட்பூசல்களால் நலிவுற்றிருக்கும் இ. காங்கிரஸுக்கும் புத்துயிர் அளித்திருக்கும். அம்மாநிலத்தில் இ. காங்கிரஸின் பல்வேறு கோஷ்டிகளும் தேச ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டுள்ள இதர மிதவாதிகளும் சுயநலன், கட்சி நலன் ஆகியவற்றை மறந்து ஒருங்கிணைந்து செயல்பட்டால் பிரிவினை வாதமும் மதவெறியும் வன்முறையும் பஞ்சாபிலிருந்து ஓட்டம் பிடிக்கும். இத்தகைய ஓர் அணி, இந்த ஒரே அடிப்படை நோக்கத்தை உத்தேசித்தேனும் பிரதமர் தலைமையில் உருவானால் மக்கள் ஆதரவை மிக எளிதாகப் பெற்று பஞ்சாபைப் பிரிவினைவாதிகளிடமிருந்து காப்பாற்றிவிடலாம். இதைச் செய்யாது போனால் விரும்பத் தகாத விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அப்போது பிரிவினைச் சக்திகளைவிடப் பிரிந்திருந்த சக்திகள்தாம் அதிகமான தூஷணைக்கு உள்ளாகும்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

அத்தியாயம் 22

கார் மலைப் பாதையில் இரைச்சலுடன் வளைந்து திரும்பியது. உயரம் ஏற ஏறக் குளிர்க் காற்று வெயில் உக்கிரத்தைக் குறைப்பதை உணர முடிந்தது.

விஸ்வநாதன் ஒரு வளைவில் காரைச் சற்று நிறுத்தச் சொன்னான். கீழே இறங்கினான். தாரிணியும் அவனுடன் இறங்கினாள். அவனுக்கு நெருக்கமாய் நின்று பள்ளத்தாக்கை வியப்புடன் பார்த்தாள்.

''காடு இப்படித்தான் இருக்கும் இல்லேன்னு... குட்டிகளா... கீழே இறங்கி வாங்கோ. காடு பார்க்கலாம்.''

குழந்தைகளும் ஆரவாரத்துடன் இறங்கின.

திருப்பதி போக வேண்டும். இரண்டு நாட்கள் விடுமுறை வேண்டும் என்று கேட்ட போது ஆபீலே பிரைவேட் டாக்ஸி அமர்த்திக் கொடுத்தது. 'இந்தக் கம்பெனி லையசன் ஆபீஸர் பஸ்ஸிலே இடிபட்டுக் கொண்டு போவதா? கார்ல போ மேன். என்ஜாய்' என்று தட்டிக் கொடுத்தது. விஸ்வநாதன் ஆபீஸ் இப்படித்தான் திடும் திடுமென்று விட்டுக் கொடுக்கும். கட்டியணைக்கும். இது எல்லா தனியார் கம்பெனிக்கும் உண்டான குணம். அயிரை விட்டு வரால் வாங்கும் குணம்.

விஸ்வநாதன் தாரிணியிடம் கார் வசதி பற்றிச் சொன்னதும் துள்ளிக் குதித்தாள். விடிகாலை வீட்டு வாசலில் வந்து சலாம் செய்த கார்டிரைவருக்குக் காப்பி போட்டுக் கொடுத்தாள்.

அமர ஜீவிதம் ஸ்வாமி அமுத வாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்த சாதகம்
முரளி மோகனம் ஸ்வாமி அகரமர்த்தனம்
கீத போதகம் ஸ்ரீகிருஷ்ண மந்திரம்

அடிக்குரலில் குரல் நாண் அதிர அரைக் கண் மூடி விஸ்வநாதன் பாடினான். துள்ளிக் கொண்டிருந்த குழந்தைகள் பளிச்சென்று அடங்கி வியப்புடன் தகப்பனைப் பார்த்தன. தாரிணி குனிந்து விஸ்வநாதன் கண் கலங்கி இருப்பதைப் பார்த்தாள்.

சட்டென்று நெருங்கி அவன் கைகளைப் பிணைத்துக் கொண்டாள். வளைவில் காடு பார்க்க இறங்கினாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். குழந்தைகள் கைப்பிடிச் சுவரில் எட்டிப் பள்ளத்தாக்கைப் பார்த்துக் கூவிக் கொண்டிருந்தன.

''ஏதாவது கவலையான்னு உங்களுக்கு.''

''இல்லையே தாரிணி.''

''ஏன் கண் கலங்கிடுத்து.''

''இனிமையான பாட்டு இல்லையா. நெகிழ்ச்சியா இருந்தது.''

''எப்பவும் முகத்தில் ஒரு சோகம் இருக்கே.''

''என் லட்சணமே அல்லோ தான்.''

''இல்லே. ஏதோ பெரிய வருத்தம் இருக்குறாப்பல படறது எனக்கு.''

''பெரிசா ஒண்ணும் இல்லே.''

''அப்போ... சிறிசா உண்டா?''

''வருத்தம் இல்லாதவா யாரு தாரிணி?''

''ஏன்... நான் இருக்கேனே. கை நெறைய சம்பாதிக்கிற புருஷன். ஆரோக்கிய

இரும்பு குதிரைகள்

—பாலகுமாரன்

குழந்தைகள் வழி முழுதும் நர்ஸரி ரைம்ஸும் சினிமாப் பாட்டுமாய்ப் பாடிக்கொண்டு வந்தன. டிரைவரை மாமா என்று அழைத்தன. அவனையும் பாடச் சொல்லி வற்புறுத்தின. ''அப்பாரு பாடட்டும். அப்பால நான் பாடறேன்''.

முன் சீட்டில் நின்றபடி விஸ்வநாதன் சட்டையை இழுத்து பாடுப்பா என்று கெஞ்சின.

மான குழந்தைகள். ஊர் கோடியில வீடு. பிக்கல் பிடுங்கல் இல்லாத உறவு. நான் சௌக்கியமாத்தான் இருக்கேன். கர்வமாக் கூட இருக்கேன். எப்பவாவது சிடுசிடுப்பேன். இது டெம்பரரி. மத்தபடி நீங்களோ குழந்தைகளோ வருத்தப்பட்டா எனக்குத் தாங்காதுன்னு.''

''உனக்கு இது போதும்னு பட்டுக்கு தாரிணி.''

''உங்களுக்குப் போறதில்லையா?''

''என் சக்தியெல்லாம் வீணாக்கறேனோன்னு படறது.''

''எப்படி?''

''ஆபீஸே என்னை அதிகமா முழுங்கிடற தோன்னு படறது.''

''கஷ்டப்பட்டாத்தானே நாலு காசு சம்பாதிக்க முடியும். என்னைக்கோ பட்ட கஷ்டத்தாலேதானே இந்தக் கார் வசதி போக்குவரத்து எல்லாம்....''

''காரோ சம்பளமோ, இன்கிரிமென்டோ நிறைவு தரலே தாரிணி எனக்கு. இன்னும் என்னவோ தேவைப்படறது.''

''சொல்றேன்னு கோச்சுக்க வேண்டாம்' இன்னும் பூமில கால் ஊனிப் பாக்கலே நீங்க. ரெண்டு பொண் குழந்தைகள் நமக்கு. திரும்பிப் பார்க்கறதுக்குள்ளே பளிச்சுன்னு தாவணி சுத்திண்டு நிக்கும். இவ்விக்குப் பாத்திரம் பண்டமா, நகையா பணமா சேத்தாத்தான் அவளுக்குக் கல்யாணம்



கார்த்தி நல்லபடியா நடக்கும். நானைக்கே மூத்தவளுக்குக் கல்யாணம்னு சொல்லுங்கோ. நான் ரெடி. அத்தனை பித்தளை, வெள்ளி பாத்திரம் சேர்த்திருக்கேன்.''

விஸ்தநாதன் சிரித்தான். ''நான் பிராக்டிக்கலா இல்லேன்னு சொல்றயா.''

''குறையாச் சொல்லலே. இடும்னு எங்கயோ நழுவிப் போயிடறேன். சாதாரணமா இருக்க மாட்டேங்கறேன்.''

''உனக்கும் எனக்கும் கொஞ்சம் வித்தியாசம் உண்டு தாரிணி. இந்த மலேல இருக்கற ஸ்வாமி உனக்கு என்னமாப் படறது?''

''கேட்டதைக் கொடுக்கிற தெய்வம். பிரார்த்தனை பண்ணிண்டா பலிக்கிற எடம். வரப்பிரசாதி.''

''எனக்கு இந்த மலேயே ஸ்வாமியாப் படறது. காலம் காலமா தொங்கிண்டிருக்கிற பாறையைப் பார்க்கறபோது ஹான்னு இருக்கு. அந்தப் பாறை எதிர்க்க நான், என் முயற்சி, வியக்தி ஒன்னுமே யில்லேன்னு படறது. அப்படிப் பாறையா காலம் காலமா நிக்க மாட்டோமான்னு படறது. காலம் காலமா நிக்கற காரியம் பண்ண மாட்டோமான்னு ஆதங்கம் வரது. ஆபீஸ்ல வேலே பண்ணிப் பொண்களுக்குக் கல்யாணம் பண்ணி... இதை எல்லாரும்தான் பண்றா... இதையே பண்ணணுமான்னு படறது.''

''நீங்க ரொம்ப லேட். ரெண்டு பொண் குழந்தைகளை வெச்சுண்டு பாறையா இருக்க ஆசைப்படறது பாவம்.''

''வாஸ்தவம் தாரிணி வாஸ்தவம். நான் அல்லாடற இடம் இதுதான். நீயும் குழந்தைகளும் ஒரு பக்கம். எனக்குள்ள இருக்கிற ஆதங்கம் ஒரு பக்கம். நடுவுல தராசுமுள்ளா கிடந்து அல்லாடறேன்.''

''உங்க கவிதைகளை யெல்லாம் நான் பாராட்டலேன்னு கோபமா?''

''ச்சே... சே... எனக்குக் கோபமே வராது தாரிணி. அது எப்பவோ போயிடுத்து.''

இன்றைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அன்றைக்குக் காங்கிரசில் இருந்து விலகக் காரணம் ''நேதாஜி சிலே'' தானும். இத்தகவலே சமீபத்தில் ராமநாதபுரம் மாவட்டம் மறவர் கரிசல் குளத்தில் நேதாஜி,பசும்பொன் தேவர் ஆகியோரது சிலேகள் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய முதலமைச்சர் எம். ஜி. ஆர். கூறினர்.

—கமுதி திராவிடமணி



''எல்லாருக்குமா கவிதை, கதை, பாட்டுன்னு சடுபாடு இருக்கும். இது தெரியாதவாளும் இருப்பாளோன்னோ.''

''பேஷா.''

''இது தெரிஞ்சவாளுக்கு எழுதுங்கோ. உக்காந்து பேசுங்கோ. அன்னிக்கு ஒரு கெழவர் வந்தாரே... அந்த மாதிரி யாராவது வருவா. படிச்சுக் காட்டுங்கோ. ஆனு...''

''சொல்லு தாரிணி.''

''இதெல்லாம் தெரிலேன்னு என்னே ஒதுக்கிடாதீங்கோன்னு.''

''ச்சேச்சே.''

''என்னே விட்டு நகர்ந்துடாதீங்கோ.''

''தாரிணி.''

''முரடாப் பேசறேனே தவிர உள்ள ரொம்பப் பூஞ்ஜை. உங்களைத் தவிர வேற ஒருத்தரையும் தெரியாது எனக்கு.''

''என்னம்மா பேசற.''

''கண்சொருக எங்கேயோ யோசனை பண்ணிண்டு நீங்க உக்காந்திருக்கச்சே... இது என் புருஷனே இல்லேயோன்னு தோன்றது. நாம ரொம்பப் பாரமோ இந்த மனுஷனுக்குன்னு தோணறது.''

''நெவர் தாரிணி நெவர்.''

''குழந்தைகள் குதிச்சுண்டு வர்றபோது கண் கலங்க அடிக் குரல்ல ஸ்வாமிப் பாட்டுப் பாடினு வயத்தைக் கலக்கறது. நழுவ விட்டு விடுவமோன்னு பயம் வர்றது. இறுக்கப் பிடிச்சுக்கத் தோன்றது.''

''ஐயம் ஸாரி தாரிணி.''

''நான் ஸாரி சொல்றேன்னு. நான்தான் ஸாரி சொல்லணும். உங்க உசரத்துக்கு என்னுல வர முடியாது. எனக்கு நன்னுத் தெரியும். எத்தனை உசரம் வேணும்ப் போங்க. அதைத் தடுக்கக் கூடாதுன்னு தெரியும். ஆனு நம்மாத்திலே காலே ஊனி வெச்சுக்கணும் நீங்க.''

''சஞ்ய பங்கஜம் ஸ்வாமி அம்ய புஞ்பகம்
சர்வ ரட்சகம் ஸ்வாமி தர்ம தத்துவம்
ராக பந்தனம் ஸ்வாமி ராஸ விலகம்
கீத போதகம் ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்''

மனசுக்குள் முழங்கிய எம். எஸ். வி.யின் குரல் விஸ்வநாதன் செவிப் பறையில் மோதிற்று. மூச்சு இறைத்தது. மறுபடி கண்கள் செருகின. அந்தக் குளிர்க் காற்றுக்கு நடுவிலும் நெற்றி வியர்த்தது.

''இது நம்ப குழந்தைகள். இதுகள் நன்னு இருக்கணும். நல்லபடியா வாழ்க்கைப்படணும். இது ரொம்ப முக்கியம். ஸ்வாமி பெருமாளேன்னு அடுத்தது நமக்கு ஒரு பையன் பொறக்கட்டும். பெத்து இறக்கின மூணு நிமிஷம் உங்க கைல கொடுத்துட்றேன். உங்க இஷ்டப்படி அவனே வளர்த்துக்கோங்கோ. கவிதையோ, கதையோ பாட்டோ கூத்தோ சொல்லிக் குடுங்கோ. மனசைக் கொஞ்சம் லேசாக்கிக்கணும்னு நீங்க. எங்க எடத்துக்குக் கீழிறங்கி வரணும்.''

விஸ்வநாதன் தாரிணியை மெல்ல அணைத்துக் கொண்டான். தாரிணியுடன் காருக்குள் ஏறினன். பேச்சுக் களைப்பில் சுருண்டு மடியில் படுத்துக் கொண்ட தாரிணியின்

மெத்தென்ற மார்பில் கை பதிய இறுக்கிக் கொண்டான்.

எதிர் காற்று குழந்தை மாதிரி நெஞ்சை மிதித்தது. முகமெங்கும் சில்லென்று முத்தம் கொடுத்தது. முன்கூட்டிப் பதிவுசெய்த இடத்தில் குளித்து, உடுத்தி, சிற்றுண்டி முடித்து சிறப்புத் தரிசன டிக்கெட் வாங்கி வரிசையில் மெல்ல நகர்ந்து நிமிர்ந்தபோது அந்த நெடிய உருவம் நெஞ்சில் சரக்கென்று தைக்கக் கண்ணில் ஜலம் பொங்கிற்று.

கடரும் ஆழியும் எந்தி நெற்றித் திருமண்ணே குறுஞ் சிரிப்பாய் உடல் முழுவதுமாய் வருட அம்மா சொல்லிக் கொடுத்த பாசுரம் அனைத்தும் மனசுள் வழிந்தது. கால் துவளத் துவங்கியது. சூழல் மறந்து போயிற்று. மறுபடி தனிமையின் உக்கிரம் பொங்கிற்று.

கம்பமதயானை கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்
வேண்டேன்
எம்பெருமான் ஈசன் எழில்வேங்கட மலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே


யானை கழுத்தில் உட்கார்ந்திருப்பது கம்பீரமாய் சுகமாய் கீழே இருப்பவனுக்குப் படும் ஆனால் உட்காருகிறவனுக்கல்லவா தெரியும் அந்த வேதனை. அந்த பயம். ஆபீஸ் என்பது சம்பளம், போனஸ், கார் வசதி மட்டுமில்லை தாரிணி. அது யானை. கம்பமத யானை. அந்த மிருகத்தின் ஒவ்வொரு அசைவும் உட்கார்ந்திருக்கிறவனைப் பயம் காட்டும். பிரியமில்லாமல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிற வேதனை புரிந்தவனுக்கு நரகம். வேஷமே வாழ்க்கையாகி விட்டால்... என் கால்களும் பூமியில்தான் இருக்கின்றன தாரிணி! நான் கொஞ்சம் உயரம். என் பார்வையில் தொலைவு அதிகம். என் உயரம் உன்னை உதாசீனப்படுத்துவதற்கல்ல. என் பார்வைக்குள் நீயும் இருக்கிறாய் மனைவியே. உன்னைப் பிரிவது உண்டா? நீயற்று இருப்பது முடியுமா? இறையே இந்தக் குழந்தையை எனக்கு மணம் முடித்தாய். இதன் நெஞ்சு மிதிக்காமல் நான் நடக்க வரம் தா. எவருக்கும் இடைஞ்சல் இல்லாமல் என் மனம் வளர வழி தா. மறந்தும் தீங்கு செய்யா குணம் பெருக வரம் தா.

அந்தக் காட்டேஜைச் சுற்றிச் சுற்றிக் குழந்தைகள் ஓடின. இரட்டைப் படுக்கையில் குதித்து ஆடின. மலை முழுதும் மேகம் போர்த்தி மறைவதை வேடிக்கை பார்த்தன. மின் விளக்கில் தகதகக்கும் விமானத்தை நோக்கிக் கும்பிட்டன. உணவு முடித்துப் போர்வைக்குள் களைப்புடன் சுருண்டு தூங்கின. இருட்டு, மலையை அழுத்தமாய் அணைத்துக் கொண்டது.

''எனக்கும் பாசுரமெல்லாம் சொல்லிக் குடுத்திருக்கா. ஆனா நீங்க பாடறச்சே வித்தியாசமாத் தெரியறது. உங்க கண்ணுல தகதகன்னு என்னமோ படறது.''

''ஒரு தகதகவும் இல்லே. இருட்ல விளக்கு வெளிச்சம் கண்ணுல பட்டுத் தெறிக்கும்.''

''ம்ம். நான் அதைச் சொல்லலே.''



நம்பினால் நம்புங்கள்! ஆமை 'உஸ்' என்று சீறும்! உறுமும்! குரைக்கும்!
ஆமைகளில் 133 வகைகள் உண்டு.
—வசந்தகுமார்

''என்னைப் பயமுறுத்தாதே தாரிணி. நீ சொல்ற மாதிரியெல்லாம் பெரிசா பக்குவம் வரலே எனக்கு. பாட்டு, ராகம், தமிழ் வார்த்தை இதெல்லாம் கொஞ்சம் நெகிழ்த்தும் என்னை.''

''நான் வழிலே பேசினது வருத்தமில்லையே.''

''துளிக்கூட வருத்தமில்லே.''

''ரொம்ப சந்தோஷமா இருக்குன்னு எனக்கு இன்னிக்கு. ஊர் விட்டு ஊர் வர்றது. ஸ்வாமி தரிசனம், ஜிலீர்னு இந்த எடம். மனசு விட்டுப் பேசினது, மடில படுத்து இருக்கிறது... ரொம்ப நாளைக்கப்புறம் பாரம் இறங்கின மாதிரி லேசா இருக்கு. ஏதாவது பாடுங்களேன்.''

''என்ன பாடணும்?''

''ஆண்டாள் பாசுரம் அடிக்கடி பாடுங்கோ.''

''யம்மாடி. நல்ல வேளை. கீழே இறங்கினான்னு கட்டளை போட்டு சினிமா பாட்டா கேப்பியோன்னு நெனைச்சேன்.''

''ச்சீ... இங்க வந்து சினிமாப் பாட்டு எதுக்கு?''

''ஏன் உனக்கு சினிமாப் பாட்டு பிடிக்காதா?''

''பிடிக்கும். ஆனா இது... இந்த ஆண்டாள் பாட்டு இன்னும் குழைவா இருக்கு.''

''ஏது....?''

''நீங்க அடிக்கடி பாடுவேளே...''

கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்
திருக்குமோ
மருப்பொசித்தமாதவன்தன் வாய்ச்சுவையும்
நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி
வெண் சங்கே

விஸ்வநாதன் மனசுள் ஆண்டாளானான். ப்ரேமையுடன் பாடினான். தாரிணி எழுந்து அவனை அணைத்துக் கொண்டாள். என் புருஷன், என் புருஷன் என்று சந்தோஷத்துடன் இறுக்கிக் கொண்டாள். வாய்ச் சுவையும், வாசனையும் தெரிந்தாள். இருட்டில் மெல்லிய வெளிச்சத்தில் அவனை உற்றுப் பார்த்தாள்.

(தொடரும்)

வெயில், விஜயவாடா வெயில்!

நாலு கட்சிகள் சேர்ந்தே
நாடாள முடியாமல் போனது
தெரியாதா உமக்கு, ராமாராவ்காரு?
பதினாறு கட்சிகளையும்
எத்தால் இணைப்பீர்?
எத்தே சொல்லும்.





சபாஷ்!

பாங்க் மானேஜர்
கோலியில்
பூக்காரி கனகா
கொடுத்தது —
அப்பு.



நுழைவு வரி—

தி.மு.க.விலிருந்து
அ.தி.மு.க.வுக்குள் நுழைந்த
மாயூரம் கிட்டப்பாவுக்கு
மட்டும் வரி இல்லையாமே?



காணோம்:

கனகபுரா தேர்தலுக்குமுன்
பயங்கரப்பாவாயிருந்து, பின்
பதுங்குரப்பாவான இன்னூர்
உண்மைப் பெயர்: பங்காரப்பா.

பத்மபூஷணுக்குப் பிறகு:

டெல்லியில் இன்னும்
'குளிர்' விட்டபாடில்லை போலும்.
கட்சி ஆரம்பிக்கிறதாகக்
கமல் எங்கே சொன்னார்?
'பாடக்'கும் கொடுத்துப்
பத்தாயிரமும் கொடுத்திருக்கிறார்களே!



-சாருகேசி

அக்டோபரில் உலகம்

அழியப்போகிறதாமே?

○ நேமா ஆனந்ததீர்த்தன், சென்னை-4

? இலக்கியப் பத்திரிகைகள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொள்ளும் சில பத்திரிகைகளுக்கு வர்த்தக நோக்கு கிடையாதா? அவை நஷ்டத்தில் நடக்கின்றனவா?

! அளவான பிரதிகளை அச்சிட்டு வளமான இலக்கியப் பணி ஆற்றுவது சாத்தியமே. வர்த்தக நோக்கு இருந்தே ஆகவேண்டும்; ஆனால் லாப நோக்குடன் நடத்த முடியாது. பொதுவாக இது போன்ற பத்திரிகைகளை நடத்துபவர்கள் வருவாய்க்கு வேறு ஏற்பாடுகளைச் செய்து கொள்வார்கள்.

○ வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்

? கல்கியில் எழுதும் எழுத்தாளர்களுக்குக் கட்டுப்பாடு ஏதும் விதிப்பதுண்டா?

! எழுத்தாளருக்கு எந்த விதக் கட்டுப்பாடும் இடையாது. ஆனால் கல்கி பத்திரிகைக்கென்று சில கொள்கைகள் உண்டு. அதைப் பெரும்பான்மையான எழுத்தாளர்கள் நன்கு அறிவார்கள். அந்த அளவுக்குக் கல்கிக்கு எழுதும்போது தங்களைத் தாங்களே கட்டுப் படுத்திக் கொள்கிறார்கள்.

○ கு. கணேசன், சென்னை-15

? உமது எடைக்கு எடை கேள்விகளை அனுப்பலாம் என்றிருக்கிறேன். பதிலளிப்பீர்களா?

! அளிப்பேன், ஏதேனும் ஒரு கேள்விக்கு... ஆனால் என் எடை என்ன என்பது தெரிந்தால் இப்படி ஒரு காரியம் செய்ய நீங்கள் துணிவீர்களா, சந்தேகமே!

○ ஏ. ஜி. சுபாஷ், சென்னை-31

? அக்டோபர் 5, 6ல் உலகம் அழியப் போகிறதாமே?

! அக்டோபர் 5, 6ல் மட்டுமல்ல, உலகம் அழியக் கூடிய அபாயம் ஒவ்வொரு நாளுமே இருக்கிறது. ருஷ்ய அதிபரோ அல்லது அமெரிக்க அதிபரோ ஒரு ஸ்விட்சைத் தட்ட வேண்டியதுதான்...

○ எஸ். முத்துக்குமாரசாமி, தென்காசி

? பெண்கள் கடவுள் செய்த இரண்டாவது தவறு என்று நீட்ஷே என்ற அறிஞர் கூறுகிறார். முதல் தவறு எதுவாக இருக்கும்?

! ஆண்களாக இருக்கும்.

○ ஒ. எஸ். உதயசேகர், தக்கலை

? தெலுங்கு கங்கா நீர்த் திட்டம் தமிழ் நாட்டுக்கு நிரந்தரமாகத் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமா?

! சென்னை வளர்ந்து வரும் வேகத்தில் அதற்கே காணாது; நீர் தமிழ்நாட்டைப் பற்றிப் பேசப் போய்விட்டீரே!

○ கே. ஆர். ஜனார்த்தனன், தஞ்சை ★

? பல லட்சம் செலவழித்துத் தெலுங்கு கங்கா துவக்க விழா தேவைதானா?

! மின்வெட்டும் வறட்சியும் நீடிக்கும் வரை அரசாங்கத்தின் ஆடம்பரச் செலவுடன் கூடிய விழா ஏதும் இராது என்று முதல்வர் கூறி, அச்செய்தி அச்சான மை காயு முன்னர் இப்படி ஒரு விழா எடுத்ததைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம்; அதற்குத் தரப்படும் சமாதானம் அதைவிடக் கேவலமாக இருக்கிறது. முழுச் செலவையும் அரசாங்கமே செய்யவில்லையாம். பல தனியார் நிறுவனங்களும் வரவேற்பு வளைவுகள் போட ஒத்துழைத்தனவாம்! ஆக அரசு வீண் செலவு செய்வது போதாதென்று தனியார் நிறுவனங்களும் வீண் செலவு செய்ய ஊக்குவிக்கப்படுகின்றன. அந்த நிறுவனங்கள் பதிலுக்கு அரசிடம் ஏதும் சலுகை எதிர்பார்க்காமலா இருக்கும்?

○ வி. பட்டம்மாள், ஸ்ரீரங்கம்

? தெலுங்கு கங்கை திட்டம் எம். ஜி. ஆரின் சாதனையா? அல்லது என்.டி. ஆரின் கருணையா?

! இரண்டுமில்லை. தமிழகத்தின் செலவில் ஆந்திராவில் நீர்ப்பாசன வசதி செய்து கொண்ட அளவில் என். டி. ஆரின் சாமர்த்தியம். மாற்றுக் கட்சி அரசாங்கங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்டுத்திக் கொண்ட அளவில் இந்திராவின் சாணக்கியம். கருணை காட்ட வேண்டியதும் இந்திராதான். திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசுகளிடம் ஏது பணம்?

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி

? தெலுங்கு கங்கா விழாவில் யாருடைய பேச்சு தங்கள் கவனத்தைக் கவர்ந்தது?

! பேசியவர்களை விட மூன்றாவது வரிசையில் பேசாமல் அமர்ந்திருந்த ஜெயலலிதாதான் அதிகமாகப் பலர் கவனத்தையும் கவர்ந்தார். ரகசியமாக ஒரு விஷயம்: பிரதமர் பேச்சை ஜெயலலிதாதான் மொழிபெயர்ப்பதாய் இருந்ததாம். பிரதமர் மறுத்து, கட்சி சார்பற்ற ஒருவரை அழைக்கச் சொன்னாராம். குழந்தைசாமி வந்து சேர்ந்தாராம்... உஷ்... வதந்திகளைப் பரப்பாதீர்கள்!

○ இ. நரசிம்மன், திருவையாறு

? எதிர்க் கட்சியினர் எவரும் இல்லாமலே நுழைவு வரி மசோதா நிறைவேறியது குறித்து...

! அதன் விளைவுதான் இப்போது அது திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கிறது. 'வரு

நீங்கள் கேட்டவை தராசு

வாய்க்கு வழி சொல்லுங்கள்' என்று வர்த்தகர்களையே முதல்வர் கேட்பது நல்ல தமாஷ்!

○ ஆனந்தா, கோபிச்செட்டிப்பாளையம்

? 'தெலுங்கு கங்கா' என்பதை 'திராவிட கங்கா' என்று அழைப்போம் என்கிறாரே ஜெயலலிதா?

! 'தட்சிண திரிவேணி' என்று என்.டி.ஆர். சூட்டியபெயரைவிடசிறப்பானதாக வேறு எனக்குத் தோன்றவில்லை. சென்னைக்கு நீர் தரும் மூன்று மாநிலங்களுக்கும் மரியாதை செலுத்தியதாகும்.

○ மயில்வாகனன், கும்மிடிபூண்டி

? பாங்குகளில் கொள்ளை, கொலை அதிகரித்து வருகின்றனவே?

! கவனித்துப் பார்த்தால் கொள்ளையர்களின் துணிவை விடப் பறிகொடுத்தவர்களின் அஜாக்கிரதைதான் காரணம் என விளங்கும். கர்நாடகா வங்கியில் ஓர் அதிகாரி தாம் வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய எஃகு அறைச் சாவியை மேஜை இழுப்பறையிலேயே வைத்துச் செல்லும் தவறான பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிராவிட்டால் கொலை கொள்ளை இரண்டுமே நடந்திராது.

○ ஆர். இளங்கோ, ஏந்தல்

? கொஞ்சம்கூட நியாயம் இல்லாத செயல் எது?

! எப்படி இருந்தாலும் மக்கள் குடிக்கத்தான் செய்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுவதும் கட்டுப்படுத்த முடியாமல் அதிகரித்திருக்கிறது என்று காரணம் கூறி மதுவிலக்கை ரத்துச் செய்ததுதான் பெரிய அநியாயம். சமீபத்திய செய்தி: ''தமிழகத்தில் 5 இடங்களில் சோதனை நடத்தியதில் 8½ கிலோ போதைப் பொருள் சிக்கியது. அபின், கஞ்சா, எல். எஸ். டி. மாத்திரை போன்றவற்றைக் கள்ளத்தனமாக வைத்திருப்பது, வியாபாரம் செய்வது, பயன்படுத்துவது ஆகியன நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. புற்றீசல் போல் பீடாக் கடைகள் புறப்பட்டுள்ளன. போதை மருந்து பீடாவில் தடவப்படுகிறது.—''இவற்றை யெல்லாம் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் இவற்றைத் தடுக்கும் சட்டங்களை அரசு ரத்து செய்துவிடும் என்று எதிர்பார்க்க வேண்டியதுதானா? இப்படியே போனால்...

○ கே. லோகநாதன், அரக்கோணம்

? கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முந்தியது தமிழ் மொழி என்று சொல்லும் இக்காலத்துத் தமிழனின் நிலை என்ன?

! பழம் பெருமை பேசும் நிலை.

○ சோமனா ரமணி, மின்பாறை

? பத்திரிகைகள் விலை உயர்ந்த அளவுக்கு எழுத்தாளர்களின் சன்மானம் உயரவில்லையே?

! பத்திரிகை விலை உயர்வால் எழுத்தாளரோ பத்திரிகை நிறுவனமோ பயன் அடைய முடியா அளவில் அரசு பத்திரிகைத் தாளின் விலையை உயர்த்தி விடுகிறதே!


○ முல்லை அயூப்கான், மூலக்கரைப்பட்டி

? பாக் அதிபர் ஜியா அரசியல் கட்சி ஆரம்பிப்பாரா?

! சர்வாதிகார ஆட்சி அவர் கைப்பிடியில் சிக்கி இருக்க கட்சி தொடங்க அவருக்கு அவசியம் என்ன வந்தது?

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

கே. ஆர். ஜனார்த்தனன்,
44, கிருஷ்ணன் கோயில் 3ம் தெரு,
மானம்புச்சாவடி,
தஞ்சாவூர்-613001





எண்ணங்கள்

நற்செயல்கள் தீச்செயல்கள் அனைத்துக்கும் அடிப்படை எண்ணங்களே. சாதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முதல் படி எண்ணங்கள்தாம். எண்ணங்களே செயல்களாக முகிழ்கின்றன. எனவே எண்ணங்கள் சிறப்பானவையாக அமைய வேண்டுவது அவசியம்.

எண்ணங்கள் மனத்தில் ஏற்படக்கூடிய எழுச்சிகள். அவை பலவித காரணங்களால் எழும். பல ஜன்மாக்களில் செய்த அல்லது அனுபவித்ததன் பலனாக அதன் வாசனையாக எழக்கூடிய எண்ணங்கள் சில. தற்பொழுது நம்முடைய சூழ்நிலையை—கல்வி, கேள்வி, சகவாசம் முதலியவற்றை—ஒட்டி ஏற்படக்கூடியவை சில. சினிமா, ரேடியோ, டெலிவிஷன், பத்திரிகைகள் முதலியவைகளைப் பார்ப்பதினாலோ அல்லது கேட்பதினாலோ ஓரளவு மனத்தில் குழப்பங்கள் ஏற்படலாம். எண்ணங்களும் மாறலாம். சில சமயம் வெறும் பொழுது போக்கான பிரயோஜனமற்றதான பலவித எண்ணங்கள் தோன்றும். சில எண்ணங்கள் நல்ல காரியங்களை முடித்துக் கொடுக்கும். சில எண்ணங்கள் விபரீதமான காரியங்களை முடித்துக் கொடுக்கும். சில எண்ணங்கள் எந்தவித காரியங்களையும் முடித்துக் கொடுக்காமல் மனத்தைக் குழப்பும். ஆனால் எண்ணங்கள் இல்லாமல் எந்த ஒரு செயலும் ஏற்படாது.

ஒரு மனிதனுடைய வாழ்க்கை துன்பம் இல்லாமல் வியாதி இல்லாமல் சந்தோஷமாக இருப்பதற்கு நல்ல எண்ணங்கள் தேவை. நல்ல எண்ணங்கள் இருந்தால் உடல் வியாதி மட்டுமின்றி மன வியாதிகளும் குறையும் என சாஸ்திரங்களும் விஞ்ஞானமும் கூறுகின்றன.

நல்ல எண்ணங்கள் வளருவதற்கு நல்ல உணவுகளை உட்கொள்ள வேண்டும். உணவின் ரசங்கள் உடலுக்குள் ரத்த மாமிசங்கள்வரை சென்று கட்டமளிப்பவை. ஆரோக்கிய உணவு எண்ணங்களையும் செயல்களையும் ஆரோக்கியமாய் வைத்திருக்கும். மூன்று வேளை உண்டாலும் முழு வயிறு நிறைய சாப்பிடக் கூடாது. அரை வயிறு நிரம்பியதும் நிறுத்திவிட வேண்டும். கறிகாய்கள் தானியங்கள், பால் பழம் போன்ற சாத்வீக உணவு உட்கொள்வதன் மூலம் சாத்வீக எண்ணங்கள் வளரும். அதிலும் இறைவனுக்கு நிவேதனம் செய்ததும் அதிதிகள், சன்யாசிகள் முதலியவர்களுக்குப் போட்டதின் மிச்சமுமான சாத்வீக உணவு மிகவும் புனிதமானது.

சாத்வீக எண்ணம் என்றால் தானும் துன்பப்படாமல், அடுத்தவனுக்கும் துன்பம் வருவதைச் சிந்திக்காமல் இருப்பது. எல்லாவற்றிலும் நல்லதை மட்டும் எடுத்துக்கொள்வது. கடவுள் சிந்தனையோடு இருப்பது போன்றவை சாத்வீக எண்ணம். இது மேலோங்கினால் நம்முடைய சொந்த வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் நாட்டிலுள்ள எல்லா மக்களின் வாழ்க்கையிலும் அமைதியும் மகிழ்ச்சியும் மேலோங்கி நிற்கும். நல்ல எண்ணங்கள் வளர்ந்தால் நல்ல காரியங்கள் நிறைய நடக்கும். நாடு வளம் பெறும்.

'கோபம் வந்தால் ஒன்று முதல் நூறுவரை எண்ணு' என்று கூறக் கேட்டிருக்கிறோம். இது மேல் நாட்டுப் பழக்கம். இதைவிடச் சிறந்தது கடவுளை ஸ்மரிப்பது. பஞ்சாட்சரம் சொல்லலாம். ராம ஜபம் செய்யலாம். தீய எண்ணங்களை விரட்டிவிடும். எப்படி நெருப்பை நீர் அணைக்குமோ அப்படி தீய எண்ணங்களைத் தூய எண்ணங்கள் வெற்றி கொள்ள வேண்டும்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



20

தாரா லாகவமாக ஸ்டியரிங்கை ஒடித்து முனை திரும்பியதும் தொலைவில் உத்திர ஸ்வாமி மலைக் குன்று பிரும்மாண்டமாய்த் தெரிந்தது. செம்மண்ணும் கோபியும் பளிச்சென்று வானை நோக்கி எழும்பின... வானை எட்டும் மார்க்கம் நாங்கள் என்று ரேகை காட்டின.

வேர்களை அடையாளம் கண்ட மாதிரி நாடி நரம்பெல்லாம் சிலிர்த்தெழுந்தன. கோயில் கிட்ட நெருங்க நெருங்க கார்த்திக் உணர்ச்சிகளின் விளிம்பில் நின்றான். மானசீகமாய்ப் படிகளைக் கடந்து பிள்ளையார் சன்னதிக்குள் நுழைந்து, கறுத்த, சுருண்ட, கட்டுக் குடுமியில் பஞ்ச கச்ச வேஷ்டியில் தான் பிரவகிக்கும் கவர்ச்சியை, அல்லது தேஜஸ்ஸை உணராதவனாய்ப் புன்னகையுடன் தீபாராதனை காட்டும் கணேசனுடன் ஒன்றி, மீண்டும் படி ஏறி, மூலவர் சன்னிதியில் ஓதுவாரின்

"புனைந்துரையேன் பொய் புகலேன்
சத்தியஞ் சொல்கின்றேன்"

எனும் குரலில் மயங்கி, அப்பாவின் பக்திப் பரவசத்தில் தன்னையறியாமல் இணைந்து விபூதி சம்புடத்தை ஏந்தி....

"ஹாய் கார்த்திக்!"

அவன் சட்டென்று சுயநினைவுக்குவந்தான்.

அவன் வீட்டிற்குப் போக வேண்டிய பாதையின் முன் வண்டி நின்றிருந்தது.

"இறங்கல்லியா? என்ன யோசனை?"

தாராவின் குரலும் முகமும் மென்மையாகத் தெரிந்தன. நிறம் அதிக வெளுப்பாகி யிருந்தது. கன்னங்களில் புதிய ரோஜாக்கள் மலர்ந்திருந்தன.

இப்பொழுதெல்லாம் புடவை அணிகிறாள். நளினமான பின்னீஸ் ஸில்க்கில் ஆளை அசர அடித்தாள் இன்று. புதிதாக ஒரு பெருமிதம் அவனுள் எழ அவன் மெல்லப் புன்னகை செய்து.

"வீடு வந்ததைக் கவனிக்கல்லே, உன்னையே பார்த்திண்டிருந்ததிலே...." என்றான்.

அவள் விளையாட்டாக அவன் காதைத் திருகினாள். "சும்மா ரீல் விடாதே. உன் மனசு கோவிலுக்குள்ளே போயிருந்தது!"

"எப்படித் தெரியும்?"

"முகத்திலே தெரிஞ்சது!"

அவன் சிரித்தான்.

"'ஹலோ'வா?"

"கிட்டத் தட்ட அது மாதிரி ஏதோ ஒண்ணு!"

கார் ஓசை கேட்டு அத்தை வந்துவிட்டாள் வாசலுக்கு. தாராவைப் பார்த்து அவள் முகத்தில் வியப்பும் மலர்ச்சியும் தோன்றுவதை அவன் ஒரு பிடிபடாத பெருமையுடன் கவனித்தான். அத்தைக்குப் பின்னால் கோமதி, அவளைத் தொடர்ந்து கசங்கிய சின்னாளப் பட்டில் அம்மா. எல்லார் முகமும் ஸ்விட்சைத் தட்டினாற்போல் மலர்ந்து போயின.

அத்தை தாராவின் கைகளை ஆசையுடன் பற்றிக் கொண்டாள்.



''யாருக்கும் சொல்லாமெ குழந்தையைப் பெத்துண்டுடலாம்னு பார்க்கறேளா ரெண்டு பேரும்?''

அவனுக்குத்தான் கூச்சத்தில் பேச வரா மல் வாயடைத்தது.



தாரா மெல்லிய குரலில் சொன்னாள்: ''நாத்துக்குத் தொண்ணூறு குழந்தைகள் அப் படித்தான் பிறக்கிறது அத்தை!''

''மிச்சப் பத்துக் குழந்தைகள்ளே ஒண் ணுன்னு இது!''

அவனுள் ஒரு சின்னச் சிலிர்ப்பேற்பட்டது. எப்படிப்பட்ட அந்தஸ்து இது! அப்பாவும் கணேசனும் வீட்டில் இருந்தார்கள். கணே சன் தனது வழக்கமான பரிவும் புன்னகையு மாகத் தோளைப் பற்றி ''வா'' என்றான்.

அப்பாவின் ''சம்''மில் வழக்கத்தை விட அதிகமான நெருக்கம் தெரிந்தது. அத்தை யும், அம்மாவும் தாராவைச் சமையல் அறைக் குள் அழைத்துப்போய் ரகசியமாகக் குசலம்

விசாரித்தார்கள். எட்ட நின்று வேடிக்கை பார்த்த கோமதியின் கண்களில் ஆர்வமா ஏக்கமா என்று புரியாததொருபாவம் இருந்தது.

அப்பா எழுந்தார்.

''நான் கோவிலுக்குக் கிளம்பறேன். நாழி யாயிடுத்து'' என்றார் பொதுவாக.

''அவளை ஜாக்கிரதையாப்பார்த்துக்கோ'' என்றார் அவளைப் பார்த்து. ''ரொம்ப அலைய வேண்டாம்னு சொல்லு. கார் எல்லாம் ஓட்ட றளே பரவாயில்லையா?''

அவனுக்குச் சிரிப்புடன் கூடவே மனசு நெகிழ்ந்து போயிற்று. அவருடைய வார்த்தைகளுக்கு ஸ்பரிசத்தின் சக்தி இருந்தது. எதிர்பாராமல் தடவிக் கொடுக்கப்பட்ட மாதிரி.....

''காமு, நேத்து முறுக்கோ தேன்குழலோ பண்ணேன் போலிருக்கே. கொடுக்கலியே?''

''தந்துண்டேயிருக்கேன்!''

''வரேண்டா!''

''சரிப்பா!''

கணேசனின் மௌனப் புன்னகை நாபியிலிருந்து கிளம்பினாற் போல் இருந்தது. காருண்யமும், ப்ரியமும், பூரிப்பும் கலந்த ஒன்றாக.... அவன் தோளை அணைத்து.

''ரொம்ப சந்தோஷம் கார்த்திக்'' என்றான் மிருதுவாக.

இவனுள் ஏதேனும் குறை இருக்குமோ என்கிற ஒரு விநாடி சம்சயம் தோன்றிய வேகத்தில் தயங்கி நின்றது.

'அவன் பிறவி ஞானி!'

அது சாத்தியமா? இவனுக்குக் குறைகளே இருக்காதா? குறைகளைக் கவனிக்க விருப்பமில்லாமல் இருக்கிறானா அல்லது அவற்றையே நிறைவாக நினைக்கிறானா?

''லாட்டரியில் பத்து லட்சம் பரிசு விழுந்ததற்காக இப்படி நடந்துக்கக் கூடாது!''

''என்ன பண்ணினார்?''

''தன் வீட்டு டி.வி. ஆன்டெனாவுக்குத் தங்க முலாம் பூசியிருக்கிறார்!''

—பி. ஆர். கே.



''நானும் கிளம்பறேன். இரண்டு அபிஷேகம் இருக்கு இன்னிக்கு. கோவிலுக்கு வறியா?''

''வரேன்!'' என்றான் அவன் ஒரு உந்துவேகத்தில். ''நீயும் மன்னியும் வீட்டுக்கு வாங்களேன் அண்ணா!''

''வரோம்!''

அதே சிரிப்பு. ஆட்கொள்ளும் சிரிப்பு. ஒரு விநாடி உடம்பு சிலிர்த்து நின்றது.

''தாராவுக்கு என்ன பிடிக்கும்னு சொல்லுங்கோ!''

அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். கோமதி நின்றிருந்தாள் வெகுளிச் சிரிப்புடன்.

மைச்சிமிழைத் திறந்தாற்போல் அகன்ற கரிய விழிகளை இன்னும் பெரிதாக்கி...

''எது என்ன பிடிக்கும்?'' என்றான் அவன் குழப்பத்துடன்.

''சாப்பிட எது பிடிக்கும்? அவளைக் கேட்டா எல்லாம் பிடிக்கும்கறா!''

''அவ அனேகமா சரியாத்தான் சொல்லுவா!''

அடக்க முடியாத சிரிப்புடன் தாரா, ''கார்த்திக், இதைப் பார்!'' என்றாள்.

எவர்சில்வர் தட்டில் முறுக்கும் திரட்டுப்பாலும், வழக்கமான வடையும், சர்க்கரைப் பொங்கலும் இருந்தன.

''எல்லாம் எனக்கு!'' என்றாள் சின்னப் பெண்ணைப் போல். ''இந்த மாதிரி உபசாரம் கிடைச்சதானா எத்தனை குழந்தை வேணும்னாலும் பெத்துக்கறேன்!''

''இரண்டுக்கு மேலே உபசாரம் பண்ண மாட்டோம்!'' என்றாள் அத்தை.

தாரா அத்தையை அணைத்துக் கொண்டு சிரித்தபோது அவனுக்கு மனசு லேசாயிற்று. கொஞ்ச நாட்களாகத் தாரா சுரத்தில்லாமல் இருக்கும் நெருடல் சமாதானமாயிற்று.

''கோவிலுக்கு வரியா கார்த்திக்?''

''வரேன். கணேசன் கிட்ட வரதாச் சொல்லியிருக்கேன். நீ வரியா தாரா?''

''வரேன்!'' என்றாள் அவள் மெல்லிய குரலில். ''சாமிக்காக இல்லே, உனக்காக!''

அத்தையின் காதில் விழுந்திருக்குமோ என்ற சங்கடத்தை மறைத்துக் கொண்டு அவன் கேட்டான்.

''இவ படியேறலாமா அத்தே?''

அவள் புருபுருவென்று கோபத்துடன் முன்னால் நடந்தாள்.

''இவளொரு போர்!'' என்றாள் அத்தையைப் பார்த்து.

''யாருக்குமே இதுக்கு முன்னாடி குழந்தை பிறக்காத மாதிரி ஃபஸ் பண்றான்!''

அத்தை பதில் ஏதும் பேசாமல் நடக்க ஆரம்பித்தாள்.

விஸ்தாரமான படிகளை ஏறும்போது கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு கட்டிட வேலை நடப்பது தெரிந்தது. தலையில் ஒரு மஞ்சள் நிற டர்பனில் ஒரு சர்தார்ஜி மேஸ்திரி ஆட்களை, அநேகமாய்ப் பெண்களை விரட்டிக் கொண்டிருந்தான்.

''ஆறரை மணி ஆகிறது. இன்னும் வேலை வாங்கிண்டிருக்கான்பாத்தியா அந்த ரோக்!''

என்முன் தாரா. ''அதப் பார் அந்தப் பெண்ணை. தலையிலே சுமையை வெச்சிண்டு ஏணி மேலே!''

அவன் அவள் காட்டிய திசையைப் பார்த்தான். ஒரு நிறை மாத கர்ப்பிணி, ஒரு கையால் தலைச் சுமையைப் பாலன்ஸ் செய்து கொண்டு மறு கையால் ஏணியைப் பிடித்து ஏறி....

தாரா வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தாள்.

''அவளும் வசதியுள்ளவளா இருந்தா அவ புருஷனும் அவளைச் சுத்தி ஃபஸ் பண்ணியிருப்பான். தன் குழந்தைதான் உலகத்து முதல் குழந்தைன்னு நினைச்சு!''

''ஓ, கமான்!''

''எதுக்குச் சொல்ல வரேன்னா, நமக்கு வசதி அதிகமாக ஆக, நமக்காக நாம எவ்வளவு பயப்படறோம்னு ஆச்சரியமாயில்லே? பயப்படறதுக்கு நேரம் இருக்கிறதினாலே பயப்படறோம்! பயம்கறது நமக்கு ஒரு ஆடம்பரமான பொழுதுபோக்கு! அந்தப் பெண்ணுக்கு நேரமில்லாததாலே பயப்படலே. பயந்தா சாப்பாடு கிடைக்காது! பசிங்கற ஒரே பயம்தான் அவளுக்கு. அதை அந்த மேஸ்திரி எப்படி எக்ஸ்ப்ளாய்ட் பண்றான் பாரு!''

அத்தையின் எதிரில் அவள் அப்படிப் படபடப்பது அவனுக்குக் கூச்சத்தை ஏற்படுத்திற்று. திருப்புகழ் பாடியபடி படியேறும் அத்தையுடன் போவது எத்தனை பாதுகாப்பாக இருக்கும்! இவள் எதிர்பாராத நேரத்தில் முகமூடியைக் கிழிக்கிற மாதிரி அவனை ஏன் சங்கடத்துக்குள்ளாக்குகிறாள்!

மூலவர் சன்னிதிக்குப் போகும் பாதி வழியில் அவள் சொன்னாள்:

''நீங்க ரெண்டு பேரும் மேலே போயிட்டு வாங்கோ. நான் இங்கேயே உட்கார்ந்திருக்கேன்.''

''ஓ.கே'' என்று கனிவுடன் அவள் முதுகைத் தட்டி அவன் அத்தையுடன் நடந்தான். மேலே சென்று வெளிப் பிராகாரத்தில் இளைப்பாறச் சற்று நின்றபோது இருட்ட ஆரம்பித்திருந்தது. கீழே சுற்றிலும் விரிந்திருந்த டில்லி மாநகரத்து வீதிகளில் விளக்குகள் நட்சத்திரப் பூக்களாய்க் கண் சிமிட்டின. பழைமையும், புதுமையும், நேற்றும் இன்றும் கைகோத்த கனவுலகமாய் அது எழுப்பிய வாகிரியில் அவன் அத்தையிடம் வெகு நாட்களுக்கப்புறம் இங்கு சேர்ந்து நிற்கிற நெகிழ்ச்சியில் சொன்னான், ஏதோ மன்னிப்புக் கேட்கிறவன் போல—

''அவளைப் புரிஞ்சுக்கிறது கொஞ்சம் சிரமம் அத்தே!''

அத்தை திடுக்கிட்டு,

''யாரை?'' என்றாள்.

''தாராவை!''

அத்தை சிரித்தாள்.

''நன்னாயிருக்கு. அவளைவிட ஸ்படிகமா மனசிருக்கிற பெண்ணை நா பார்த்ததில்லே!''

''அவ பேச்சு உங்களைக் குழப்புமோ, எரிச்சல் படுத்துமோன்னு எனக்குக் கவலை!''



அப்பா: அடே ரேடியோவை என்னடா பண்ணினே. பாடலே?....ம்.

மகன்: இரண்டு பேண்டு ரேடியோவுக்கு லைசென்ஸ் தேவையில்லேனு விளம்பரம் வந்திருந்தது. அதனால நம்ம ரேடியோவிலே இருந்த நாலு பேண்டிலே இரண்டு பேண்டைக் கழட்டிட்டேம்பா!

—பி. சங்கர்

''அவளுடைய இடத்திலே நான் பிறந்திருந்தேன்னா நானும் அப்படித்தான் பேசியிருப்பேன்! அவளுடைய பேச்சு உன்னைத்தான் குழப்பறது. உன்னைத்தான் எரிச்சல் படுத்தறது.''

அவன் லேசாக அதிர்ந்தான். அத்தையிடமிருந்து தன்னால் ஏன் முகமூடி அணிந்து மறைத்துக் கொள்ள முடியவில்லை என்று ஆச்சரியமேற்பட்டது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் சிரித்தான்.

''என்ன அத்தை! அவ பேச்செல்லாம் கேட்டுட்டுத்தான் கல்யாணம் பண்ணின்டேன்!''

''அதெல்லாம் சரிதான். அவ மாறலே இல்லே!''

''நான் மாறிட்டேன் என்கிறேளா?''

அத்தை இதற்கு என்ன பதில் சொல்வாளோ என்று கொஞ்சம் கவலை ஏற்பட்டது.

அத்தை அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் டில்லியின் விளக்குகளைத் தீவிரமாக ஆராய்ந்தாள். மெல்ல அவன் கையைப் பற்றிப் புன்னகை புரிந்தாள். ''எனக்கு உன்னைப் பத்தித்தான் கவலைடா கார்த்திக்!''

குரலின் குழைவில் மெல்லிய விசனம் இழையோடியது.

''என்னைப் பத்தி எதுக்கு அத்தே கவலை?''

''திரிசங்குவிலே நிக்கறவாளைப் பத்திக் கவலைப்படாமெ என்ன செய்யறது?''

தனக்குள் ஏற்பட்ட வியப்பை மறைத்துக் கொண்டு அவன் சிரித்தான்.

''பேச ஆள் கிடைக்காம கற்பனை அதிகமாயிடுத்து உங்களுக்கு. நான் நன்னா கால் பதிஞ்ச பூமியிலேதான் நிக்கறேன். அதுவும் உங்க தயவாலே.''

வெகு நாட்களுக்கு அத்தையின் வார்த்தைகள் ஞாபகத்தில் நின்றன. ஆபீஸ் ஃபைல்களைப் பார்க்கும் வேகத்துக்கு நடுவில் பார்ட்டிகளில் விஸ்கிக்கும், உதட்டோரப் பேச்சுக்கும் நடுவில் — தாராவுடன் சல்லாபிக்கும், சர்ச்சிக்கும் தருணங்களுக்கு நடுவில் — நட்ட நடுவில் திடும் என்று நின்றன. அவனை அந்தரத்தில நிறுத்தினதுபோல்பிரமை எழுப்பின.

நாட்கள் நழுவிக் கொண்டிருந்தன. விரலிடுக்கில் சரியும் ஆற்று மணலாய்...

ஒரு நாள் லோபோவுடன் அவருடைய அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது அவர் யதேச்சையாகச் சொல்வது போல் சொன்னார்.



மனைவி: நான் இறந்து விட்டால் கமலாவையே திருமணம் செய்துகொள்ளுங்கள்.

கணவன்: அடடா! நான் ஏற்கனவே கமலாவுக்கு வாக்குக் கொடுத்து விட்டேனே!

—எம். சிவானந்தம்

''நேற்று தாராவைச் சந்தித்தேன். சொன்னாளா?''

அவன் வியப்புடன், ''இல்லையே?'' என்றான். ''அவளுக்கு ஆறுயிரம் வேலைகள். சொல்ல மறந்திருப்பாள்.''

அவருடைய முகத்தில் மெல்லிய யோசனைக் கோடுகள் தெரிந்தன.

''நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். இன்னும் சில நாட்களில் குழந்தை பிறந்து விடும்போல் இருக்கிறது. இந்த நிலையில் அவள் ஏன் அலைகிறாள் இப்படி சங்க வேலை அது இது என்று?''

இவருக்கெப்படி விவரம் தெரியும் என்கிற ஆச்சரியத்துடன் அவன் சொன்னான்.

''அவள் சொன்னால் கேட்க மாட்டாள். சங்க வேலையை எந்தக் காரணத்துக்காகவும் ஒதுக்கி வைக்க மாட்டாள்.''

''உடம்பு முடியாவிட்டால் கூடவா?''

''முடிகிற வரைக்கும்தான். ஏதாவது சொன்னால், 'பின்னே பெறுவது அப்படி என்ன, அதிசய சமாசாரமா இந்தியாவில்' என்கிறாள்.''

அவர் புருவத்தை உயர்த்திச் சிரித்தார். பிறகு மறுபடி யோசனையுடன் அவனைப் பார்த்தார்.

''எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், அவள் சார்ந்திருக்கும் சங்கம் இடதுசாரி க்ரூப்பைச் சேர்ந்தது. நமக்கு, முக்கியமாக உனக்கு ஏதேனும் சங்கடம் ஏற்படலாம்.''

அவன் திடுக்கிட்டு அவரைப் பார்த்துப் பிறகு சமாளித்துக் கொண்டு சிரித்தான்.

''நீங்கள் அனாவசியத்துக்குக் கவலைப் படுகிறீர்கள். அந்த வேலையை அவள் ஒரு சமூக சேவையாகச் செய்கிறாள். ஏழைத் தொழிலாளப் பெண்மணிகளிடம் அவளுக்கு சுவாபாவிகமாக ஒரு காருண்யம் இருக்கிறது. கட்சி வேலையாக இதை நிச்சயம் அவள் செய்யவில்லை....''

மேஜை மேலிருந்த கண்ணாடி பேப்பர் வெயிட்டை உருட்டியபடி லோபோ அவனைப் பார்த்துச் சிரித்தார்.

''ஹௌ நேய்வ் யூ ஆர்! நீயும் உன் மனைவியும் தனித் தனி நபர்கள் என்று நீ சொல்லிக் கொண்டாலும் சமூகம் உங்கள் இருவரையும் சேர்த்துத்தான்எடைபோடும். தனியார் துறையிலே முக்கியமான பொறுப்பு வகிக்கும் உன்னை, உன் மனைவியின் நடவடிக்கைகள் நிச்சயம் பாதிக்கும். இடதுசாரிக் கழகத்து சங்கத்தில் வேலை செய்பவள் இடதுசாரி யில்லை என்று நீ சொன்னால் மற்றவர்கள் நம்புவார்களா?''

அவனுக்குச் சொரேல் என்றது. அதற்குப் பிறகு வேலையில் புத்தி போகாமல் மனக் குழம்பிற்று. யோசிக்க யோசிக்க லோபோ சொல்வதுவாஸ்தவம் என்கிற எண்ணமும் அதன் விளைவாகத் தாராவின் மேல் சொல்லத் தெரியாத ஆத்திரமும் ஏற்பட்டன.

இவள் ஏன் மற்ற பெண்கள் போல் இல்லை? இவள்தான் ஏழை இந்தியாவைப் புனர் உத்தாரணம் செய்யப் போகிறாளா? கர்ப்பமாக இருக்கும் நேரத்திலாவது பேசாமல் இருந்தால் என்ன? தன்னுடைய நடவடிக்கை அவனை எப்படிப் பாதிக்கும் என்கிற எண்ணம் அவளுக்குத் துளியாவது இருக்குமா?

அவளுக்குத் தெரியாவிட்டால் இன்று நாமாகப் புரிய வைக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். அவளுடன் பேச வேண்டியதை மனசில் பலமாக ஒத்திகை பார்த்துக் கொண்டு அவன் கிளம்புகையில் அவளது சங்கத்திலிருந்து டெலிபோனில் செய்தி வந்தது. அவனைத் திக்குமுக்காட வைத்து மோகத்தில் மிதக்கச் செய்தது. சற்று முன் மனத்தில் கிளம்பியிருந்த கோபம் வந்த வேகத்துடன் மறைய, அவன் மூல்சந்த் ஆஸ்பத்திரியை நோக்கி இறக்கை முளைத்தாற்போல் புதிய சக்தியுடன் விரைந்தான். (தொடரும்)

அசல் க்ளூகோன்-டி ®

ஒன்றே ஒன்று தான் உண்டு.

அதனைத் தயாரிப்போர் க்ளாக்ஸோ.

வழக்கமான பச்சை
உறையின் மேலே
வெள்ளையில் அச்சிட்ட
க்ளூகோன்-டி ® பெயர்
இருக்கிறதா பாருங்கள்.



மட்டமான போலிகள் பலவுறதும், க்ளாக்ஸோ நிறுவனத் தயாரிப்பான அசல் க்ளூகோன்-டி யினை நீங்கள் வாங்குவது முக்கியம். இல்லையெனில், போலிகள் மூலம் உங்கள் குடும்ப உடல்நலத்திற்கே பேராபத்து வரலாம். க்ளாக்ஸோ நிறுவனத்தின், முற்றிலும் நம்பிக்கைக்குரிய தயாரிப்பாகும் க்ளூகோன்-டி; வைட்டமின் D_2, பாஸ்பரஸ், கால்ஷியம் ஆகியன செறிந்த தூய க்ளூகோஸ் பவுடர் அடங்கியது. தங்களுக்குத் தேவையான போது சக்திபெற லட்சக் கணக்கானோர் அருந்துவது இது.

க்ளூகோன்-டி தயாரிப்போர், க்ளாக்ஸோ — பலவகை உணவுப் பண்டங்களுக்கும், உயிர்காக்கும் மருந்துகளுக்கும் புகழ்பெற்ற நிறுவனம். வாங்கும் க்ளூகோன்-டி பேக்கெட் அசல்தானா எனப் பார்த்து வாங்குங்கள்.


க்ளூகோன்-டி ®

சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.

க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.

HTB-GLL-7027-TL

® டிரேடுமார்க்



✕ ஏராளமான பொதுமக்கள் கருத்துக்கு விரோதமாக ஆடவல்லான் ஆலயம் அரசின் பிடிப்பில் போக முயற்சிகள் நடக்கின்றன.

சிதம்பர ரகசியம்

சி. பி. ஸ்ரீதர்

சிதம்பர ரகசியங்களை அம்பலப்படுத்துகிறார் கட்டுரை ஆசிரியர். உங்கள் ஊரைப் பற்றி இதேபோல் நகைச்சுவை ததும்ப எழுத முடியுமா பாருங்களேன்!

தில்லைத் திருத்தலம் கொசுத் தொல்லைகளின் பிறப்பிடம். தென் ஆர்க்காடு மாவட்டத்தின் புண்ணிய நகரமாம் சிதம்பரம் நுண்ணியகொசுக்களின் உறைவிடம். ஆடியதால் யானைக்கால் வருமென்பார்கள். திருக்கூத்தன் ஆடும் ஆட்டத்தைப் பார்த்ததனால் யானைக்கால் வந்தவர்கள் ஏராளம். மலேரியா ஒழிப்புத்துறையைக்கண்டுபிடிக்கப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களாலும் முடியாது. கொசு மருந்து என்ன ஆகிறதோ தெரியாது. சம்பள தினத்தன்று அந்தத் துறையின் ஊழியர்களையாவது தரிசிக்கலாம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதன் முறையாகப் புதை சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்பட்டது இந்த ஊரில்தான். அதனால்தானோ என்னவோ சாக்கடைக் குழாய்கள் துருப்பிடித்து குடிநீர்க் குழாய்களுடன் ''கலப்பு மணம்'' புரிந்துள்ளது. இதனால் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் குடிநீர்க் குழாய் மூலம் திரும்ப வந்து ''சுழன்றும் நீர் பின்னது உலகம்'' என்னும் தத்துவத்தை நிரூபிக்கிறது. அதோடு மட்டுமல்ல. ''ஆறில்லாத ஊர் பாழ்'' என்றார்கள் முன்னோர்கள். ஆறையே பாழாக்கும் ஊர் எங்கள் ஊரே. சிதம்பரம் நகருக்குள் ஓடும் பாலமான் ஆற்றில் பொது மக்கள் குளிக்கும் துறையிலேயே சாக்கடைக் குழாய்களைக் கொண்டு வந்து ஆற்றில் கலந்து ஆற்றையும் எங்கள் ஆரோக்கியத்தையும் ஒருசேரக் கெடுக்கும் அற்புதத்தைக் காணலாம். ஆனால் ஒரு விஷயத்தில் நகராட்சியைப் பாராட்டத்தான் வேண்டும். சாக்கடை நீரை இரண்டு பிரிவாகப் பிரித்து ஒரு பிரிவை ஆற்றிலும் மறு பிரிவை நகராட்சித் திடலாகிய அண்ணா கலையரங்கம் என்ற மைதானத்திலும்கொண்டு விடுகிறது. இதன் அருகேதான் துப்புரவுத் தொழிலாளர்கள் குடியிருக்கின்றனர்! என்னே பாரபட்சமற்ற தன்மை!

✕ பாலமான் ஆற்றின் மக்களுக்கு உபயோகப்படும் ஒரே படித்துறை அருகில் கழிவு நீர் கலக்குமிடம்.



நகராட்சிச் சிப்பந்திகளுக்கு இயற்கையாகவே அலட்சிய குணம் உண்டா அல்லது மக்கள் பிரதிநிதிகள் இல்லாத குறையா என்பது ஆராய்ச்சிக்குரியது. எங்கள் நகராட்சி அலட்சியப்படுத்தாத ஒரேவிஷயம் வரி வசூலிப்பதுதான். அந்த வரிகளை என்ன செய்கிறது என்பதுதான் சிதம்பர ரகசியம்.

கால்கள் யானைக் கால்களாக இருந்தாலும் எங்கள் நகர வாசிகளுக்குக் கண்கள் நல்ல தெளிவு. அதனால்தான் இரவு விளக்குகள் எரியாத தெருக்களில் எங்களால் நடமாட முடிகிறது. கமிஷன் வாங்காத 'ஒரு நபர்

கமிஷன்' உடனடியாகத் தேவை. தெரு விளக்குப் பராமரிப்பு நகராட்சியினுடையதா அல்லது மின்சார வாரியத்தினுடையதா என்பதைத் தீர்வு காண.

விவசாயக் குடி மக்களும் பிற்படுத்தப் பட்ட மக்களும் பெரும்பான்மையாக உள்ள இப்பகுதி மாணவர்கள் வழக்கமான குடி நீர்த் தாகத்தோடு சமீப காலமாகக்கல்வித் தாகமும் எடுத்து அலைவது கண்கூடிக் காட்சி. அண்ணாமலை பல்கலைக் கழகம் பட்டப் படிப்புத் துறையைத் திடீரென நிறுத்திவிட்டதால் பள்ளிக் கல்வி முடித்த பெரும்பாலான இளைஞர்கள் கல்வி வசதி இல்லாமல் அவதிப் படுகின்றனர். உள்ளூர் எம். எல். ஏ.க்களின் முயற்சியால் சமீபத்தில் திறக்கப் பட்ட அரசுக்கல்லூரியிலும் போதிய இடம் இல்லை.

ஏராளமான பொதுமக்களின் கருத்துக்கு விரோதமாக ஆடவல்லான் ஆலயம் அரசின் பிடிக்குள் போக முயற்சிகள் நடந்து வருகின்றன. ஆறு கால பூஜை மட்டுமின்றி எல்லாமே ஒழுங்காகவும் சுத்தமாகவும் நடைபெற்று வரும் இந்த ஆலயம் அரசியல்வாதிகளின் கையில் சிக்கினால் என்ன ஆகுமோ என்ற அச்சமும் ஆத்திகர்களின் அடிவயிற்றைக் கலக்கிக் கொண்டிருக்கிறது.

எங்களுக்கு வேறொரு ஆச்சரியமும் உண்டு. கதாநாயகனைத் தவிர வேறெதற்கும் முக்கியம் தராத தமிழ் சினிமா போல இந்த ஊருக்கு வரும் யாத்ரீகர்கள் நடராஜப் பெருமானை மட்டும் தரிசித்து விட்டுத் திரும்பி விடுகின்றனர். திருநீலகண்ட நாயனார் முக்தி பெற்றதும், அந்தத் தெய்வீக தம்பதிகளுக்கு இளமையை மீண்டும் அளித்ததுமான 'இளமையாக்கினார் கோவில்' என்ற பாடல் பெற்ற ஸ்தலம் நடராஜர் ஆலயத்துக்கு மேற்கே ஒரு பர்லாங் தொலைவுக்குள்தான் இருக்கிறது. அதோடு பதஞ்சலி முனிவர் பூஜித்த அனந்தீஸ்வரன் கோவிலும் அதன் அருகிலேயே இருக்கிறது. இந்த இரு கோவில்களுக்கும் பக்தர்கள் பெருமளவில் செல்வதில்லையே என்ற குறை எங்களுக்கு உண்டு.

பெரிய தொழிற்சாலைகள் ஏதும் இல்லாமல் எங்கள் தாலுகா பின்தங்கிய தாலுகாவாக இருக்கிறது. இருக்கின்ற ஒரே ஒரு நூற்பாலையும் நிர்வாகச் சீர்கேட்டினால் விரிவு படுத்த வாய்ப்பு இருந்தும் விரிவு படுத்தப் படாமல் இருக்கிறது. இதன் காரணமாக வேலைவாய்ப்பு ஏதுவும் இல்லாத இளைஞர்கள், சைக்கிள் கடைகளிலும், டீக்கடைகளிலும் தங்கள் முகாம்களை நடத்திக் கொண்டிருப்பதைச் சர்வ சாதாரணமாகக் காணலாம்.

எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இங்கு கிளைகள் இருந்தாலும் அவை அகில உலகப் பிரச்னைகளை அலசுவதற்கே நேரம் போதாமல் இருக்கின்றன. உள்ளூர்ப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண 'ஹிந்து இளைஞர் பேரவை' என்ற அமைப்பினர்தான் முயற்சி எடுக்கின்றனர்.

வழக்கமான, உங்களுக்கும் பழக்கமான தண்ணீர்ப் பிரச்னை இங்கும் உண்டுதான். நீங்கள் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைபவர்கள். நாங்களோ நெய்யே கையில் இருந்தாலும் நெய்க்கு அலைபவர்கள். பல கோடி ரூபாய் பாழான திட்டத்தின் கதாநாயக வீராணம் அருகில் இருந்தும், நாங்கள் ஆலாய்ப் பறக்கிறோம். யார் யாரோ புண்ணியவான்கள் தெருக்கள் தோறும் நாங்களில் வெட்டியுள்ள கிணறுகளைத் தூர் எடுத்துச் சுத்தப்படுத்தினாலே எங்கள் தண்ணீர்ப் பிரச்னை தீரும். நடராஜர் ஆலயத்தின் உள்ளே இருக்கும் பல கிணறுகள்தாம் எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன.

எங்களுக்கு ஒரே பொழுதுபோக்கு கள்ள மார்க்கெட்டில் டிக்கட் வாங்கிச் சினிமாப் பார்ப்பதுதான். வேறு ஏதும் பூங்காக்களோ விளையாட்டுத் திடல்களோ இந்தப் பெரிய நகரத்தில் இல்லாதது எங்கள் ஆரோக்யத்தின் மேல் அதிகாரிகளுக்கு உள்ள நம்பிக்கையைக் காட்டும்.

இங்கு உள்ள நீதி மன்றத்தில் முக்கிய பிரச்சினை, முத்திரைத் தாள் விற்பனையாளர் இல்லாததுதான். இதனால் பொதுமக்களும் அதிகாரிகளும் வழக்கறிஞர்களும் படும் கஷ்டம் சொல்லி மாளாது. ஆனால் பூனைக்கு மணி கட்ட யாரும் முன்வர மாட்டேன் என்கிறார்கள்.

வீட்டு வசதி பரவாயில்லை. கையில் ஒரு இந்திரா படமோ எம். ஜி. ஆர். படமோ இருந்தால் காலி மனையில் குடிசை போட்டு வீட்டு வாசலில் மாட்டி விட்டால் போதும், யாரும் நூச்சு விட மாட்டார்கள்.


அம்பலமான ரகசியங்கள் இவ்வளவுதான். அம்பலத்தில் ஆடுகின்ற நடராஜப் பெருமான் மட்டுமே அறிந்த சிதம்பர ரகசியங்கள் எத்தனையோ?

புகைப்படங்கள்:

-தேரடி பொன்னி ஸ்டுடியோ

✕ நகராட்சி விளையாட்டு அரங்கமான அண்ணா கலையரங்கத்தில் சிதம்பரம் வடக்குப் பகுதி கழிவு நீர் வந்து சேருமிடம்.




ஆகா! புருவ அழகு ஜொலிக்குது! ஆனால், பரு முகத்தைக் கெடுக்குது!
அது பரு இல்லேடா மண்டு! கொசுக்கடியால வந்த குன்று!
கொசுக்கடிக் கொடுமை இன்றி குன்றாத அழகுடன் திகழ்ந்திட ஒரே வழி டார்டாய்ஸ்.
உள்ளே என்ன ரொம்ப ஜாலியா?
JUST MARRIED DON'T DISTURB
ஜாலியா... ராத்திரி முழுதும் கொசுவை அடிச்சு விரட்டுறதிலேயே அவுங்க பொழுது போயிடுச்சு ...பாவம்.
கொசுத் தொல்லை இல்லாவிட்டால் வாழ்க்கையே ஜாலிதான். உபயோகியுங்கள் டார்டாய்ஸ்.
நமது ஆசிரமத்தில் நாம் எப்போதுமே முழுமையான அகிம்சைத் தத்துவத்தையே பின்பற்றுகிறோம். அதே முறையில்தான் நாம் கொசுக்களை இம்சிக்காமல் விரட்டுவதற்கு டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருளை உபயோகிக்கிறோம்.
கொசுக்களை விரட்டியடிப்பதற்கான சரியான தத்துவம் டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்.
உங்களுக்கு 11 குழந்தைகள் இருக்கிறதா சொன்னீங்களே!! அதைப் பார்த்தா நீங்க திருமணமானதிலிருந்து தூங்கவே இல்லே போலிருக்கே!
எப்பவுமே கொசுத் தொல்லை இருக்கிறபோது ஒருத்தர் எப்படிங்க தூங்க முடியும்!
டார்டாய்ஸ் மூலம் நல்லிரவுத் தூக்கத்திற்கு நலமாகத் திட்டமிடுங்கள்.
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023 போன்: 273831

குறும்பில் பயிராகும் துடிப்புக் கதிர்கள்!

● காஞ்சிப் பெரியவரது அட்டைப் படமும் கட்டுரைகளும், புகைப் படங்களும் தித்திக்கும்தேனாக, தெவிட்டாத அமுதமாக இனித்தன. இதில் 'ஹாட்டச்' பற்றிய விமர்சன ஒரு திருஷ்டி பரிகாரம்.
சென்னை-45
கணபதி சுப்பிரமணியம்

● கோவை வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்களின் அமைப்பான மாணவர் மன்றத்தினர் எழுத்தாளர்களிடையே நடந்துகொண்ட விதம் மிகவும் தவறானது. வருத்தப்பட வேண்டியது.
உத்தரமேரூர் லயன் எம். தாமஸ்

● நேருக்கு நேர் அனுபவம் வேதனை தரக்கூடியதுதான். ஆனால் விளையாட்டுக் குணமுள்ள மாணவர்கள் செய்யும் சேஷ்டைகளை விளையாட்டாக எடுத்துக் கொண்டு ஒதுக்கிச் செல்வதுதான் ஹேமா ஆனந்ததீர்த்தன் போன்ற பெரிய எழுத்தாளர்களுக்கு அழகு.
மதுரை நாகு. வேலன்

● ஹேமா ஆனந்த தீர்த்தனுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். இம்மாதிரி எழுத்தாளர்கள் இப்படித் தரம் கெட்டுப்போய் எழுதுவதால் தான் படிப்பவர்கள் இப்படியெல்லாம் ஆபாசமாய்க் கேட்கிறார்கள்!
சென்னை-5 எஸ். வி. ராஜசேகர்

● மாணவர்கள் என்றாலே குறும்பில் பயிராகும் துடிப்புக் கதிர்கள். சென்ற ஆண்டு அனுராதாரமணனையும்தான்கேட்டார்கள் :- ''நீங்கள் எந்தக் கடையில் அரிசி வாங்குகிறீர்கள்?'' அவர் கோபப்படவில்லையே!

சுபாஷிணியும், உஷா சுப்பிரமணியமும் தந்த பதில்கள் காவியச் சுவை நிரம்பியவை:

கேள்வி: உன்னை நான் மணந்து கொள்ளலாமா?

சுபாஷிணி: ''டைவர்ஸ் செய்கிற அநாகரிகத்தை வெறுப்பவள் நான்!''

கேள்வி: உன்னை நான் முத்தமிடலாமா?

உஷா சுப்பிரமணியம்: ''முத்தமிடலாம், ஆட்சேபணை இல்லை, எனது மகனாக அன்புடன் வந்து முத்தமிடு!''

என்னைக் கேட்டார்கள்: ''நீங்கள் யாரையாவது காதலித்து இருக்கிறீர்களா?''


நான் சொன்னேன்: ''இப்பவும் என்னைக் கூட யாராவது காதலிப்பதானால் நான் தயார்!''

இந்தப் பதில்களைக் கேட்டு மாணவர் சமுதாயம் ஏகோபித்துக் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவித்தது.
சென்னை-93 கோவி. மணிசேகரன்

[நேருக்கு நேர் நிகழ்ச்சி பற்றிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதில் அடுத்த வாரம் -ஆர்]

● கன்னிமாரா லைப்ரரி மிகச் சிறந்த படிப்பகம். அவர்கள் (ஹோம் டெலிவரி) வீட்டிற்குப் புத்தகம் கொடுத்து அனுப்புவதற்கு' மாதம் ஒரு ரூபாய் சந்தா வைத்துள்ளார்கள். இந்த வசதி காரணமாக முதியவர்கள், பஸ் பயணம் செய்ய இயலாத நோயாளிகள் படிக்கும் வாய்ப்புப் பெறுகிறார்கள். இந்த ஆண்டில் வீட்டுக்கு நூல் அனுப்பும் வழக்கத்தை நிறுத்த யோசனை செய்து வருகிறார்கள். இது முதியோர் கல்விக்குச் செய்யும் தீங்கு என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
சென்னை-4 டி. என். கலி சுப்பிரமணியம்

● பகவான் மகாவீரர் அஹிம்சை பிரசார சங்கத்தின் பணிகள் பற்றிக் கட்டுரை வெளியிட்டதற்கு நன்றி. வெளி மாநிலங்களுக்கு அடிமாடுகளை ஓட்டிச் சென்று விற்கும் கொடுமையைத் தடுக்கும் எங்கள் முயற்சியையொட்டி, தமிழ்நாடு அரசு ஒரு மசோதா கொணர்ந்துள்ளது. அதை விரைவில் நிறைவேற்ற எங்கள் சங்கம் வற்புறுத்தி வருகிறது. பிஞ்சராபோலில் உள்ள மாடுகள் எல்லாமே, எங்கள்சங்கத்தால்அனுப்பப் பட்டவைஅல்ல; மாடுகளை மரணத்தின் பிடியிலிருந்து மீட்கும் அமைப்புக்களில் எங்கள் சங்கமும் ஒன்று. புகைப்படத்தில் திரு மோகன்மல்ஜி சோர்டியாவும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது தவறு. சங்கத் தலைவர் திரு சோர்டியா அவர்களின் புகைப் படம் இத்துடன் இணைத்திருக்கிறேன்.



சென்னை-7 கருப்பையா

● வெம்மை மிகச்சேர் தவக்கனலால்
வெகுளி காமக் காடெரித்தோன்
இம்மை பக்திப் பயிர்செழிக்க
சடில் கருணை மழைபொழிவோன்
செம்மை காஞ்சி முனிவன்தன்
திருவார் உருவைத் தாங்கிவந்து
எம்மை மகிழச் செயும்கல்கி
ஏடே! நீயும் தவம்செய்தாய்!
வேலூர் (சேலம்) ஜி. வி. அர்த்தநாரி

அவர்கள் இதயங்களில் இருந்து புறப்பட்ட, யாருக்கும் புலப்படாத நட்பின் பொன்னிழைகள் மென்மையான காதலை நெய்தன.

நேசமுள்ள வான்சுடரே

சவீதா

9

மலைச் சிகரங்கள் மேகங்களால் கூர் மழுங்கியிருந்தன. மூடு பனி யூகலிப்டஸ் மரங்களுக்கிடையே உருகி வழிந்து ஏரி நீரின் மேல் படர்ந்து நகர்ந்தது.

சரிவில் பேரி, ப்ளம்ஸ், எப்ரிகாட் மரங்களின், பனியால் கருகிக் கறுத்துப்போன கிளைகளுக்குள்ளே கண நேரமும் காத்திருக்க விரும்பாத வசந்த காலம் வண்ண வண்ணப் பூக்களாக வெடித்தன. பறவைகளின் குதூகலக் கூச்சல். எங்கோ ஒரு நாய் 'ளஃப் ளஃப்' என்று மலைப் பிரதேச அமைதியைக் கலைத்தது.

சின்ன பங்களாவின் முன்,

பத்மா கிளினிக்
இலவச மருத்துவ மனை
டாக்டர் ராம்குமார் எம்.பி. பி.எஸ்
டாக்டர் திருமதி பத்மா ராம்குமார் எம்.பி. பி. எஸ்

என்ற போர்டு.

கிழிந்த கோட்டும், மப்ளரும் சுற்றிய ஆண்களும், எஸ்டேட்டில் வேலை பார்க்கும் தாய்மார்களும் அழுக்குக் குழந்தைகளுடன் வரிசையில் வந்தனர்.

ராம்குமார் ஆண்களுக்கு ஊசி ஏற்றி மாத்திரையைச் சின்னக் கவரில் போட்டுக் கொடுத்தான். கிழவர் இரு கரத்தையும் கூப்பி மனமார ராமைக் கும்பிட்டுவிட்டு நகர்ந்தார். பத்மா ஒரு பெண்ணை உயர மேஜை மீது படுக்க வைத்து வயிற்றை அமுக்கினாள்.

கடைசி நோயாளியும் அகன்ற பிறகு கிளினிக்கில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர்.

பத்மா தோளில் கிடந்த 'ஸ்டெத்'தைச் சுவரில் தொங்க விட்டாள். 'கோட்'டை அலுப்புடன் கழற்றினாள். மூன்று மாதத்திற்கு அவள் வயிறு சற்று அதிகமாகவே விம்மியிருந்தது.

அறைக்குள்ளே வந்த ராம் அவள் வயிற்றை தன் இரு கரங்களாலும் தொட்டான். ''ரெட்டைக் குழந்தையாக இருக்குமோ?'' என்று புன்னகை செய்தான்.

''அப்படீன்னா ரொம்ப நல்லதாப்போச்சு'' என்றாள் பத்மா.

''என்ன நல்லதாப் போச்சு?''

''இத்தோட நிறுத்திக்க வேண்டியதுதான். இன்னொரு தடவை நான் லேபர் பெய்னை அனுபவிக்க வேண்டாம்!''

''ரெண்டும் ஆணாப் பிறக்கப் போகுது. பெண் குழந்தை உனக்கு வேண்டாமா? வேண்டாம்னா ஓ.கே. அதுசரி டெலிவரிக்கு மெட்ராஸ் போயிடலாமா?''

''எங்கேயும் போக வேண்டாம். நீங்க தான் பிரசவம் பார்க்கப் போறீங்க!''

''நானா?''

''ஆமா. நீங்களேதான். நான் ஒவ்வொரு நாள் காலேலேயும் உங்க முகத்துல கண் விழிக்கிற மாதிரி உங்க குழந்தை இந்த உலகத்துக்கு வர்றப்ப உங்க முகத்துல முதல் முதலாக் கண் விழிக்கணும்னு ஆசைப்படறேன்.''

''நானும் பாத்துக்கிட்டே யிருக்கேன். ஒரு மணி நேரமா ஒரே பக்கத்தை விரிச்சு வெச்சுப் பார்த்துக்கிட்டிருக்கியே. படிக்கிறயா இல்லே, பகல் கனவு கண்டுக்கிட்டிருக்கியா?'' என்றாள் டெய்சி.

டெய்சி சொன்னது உண்மைதான். பள்ளிப் பருவத்திலிருந்தே பத்மா பகல் கனவுகளில் ஒருவித சுகத்தை அனுபவித்தாள். தன்னைச் சுற்றியிருந்த நிஜ உலகத்தை விட மிகவும் நிஜமானதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் இருந்தது.

ஆறாவது ஏழாவது படித்தபோது அவளுடைய பகல் கனவுகளில் அப்பா மறுபடியும் உயிரோடு வெள்ளை வேஷ்டி சட்டை அணிந்து வருவார். தேங்காய் மிட்டாய் வாங்கிக் கொடுத்து ரோஜா தோட்டத்துக்கு வாக்கிங் அழைத்துச் செல்வார். ராட்சஸ ராட்டினத்தில் அப்பாவோடும் பலூன்களோடும் அமர்ந்து சுழல்வாள். அப்பாவைப் பக்கத்தில் உட்கார வைத்துக் காரை ஓட்டிச் செல்வாள்.


இப்போது ராம் அவளது கனவுகளை அலங்கரித்தான். பல சமயங்களில் மடியில் புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு பகல் கனவுகளுக்குள் நெடுந்தூரம் யாத்திரை சென்றுவிட்டுத் திரும்பி வந்தாள்.

அவளுடைய பள்ளிப் பருவத்துப் பகல் கனவுகள் நிஜ வாழ்க்கையில் நிறைவேறியிருக்கின்றன. நிறைய மார்க் வாங்கி முதலாவதாகத் தேற வேண்டும் என்று கனவு கண்டாள். நிறையப் படித்துப் பெரிய உத்தியோகத்துக்கு வரவேண்டும் என்று கனவு கண்டாள். எல்லாம் சக்திக்கு மீறிய கனவுகள். இருப்பினும் அவைகள் எல்லாம் படிப்படியாக ஓரளவுக்கு நிறைவேறி வருவதால் ராமைப் பற்றிய கனவுகளும் நிச்சய

மாக நிறைவேறும் என்று அவநம்பிக்கை களுக்கிடையே உறுதியாக நம்பினுள்.

கனவுகள் நிறைவேற நடவடிக்கைகள் தேவை என்பதையும் பத்மா தெரிந்து வைத்திருந்தாள். கனவுகண்டால் மட்டும்போதாது உழைப்பையும் வியர்வையையும் கொட்டினுல் தான் அவை நனவாகும் என்பதை அனுபவம் அவளுக்குக் கற்றுத் தந்திருந்தது. மின்னலைப் போலப் பளீரிடும் ஒரு கனவை நனவாக்க ஒரு ஆயுட்காலம் முழுவதையும் செலவழித்த விஞ்ஞானிகளையும் உலகத் தலைவர்களையும் பற்றிப் படித்திருக்கிறுள். ராமிற்காக ஒரு ஆயுட் காலத்தை மட்டுமல்ல எடுக்கப் போகும் ஜென்மங்கள் அனைத்தையுமே செலவிட அவள் தயாராகி விட்டாள். அவனுக்கு ஏற்றவளாகத் தன்னை உயர்த்திக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டாள்.

கல்லூரி இதழில் ராம் எழுதிய சட்டுரையைப் படித்துவிட்டு அவனைப் பாராட்டு



நாடக விமர்சனம்



சில நாடகக் குழுக்களுக்கு, சில நாடகாசிரியர்கள்தான் ராசி போலும். நடிகர் டெல்லி கணேஷுடன் நாடகாசிரியர்—நடிகர் ரமணியும் சேர்ந்து விட்டால் நாடகம் சோடை போகாது என்று இரண்டாம் முறையாக நிரூபணமாகி விட்டது.

லாயர் கணேஷாக வரும் டெல்லி கணேஷ், டாக்டர் கார்த்திக்காக வரும் ரமணி, தேவியாக வரும் ஆனந்தி எல்லாருமே மிகையான நடிப்பு இல்லாமல் பாத்திரங்களைச் செய்யும்பொழுது குமாஸ்தா பாஷ்யம் மட்டும் ரொம்பக் கொட்டம் அடிக்கிறாரோ என்று தோன்றுகிறது. இவர் அடிக்கிற ஜோக்ஸ் எல்லாம் சுஜாதாவின் வஸந்த் பாணி ஜோக்ஸ்தான்! (லாயர் கணேஷுக்கு உதவியாளராக வந்தாலே அப்படித்தான் போலிருக்கிறது.)

வெறும் நகைச் சுவைக்காக மட்டும் நாடகமாக இல்லாமல், அத்துடன் உருப்படியான ஒரு கதையும் (நாடகாசிரியர் ரமணியின் ப்ளஸ் பாயிண்ட்?) இருக்கிறதால் நாடகத்தில் ஒரு முழுமை தெரிகிறது.

தான் படிக்க வைத்து டாக்டராக்கிவிட்ட கார்த்திக், பணம் மட்டுமே லட்சியமாகக் கொண்டு தொழில் நடத்துவதைக் கண்டு பொருமும்போதும், தான் விரும்பும் தேவி பணத்தாசை கொண்ட தன் டாக்டர் நண்பனைக் காதலிப்பதாக அறிந்ததும் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுப்பதுமின்றி, திருமணத்தையே தன் செலவில் நடத்தி வைப்பதும் டெல்லி கணேஷின் பாத்திரத்தை உயர்வாக்குகின்றன.

நாடகத்தின் தலைப்பில் இருக்கும் ஆஷா பாத்திரத்திற்குக் கதையில் அப்படி யொன்றும் முக்கியமான பங்கு இல்லாததும், அவ்வளவாகக் கதையோடு ஒட்டாததும் சிறிய குறைகள்தான். நாடகத்தில் திருப்பம் ஒரு முக்கியமான அம்சம். அதில் ரமணியின் வசனமும், கணேஷின் நடிப்பும் அழுத்தமாகவே இருக்கின்றன.

—சாருகேசி

வதற்காகப் பத்மா அவனைத் தேடினாள். அவன் அகப்படவில்லை. பரோடா போய் விட்டான்.

பரோடா மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற ஆல் இந்தியா இன்டர் மெடிகல் டோர்னமெண்ட்டில் கலந்து கொள்ள, கல்லூரியின் கால் பந்தாட்டக் குழுவின் தலைவனாகச் சென்றிருந்தான்.

பத்மா மிகவும் சோர்வடைந்து எண்ணெய் கூடத் தேய்த்துக் கொள்ளாமல் தலை வாரினாள். நாலைந்து நாட்களுக்குப் பிறகு மகளிர் விடுதியின் விடுதி நாள் விழா வந்தது.

காலையிலிருந்தே ஒலிபெருக்கிகள் சினிமாப் பாடல்களை முழக்கின. டெய்சி ஜீன்சும் பனியனும் அணிந்து பம்பரமாகச் சுழன்று விழா வேலைகளில் தீவிரமாகப் பங்கேற்றாள். நகரத்துக்கு வந்து நடை உடையில் அவள் நிறைய மாறிவிட்டாள்.

மெஸ்ஸில் வெஜ், நான் வெஜ் ஐட்டங்கள் தயாராகும் மணம். விடுதியின் கேட் விருந்தினருக்காக விரியத் திறந்து வைக்கப்பட்டது. 'விஸிட்டர்ஸ் ஹால்' வரை அனுமதிக்கப்பட்ட மாணவிகளின் உறவினர்களும், நண்பர்களும் அன்று ஒரு நாள் மட்டும் மாணவிகளின் அறைகளுக்கு வந்து அமர்ந்து பேச அனுமதிக்கப்பட்டவர். எனவே, எல்லா மாணவிகளின் அறைகளும் அரட்டையாலும் சிரிப்பொலிகளாலும் நிரம்பி வழிந்தன.

வழக்கமாக சூரியோதயத்துக்கு முன் எழுந்து ஸ்நானத்தை முடிக்கும் பத்மா அன்று மிகவும் சோம்பலாக, எழுந்து தலையைக் கூட வாரிக் கொள்ளாமல் படுத்திருந்தாள். ஜன்னல் வழியே பார்த்தாள். தோட்டத்துக்குள் கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட காதல் ஜோடிகள் நின்றும் அமர்ந்தும் அளவளாவினர்.

பதினொரு மணி இருக்கும். பத்மா எழுந்தாள். கண்ணாடி முன் நின்று சீப்பைத் தலையில் வைத்தாள். கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுத் திரும்பினாள். ''எஸ் கம் இன்'' என்றாள்.

கதவைத் தள்ளிக் கொண்டு உயரமாக வளர்ந்திருந்த ராம் லேசாகத் தலை குனிந்து உள்ளே வந்தான். பத்மாவின் மனத்தில் படபடப்பு. தன் விழிகளையே அவளால் நம்ப முடியவில்லை.

''எப்போ வந்தீங்க!''

''மார்னிங்தான்.''

''மாட்ச் எல்லாம் எப்படி?''

''கப் நம்ம காலேஜுக்குத்தான்.''

''ரியலி?''

''ஏன் சந்தேகமா?''

''கங்ராச்சுலேஷன்ஸ்.''

''தாங்க் யூ.''

''எனக்கு கெஸ்ட் யாருமே வரமாட்டாங்கன்னு எதுவுமே வாங்கி வைக்கலே. குடுக்கறதுக்கு ஸ்வீட் கூட இல்லே.''

''பரவாயில்லே. மாட்ச்ல வின் பண்ணதை உங்க கிட்ட முதல்ல சொல்லணும்னு தோணிச்சு. அதுக்குத்தான் வந்தேன்.''

''தாங்க் யூ.''

''சித்தி சித்தப்பா இன்னிக்கு ஈவினிங் வருவாங்களா?''

''நான் இன்வைட் பண்ணலை.''

''ஏன்? போய் அழைச்சுக்கிட்டு வாங்க.''

''வரமாட்டாங்க.''

ராம் பார்வையைச் சுழற்றி அறையை ஒரு கணம் பார்த்தான்.

''உங்க ரூம் மேட்?''

''டெய்ஸி... பை த பை. நீங்க மாகஸின்ல எழுதின ஆர்ட்டிகிள் ரொம்ப நல்லா இருந்தது. நீங்க இவ்வளவு அழகா தமிழ் எழுதுவீங்கன்னு எனக்குத் தெரியாது.''

''யாரோ எழுதினதைத் தன் பேர்ல போட்டுக்கிட்டான்னு நினைச்சீங்களா? நிஜமாவே நான்தான் எழுதினேன்.''

''நான் அப்படியெல்லாம் நினைக்கலே.''

''காலேஜுக்கு வர்ற பத்மாவை விட நீங்க ரொம்ப வித்தியாசமா இருக்கீங்க.''

''நான் எவ்வளவு அசிங்கமா இருக்கேன்னு இப்பத்தான் உங்களுக்குத் தெரியுது இல்லையா?''

''நோ நோ. தலை வாரிக்காம, பவுடர் பூசிக்காம நெத்திக்கு இட்டுக்காம, கண்ணுக்குத் தீட்டிக்காம கசங்கின புடவையில வித்தியாசமா இருக்கீங்கன்னுதான் சொன்னேன். இது ரொம்ப இயற்கையா இருக்கு. சொல்லப்போனா எனக்கு ஏற்கனவே அறிமுகமான அந்தப் பத்மாவை விட இந்த பத்மா ரொம்ப அழகா இருக்கிற மாதிரிக் கூடத் தோணுது.''

''அப்பமன்னு நாளைலேர்ந்து காலேஜுக்கு இப்படியே வர்றேன்.''

சிரித்தனர்.

''ஈவினிங் ஃபங்ஷன்லே மீட் பண்ணுவோம்'' என்று ராம் எழுந்தான்.

''ஒன் மினிட்'' பத்மா சூட் கேஸைத் திறந்தாள். அவன் பரிசளித்த சர்ஜரி புத்தகத்தை வெளியில் எடுத்தாள். மேலட்டையைப் புரட்டி அவன் முன்னே ஏந்திப் பிடித்தாள். மாகஸினில் வெளியான ராமின் புகைப்படத்தைக் கத்தரித்து அதில் ஒட்டி வைத்திருந்தாள். ''இதில் கையெழுத்துப் போட்டுக் குடுங்க'' என்று பேனாவை நீட்டினாள்.

'There is no greater joy than that which comes from loving giving and caring என்று எழுதிக் கையொப்பமிட்டான். எழுதும் போது புத்தகத்தைப் பற்றியிருந்த பத்மாவின் நீள விரல்களையும் அவற்றில் பதிந்திருந்த சுத்தமான பிங்க் நிற நகங்களையும் ராம் ரசிக்கத் தவறவில்லை.

'க்வோவ் க்வோவ்' என்று தினமும் குயில்கள் விடுதிக்கு வெளியே கூவின. ஆண்கள் விடுதியின் மாடியிலிருந்து 'நிலவும் மலரும்பாடுது என் நினைவில் தென்றல் வீசுது' என்று தேவநேசன் தாளமடித்துப் பாடுவது சாயந்திர நேரங்களில் கேட்டது. காலையில் கருகருப்பாக வார்டுக்கு விரைம்பிய ஹவுஸ் ஸர்ஜன்களைப் பார்த்தபோது பத்மாவுக்குச் சீக்கிரமாக டாக்டராக வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அனாடமிக்காகக் கொடுக்கப்பட்ட சடலங்கள் சிறுகச் சிறுகத் தேய்ந்து ஒன்றரை ஆண்டு முடியும்போது ஒவ்வொரு மேஜையிலும் கை அல்லது கால் அல்லது பெரிய சதைத் துண்டம் மட்டுமே மிச்சமிருந்தன.

ராம் பத்மா இதயங்களிலிருந்து புறப்பட்ட யாருக்கும் புலப்படாத நட்பின் பொன் இழைகள் மென்மையான காதலை நெய்தன.

(தொடரும்)

மதுரையில் சிடி சினிமாவில் 'மௌன கீதம்' சினிமாவுக்குப் போயிருந்தோம். கவுண்டரில் எங்கள் டிக்கட்டுக்குப் போகத் தரவேண்டிய சில்லறையில் ஒரு மிட்டாயும் இருந்தது. தியேட்டரில் கொண்டாட்ட தினமாக இருக்கும் என்று நினைத்தேன். அதற்குள் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய சில்லறையில் ஐந்து பைசா கம்மியாக உள்ளது. அதனால் மிட்டாய் கொடுத்தேன் என்றார். கையை விரிக்காமல் அவர் இப்படி நடந்து கொண்டது நன்றி கலந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியது.


—ஆர். அம்பரம்






ஜப்பானில் அதிசயப் பட்டை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. பாட்டரியால் இயங்கும் இதை நெற்றியில் பொருத்திக் கொண்டு ஸ்விட்சைப் போட்டால் நெற்றி ஜில் ஆகும். முக்கியமான ஆலோசனைகள் செய்யும் போது இதை அணிந்து கொண்டு பதற்றம் இல்லாமல் முடிவுகளை எடுக்கலாமாம்!

—ராகவன்



கட்சி கட்டுப்பாடு
ஒன்றுமில்லே, நன்றி தெரிவிக்கறதிலே போட்டி! அவ்வளவு தான்!
ஐ.எம்.எஃப்
பொருளாதாரம்
தேர்தலில் நேர்மை
ஒழுங்கீனம் வன்முறை
சட்டம் ஒழுங்கு
தேர்தல் கமிஷன்
கைமீறிப் போன காரியங்கள்!
பஞ்சாப் பிரச்சினை கிளர்ச்சியாளர்களின் கை மீறிப் போய் விட்டது! — பிரதமர்



இ.காங்கிரஸ் மளிகைக் கடை
வாங்கிய சாமான்களுக்கு பில் போடலாமா!
விலைவாசி
அஸ்ஸாம் பிரச்னை
குடிநீர்- பிரச்னை
இ.காங்கிரஸ் தண்ணீர்ப் பந்தல்.
ரயில் தண்ணீர்
பால் பாக்கி!
மளிகை கடன்!
வாடகை பாக்கி! ஜவுளி பில்!
அப்பா! ஸ்கூல் ஃபீஸ்!
தண்ணி வரி!
பில்!.. 10 பைசா தான் கட்டண உயர்வு!
சுபிட்சம்

இருளில் மறைந்த வெளிச்சம்

பிற்பகல் மணி மூன்று. ரமணி இன்ஸ்டிடியூட்டுக்கு வந்தான். நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகம் ஆகிப் பத்து மெஷின்களுக்கும் பையன்களும் பெண்களுமாக வந்து விட்டார்கள். ஐந்து மணிக்குச் சுருக்கெழுத்து வகுப்பு எடுக்கும் டியூட்டர்களும் இன்ஸ்டிடியூட் மானேஜரும் ஒவ்வொருவராக வந்து விட்டார்கள். ரமணிக்கு அங்கே சம்பளம் இல்லாத வேலை. மற்ற ஆசிரியர்கள் வராத நேரங்களில் இன்ஸ்டிடியூட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதே இன்ஸ்டிடியூட்டில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து இரண்டிலும் ஹையர் பரீட்சை எழுதிப் பாஸ் செய்த வேலை இல்லாத பட்டதாரி அவன். வேலையும் இல்லாமல், வேறு போக்கிடமும் இல்லாத அவனுக்கு நேரத்தை ஓட்டக் கிடைத்தது சம்பளம் இல்லாத இந்த வேலை.

மாலையில் அவன் வீடு திரும்பியபோது திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த மாமி அவன் தலையைக் கண்டதும் ''விசுவத்தின் வீட்டிலேருந்து உன்னை மூணு தடவை தேடிவிட்டுப் போனார்கள்'' என்றாள்.

''சரி, போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று நகர்ந்தான்.

வாசலில் இருந்த விசுவத்தின் அப்பா ''வா...வா'' என்று வரவேற்றார். ''ஒரு வேடிக்கை பாரு... வேணும் வேணும் என்று தபக இருப்போம், கிடைக்காது. வேண்டாம் வேண்டாம் என்று தள்ளுவோம். மடியில் வந்து விழும். ஜாம்ஷெட்பூர் வேலைக்கு விசுவத்துக்கு ஆர்டர் வந்திருக்கு. உனக்குத்தான் எல்லா சப்ஜெக்டிலேயும் அவனை விட அதிகம் மார்க். உன்னோடதுதான் அவனைவிட டிசர்விங் கேஸ். ஆனா அவனுக்கு வந்



இருக்கு... இதற்கு என்னவென்று சொல்கிறது.?''

கூடத்தில் விசுவம் ஹோல்டாலில் துணிமணிகளை அடைத்துக் கொண்டிருந்தான். விசுவத்தின் கையைப் பிடித்து ''கன்கிராஜுலேஷன்டா'' என்று சொல்லும் போதே அவன் கண்கள் கலங்குவதை விசுவம் கவனித்து விட்டான். ''உனக்கும் இரண்டு மூன்று நாளில் ஆர்டர் வரும். ஒருவேளை அது வராவிட்டால் அது எப்படி வராமல் இருக்கும் என்று விசாரித்து அனுப்புவதற்காகவாவது, முதலில் நான் போவதாக இருக்கிறேன், நிஜமாக'' என்றான் ஆறுதல் நிரம்பிய குரலில்.

உள்ளே இருந்து வந்த விசுவத்தின் அம்மா, ''வா, ரமணி. இரண்டு பேருக்கும் சேர்ந்து ஆர்டர் வந்து கிளம்பினால் மனசுக்கு சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கும். நீ போகாமல் இவனைத் தனியாக அனுப்புவதில் எங்களுக்கு இஷ்டமே இல்லை. இவன்தான் முதலில் போய் உனக்கும் கிடைக்க வழி செய்கிறேன் என்று ஒற்றைக் காலில் நிற்கிறான்'' என்றாள்.

ரயில் நகர ஆரம்பித்தது. நூறாவது தடவையாக விசுவம் சொல்லிக்கொண்டான். ஜன்னல் வழியே அவன் தலை தெரியும்வரை கையை ஆட்டிக் கொண்டிருந்தான். ரயில் சென்ற திக்கிலிருந்து பார்வையை மீட்டுப் பிளாட்பாரத்துக்குக் கொண்டு வந்தபோது விசுவம் தன்னிலிருந்து எதையோ பிய்த்து எடுத்துக் கொண்டு போய் விட்டதைப் போல் உணர்ந்தான். கிட்டத்தட்ட எட்டு வருஷங்களுக்கு மேலாக மனசின் அந்தரங்கங்களை எல்லாம் பகிர்ந்து கொள்ள, அவ்வப்போது காலேஜ் சம்பளத்துக்குக் கை கொடுக்க, காலேஜ் படிப்பு நேரம் போக மற்ற நேரங்களைக் கழிக்க ஓரிடம் உண்டு என்று நினைக்க வைத்த விசுவம் எல்லாவற்றையுமே எடுத்துக் கொண்டு போய் விட்டான்.



வ·சா·நாகராஜன்

விசுவத்தின் அம்மாவும் அப்பாவும் கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். வெளியே வந்து அவர்களை ஒரு வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு அவன் நடந்தான். அவனும் விசுவமும் சேர்ந்து நடந்து நடந்து அந்த நகரில் அவர்கள் கால் படாத தெருக்களே இல்லை.

மறு நாளிலிருந்து தனக்கும் ஜாம்ஷெட்பூரிலிருந்து ஆர்டர் வரும், வரும் என்று ஆவலுடன் தபாலாபீசுக்கே போய்க் காத்துக் கொண்டிருந்தான் ரமணி

ஆனால் ஆர்டர் வரவில்லை.

விசுவம் லெட்டர் எழுதினான். எழெட்டுப் பேர்களுக்குத்தான் இந்த வருஷம் ஆர்டர் அனுப்பினார்களாம். இனி அடுத்த வருஷம் தானாம். மனம் தளர வேண்டாம் என்று என்னென்னவோ எழுதியிருந்தான்.

விசுவத்துக்கு வேலை கிடைத்து விட்டது. தனக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் கடைசி இழையும் அறுந்து போய் விட்டது.

ஒரு நாள் கடைத் தெருவில் இருவர் பேசிக் கொண்டிருந்தது யதேச்சையாகக் காதில் விழுந்தது. டைமண்ட் டாக்கீஸில் டிக்கட் கிழித்துக் கொடுக்கும் வேலை பார்ப்பவனும், அவர்களில் ஒருவன். பத்து நாள் லீவு வேண்டும் என்று கேட்டானாம். நம்பிக்கையான ஆளாக ஒருவனைக் கொண்டு வந்து வைத்துவிட்டு நீ லீவில் போ என்று சொல்லி விட்டாராம் முதலாளி. ''யாராவது நல்ல ஆளாக இருந்தால் சொல்லேன்'' என்று மற்றவனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

ரமணி நேராக அந்தத் தியேட்டரை நோக்கிப் போனான். பெரிய மீசையுடன் மானேஜர் உட்கார்ந்திருந்தார். வேலைக்கு ஆள் வேண்டும் என்று கேள்விப்பட்டதைச் சொன்னான்.

''என்ன படிச்சிருக்கே தம்பி?''

''பத்தாவது'' என்று பளிச்சென்று சொன்னான். பி. ஏ. என்றால் நிச்சயம் தர மாட்டார். வேறு பெரிய வேலைக்குப் போயேன் என்று உபதேசம் செய்வார். எப்படித் தன்னால் அவ்வளவு சரியாகப் பொய் சொல்ல முடிந்தது என்று அவனுக்கே ஆச்சரியம்!

வீடு எங்கே, இந்த வேலைக்கு ஏன் வந்திருக்கிறே என்றெல்லாம் விசாரித்து விட்டு, வேலையைப் பற்றிச் சொன்னார். ''மத்தியானம் ஒரு மணிக்கு வந்துடணும். ராத்திரி இரண்டாவது ஆட்டத்தின் இன்டர்வல்

முடிந்து எல்லாரும் உள்ளே போகிறவரை இருக்கணும். தினச் சம்பளம் நாலு ரூபாய். பத்து நாளில் பர்மனென்ட் ஆள் வந்தவுடன் அவனுக்கு வேலை இருக்காது.''

மறுநாள் வேலைக்குப் போனான்.

ஒரு வாரம் ஆயிற்று. விசுவம் லெட்டர் எழுதினான். ரமணி இந்த ஊரில் இருந்தால் எத்தனை வருஷம் ஆனாலும் வேலை கிடைக்காதாம். உடனே கிளம்பி ஜாம்ஷெட்பூர் வந்தால் ஏதாவது சின்னக் கம்பெனியில் குறைந்த சம்பளமாக இருந்தாலும் சேர்ந்து கொண்டு பெரிய வேலைக்குப் பிறகு முயற்சி செய்யலாமாம். உடனே கிளம்பி வா என்று கடிதத்தைப் படிக்கப் படிக்க மீண்டும் ஓர் அற்புதக் கனவு ரமணியின் மனத்தில் விசுவ ரூபமாகக் கிளை விரித்தது.

ஆனால்... டிக்கட்டுக்கு நூறு ரூபாய் வேண்டும். இரண்டு சட்டையாவது தைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு வேறு நூறு நூற்றைம்பது வேண்டும்.

ஒவ்வொரு சுகமான கனவுக்குப் பின்னும் பயங்கரம் ஒன்று வந்து பயமுறுத்தியது.

தியேட்டர் வேலை பத்து நாள் முடியும் கட்டத்துக்கு வந்தது.

கடைசி நாள். புதிதாக ஒரு படம் ரிலீசாகி யிருந்தது. டிக்கட் கொடுக்கும் கவுண்டரில் பெரிய அடிதடி. டிக்கட் வாங்கிக் கொண்டவர்கள் அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடிவந்து ரமணியின் மேல் வந்து விழுந்தார்கள். தியேட்டர் நிறைந்து கதவை மூடிப் படம் ஆரம்பித்ததும் அவன் வெளியே வந்து விடுவான். புதுப் படமானதால் உள்ளேயே இருந்தான். படத்தின் பெயர் திருடன். ஹிந்திப் படம்.

படத்தின் ஆரம்பமே ரமணியை ஆவலுடன் பார்க்க வைத்தது. கதாநாயகன் ரமணியைப் போலவே வேலை இல்லாத பட்டதாரி. எங்கெங்கோ வேலைக்கு அலைகிறான்.

''ஆயிரம் ரூபாய் கடன் கேக்கறியே, எப்பத் தருவே?''

''அறுவடை ஆனதும்.''

''எப்போ அறுவடை?''

''நிலம் வாங்கின பின்தான். தெரியும்....!''

எம். எஸ். ராமச்சந்திரன்



பொய்க் கத்தி ஒன்றை எடுத்துக் கொண்டு இருட்டிய பிறகு ஓரிடத்தில் மறைந்து கொண்டு சாலையில் வந்தவரை மிரட்டுகிறான். வந்தவர் பயந்துபோய்ப் பர்சைக் கொடுத்து விட்டு ஓடிவிடுகிறார். பணத்துடன் பம்பாய் போகிறான். வேலையில் சேருகிறான். கதாநாயகியுடன் டூயட் பாடுகிறான்.

அன்று மூன்று காட்சிகளையும் பார்த்தான் ரமணி.

பத்து நாட்களுக்கான சம்பளம் நாற்பது ரூபாயை வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

விசுவத்தின் கடிதம் மனசுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. இருநூறு ரூபாயாவது இருந்தால் ஜாம்ஷெட்பூர் போகலாம். இருநூறு ரூபாய்க்கு வழி?

முதலில் விளையாட்டாகத் தோன்றி, செய்து பார்த்தால் என்ன என்று நினைத்துப் பார்த்து, ஒரே ஓரிடத்தில்தானே என்ற குருட்டுத் தைரியம் முளை விட, ரமணி மூலை மழுங்கிய கத்தியைத் தேட ஆரம்பித்தான்.

இரவு மணி ஒன்பது. ரமணி புளிய மரத்து நிழல் படிந்த சாலை மறைவில் இருந்தான். சாலையில் நடமாட்டம் இல்லை.

வேகமாக வந்த கார் தடையைப் பார்த்ததும் வேகம் குறைந்தது. நின்றது.

ரமணி மரத்தின் மறைவிலிருந்து வெளியில் வந்தான். கத்தியைப் பிரித்து வைத்துக் கொண்டான். டிரைவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு எதிரே வந்தான். சடார் என்று எடுத்து நீட்டிவிட்டு மறைத்துக் கொண்டான்.

''பர்ஸ்.....!''

''பர்ஸ் சட்டைப் பையில் இல்லை. இதோ இந்தப் பெட்டியிலே இருக்கு. நீயே எடுத்துக்கப்பா. என்னை ஒண்ணும் பண்ணி விடாதே....'' என்று சொல்லிக் கொண்டே அவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு எதிரே ஜன்னல் அருகில் இருந்த பெட்டியைக் காட்டினார். ரமணி காரைச் சுற்றிக் கொண்டு வந்து ஜன்னல் வழியாகக் குனிந்து முகத்தையும் கைகளையும் காரினுள் விட்டுப் பெட்டிக் கதவைத் திறந்து பர்சை எடுத்.....

குனிந்திருந்த அந்தக் கணத்தில் இரு முரட்டுக் கைகள் அப்படியே கீழ் நோக்கி அமுக்கியது. அவன் நிமிர்ந்தான். தலை ஜன்னலுக்கு வெளியே வந்து விட்டது. ஆனால் கைகள் இரண்டும் அவர் பிடியில் சிக்கிக் கொண்டன.

சாலையில் இரண்டு சைக்கிள்கள் வந்தன. நின்றன. நிலையைப் புரிந்து கொண்டபோது ''இந்த ஆளைக் கொஞ்சம் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று கார்க்காரர் சொல்ல இப்போது நான்கு கரங்கள் அவன் கைகளையும் உடலையும் நெருக்கிப் பிடித்துக் கொண்டன. ஒருவருடைய மேல் வேட்டி அவன் கைகளைச் சேர்த்துக் கட்டியது. கார்க்காரர் இறங்கிக் காரைச் சுற்றிக் கொண்டு வந்தார். ''கத்தியைக் காட்டி மிரட்டிப் பர்சை எடு என்கிறான்.''

இதோ ஒரு ஹேர்-டை எளிதாக உபயோகிக்கக் கூடியது, நம்பமுடியாத குறைந்த விலையில்!



கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது.
உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!

இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர் டை இது ஒன்றே.



Godrej

பவுடர் ஹேர்-டை கான்ஸென்ட்ரேட்

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

CASGS-168-203 TAM


ஜி.ஆர்.எஸ்.*புதிய
பிரஸ்டீஜை முற்றிலும்
முழுப் பாதுகாப்புள்ள ஒரே
குக்கராக மாற்று விதம்
புதிய
பிரெஸ்டீஜ்
Patent pending
100%
பாதுகாப்பு
Prestige
PRESSURE COOKER
Prestige



மனைவி: ''உங்களுக்கு எடைக்கு எடை உப்புக் கொடுக்க உங்க கட்சித் தொண்டர்கள் ஏற்பாடு செய்துக் இட்டிருக்காங்களாமே?''
அரசியல்வாதி: ''ஆமா! சாம்பாருக்கு நீ உப்பே போடறதில்லேங்கற விஷயம் எப்படியோ அவர்களுக்குத் தெரிஞ்சுடுச்சினு நினைக்கிறேன்!''

—உ. ராஜாஜி

''அப்படியா சமாசாரம்? நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் விடுங்க...''

கார் புறப்பட்டது. கைகளும் கால்களும் கட்டப்பட்டு ரமணி பின் சீட்டில் துணி மூட்டை மாதிரி கிடந்தான்.

வாசல் கதவு, நிலைப்படியருகில் வீட்டுக்காரரின் பெயர்ப்பலகை இருந்தது.

''பால் சபாஸ்டியன், சப் ஜட்ஜ்''

இத்தனை நேரமும் இருந்த பயத்தை விட இப்போது சுர்ர் என்று நெஞ்சு உறைந்து போயிற்று. போயும் போயும் ஜட்ஜிடமா மாட்டிக் கொள்ள வேண்டும்?

விளக்கு வெளிச்சத்தில் அவர் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''எந்த ஊர் உனக்கு?''

''இந்த ஊர்தான்.''

''வீடு எங்கே?''

சொன்னான்.

அப்பா, அம்மா இருக்கிறார்களா, யார் வீட்டிலே இருக்கிறே?... அவர் கேட்கக் கேட்க அவன் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் சொல்லி விட்டான். பட்டப் படிப்பு, ஷார்ட்ஹாண்ட், டைப்ரைட்டிங், ஜாம்ஷெட்பூர் விகவம், இருநூறு ரூபாய்...

''பி. ஏ. படிச்சிருக்கே. ஷார்ட்ஹாண்ட் டைப்ரைட்டிங் வேறே இருக்கு. இத்தனை இருந்துமா வேலை கிடைக்கல்லே?''

அடிபட்டபோதுகூட ஏற்படாத வலி இப்போது ஏற்பட்டது.

''உன் நிலைமைக்குப் பரிதாபப் படுகிறேன். பரிகாரமும் சொல்கிறேன். வேலை வாங்கித் தருகிறேன். செய்கிறாயா?''

''என்ன வேலையாக இருந்தாலும் செய்கிறேன் ஸார்... என்ன வேலையாக இருந்தாலும்...!''

''நடு ரோட்டிலே கத்தியைக் காட்டி மிரட்டித் திருடத் துணிந்த உன்னை எப்படி ஒரு இடத்துக்குச் சிபாரிசு செய்கிறது?''

''சார் இருட வேண்டும் என்பது என் எண்ணம் இல்லே சார். எனக்கு வேண்டியது இருநூறு ரூபாய். நூறு ரூபாய் கிடைத்தால் கூடப்போதும். ஜாம்ஷெட்பூர்போய்விடுவேன். எப்படியாவது ஒரு வேலை தேடிக்கொள்ளணும்.... அதனாலேதான் சார்....''


''ஜாம்ஷெட்பூர் போனால் மாத்திரம் வேலை கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? நான் சொல்கிறேன் கேள். சென்னையில் எனக்குத் தெரிந்த அட்வகேட் இருக்கிறார். லெட்டர் கொடுக்கிறேன். அவரிடம் டைப் அடிக்கும் வேலை நிறைய வரும். அங்கே இருந்து கொண்டு வேறு வேலைக்குப் பார்த்துக் கொள்ளலாம். நாளைக்கே போய் விட முடியாது. நான் யார் என்று அந்த போர்டில் பார்த்தாய் இல்லையா? நீ வழிப் பறிக்கு முயற்சி செய்து குற்றம் செய்து பிடிபட்டவன். உன்னை இப்படியே விட்டு விட்டால் செய்த குற்றத்துக்குத் தண்டனை இல்லாமல் போனதாகி விடும். நாளை காலை போலீசில் உன்னை ஹாண்ட் ஓவர் பண்ணி விடுவேன். அவர்கள் உன்மீது கைவைக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கேஸ் நடக்கும். இரண்டு மூன்று நாளில் நடந்து முடிக்க ஏற்பாடு செய்கிறேன். என்னிடம் இப்போது சொன்னதை யெல்லாம் அப்படியே மாஜிஸ்டிரேட்டிடம் சொல். முதல் குற்றம், முன்னேற்பாடு செய்து கொள்ளாத அமெச்சூர் குற்றம் என்று குறைந்தபட்சம் தண்டனையாகக் கிடைக்கும். அதை அனுபவிக்கத்தான் வேண்டும். மறு நாள் உன்னைச் சென்னைக்கு ரயில் ஏற்றி விடுகிறேன். அங்கே தங்குவதற்கோ சாப்பாட்டுக்கோ கஷ்டம் இல்லாமல் ஏற்பாடு செய்கிறேன். இப்போது உன்னை இங்கே ரூமில் போட்டு அடைக்கப் போவதில்லை. இப்படியே வராந்தாவில் விட்டு விட்டு நான் உள்ளே போய்விடப் போகிறேன். நீ இங்கேயே இந்த சோபாவில் படுத்துக் கொள்ளலாம். காலையில் வந்து பார்ப்பேன். நீ இங்கே இருந்தால் சென்னை வேலை கிடைக்கும். ராத்திரியே கேட்டைத் திறந்து கொண்டு ஓடிப்போய்விடவும் செய்யலாம். ஒன்றை மனசில் வைத்துக்கொள். இன்றைக்கு ஓடிப்போய்விடலாம். ஆனால் செய்த தவறுக்கு, என்றைக்காவது தண்டனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். நான் இப்போது உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொள்ளப் போகிறேன். நாளை என்ன செய்வது என்பதை நீயே தீர்மானித்து அதன்படி செய்துகொள்.'' உள்ளே நடந்தார். கதவைத் தாளிட்டுக் கொண்டார்.

பிரமை பிடித்துப் போய் ரமணி நின்று கொண்டிருந்தான். வெகு நேரம் நின்று கொண்டிருந்தான். சிந்தனை செய்யக் கூட முடியாமல் மனம் மரத்துப் போய்க் கிடந்தது.

கடைசியில் விளக்கை அணைத்துவிட்டுச் சோபாவில் படுத்துக் கொண்டான்.

அவனுக்கு நாளை விடியும். இருளில் மறைந்த வெளிச்சம் வெளிவரும்.

கண்கள்...



இவற்றினால் உணர்வுகளை வெளிப்படுத்துங்கள்

சிரிப்பு. மகிழ்ச்சி. சினம். சிருங்காரம். அத்தனையும் சிறப்பாக எடுத்தியம்ப முடியும்... சிங்கார் டிலக்ஸ் கண்மையுண்ட உங்கள் கண்களால். கருமைப் பளபளப்பு மிக்கது சிங்கார்—அடடா! எத்தனை குளுமை...விசேடமான தயாரிப்பு சிங்கார் ...ஆகவே அத்தனை அழகு... கண்களுக்கு எரிச்சல் இல்லாதது.

கண்களுக்கு எரிச்சல் இல்லாத சிங்காரின் சிறப்புத் தயாரிப்பு.



சிங்கார்

டீலக்ஸ் கண்மை

இது ஒன்றே கண்களுக்கு நலமான கண்மை.

everest/83/SH/179-tm

செல்வம், செல்வாக்கு, புத்திசாலித் தனம் அனைத்தும் கொண்ட டாமியன் தார்ன் வடிவில் சைத்தானின் மகன் உலகில் நடமாடிக் கொண்டிருக்கிறான். கடவுளின் மகன் மறுபடி உலகில் அவதரிக்கப்போகும் நாளும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தீமை அழிவதும், தூய்மை காக்கப்படுவதும் இப்போது பாதிரி டி கார்லோவின் பொறுப்பில் இருக்கிறது. தமது ஆறு சகாக்களிடம் ஆறு கத்திகளைத் தந்து விட்டுத் தம்மிடமே ஒன்றை வைத்துக் கொண்டார் அவர். ஓமன் கதையின் மூன்றாம் பாகம் THE FINAL CONFLICT என்ற தலைப்பில் திரைப்படமாகியுள்ளது.

இறுதிப் போராட்டம்

சென்ற இதழ் தொடர்ச்சி

அமெரிக்கத் தூதரகத்தில் நடந்த வரவேற்பு வைபவத்துக்குத் தன்னை வழக்கத்தை விடச் சற்று சிரத்தையுடன் அலங்கரித்துக் கொண்டாள் கேட் ரேனால்ட்ஸ். கேச அலங்கார நிபுணரிடம் ஒரு மணி நேரம் செலவிட்டுத் திரும்பியிருந்தாள். மிக விலையுயர்ந்த கவுன் அணிந்தாள். 'உனக்கு மேக் அப் அதிகம் தேவையில்லை' என்று அவளிடம் காலம் சென்ற அவள் கணவன் மட்டுமின்றி வேறு பல நண்பர்களான ஆண்களும் கூறியதுண்டு. உடை அவளை முழுமையாக மறைத்தாலும் அவள் அழகை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்திருந்தது. அவள் முகத்தில் உறுதி தெரிந்தது. அகன்ற கண்கள். ரோமானியச் சித்திரமாக விளங்கினாள். டாக்ஸியில் ஏறிக்கொண்டு மகனுக்குக் கையசைத்து விடை பெற்றாள். ''அம்மா! இந்த வயதுக்கு நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய்!'' என்று சற்று முன் அவன் கூறியிருந்தான். அவன் இலேசில் அப்படியெல்லாம் பேசக் கூடியவனல்ல. எனவே அவளுக்கு இன்று ரொம்பத் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி டாக்ஸி செல்கையில் துப்பாக்கி வெடித்துச் சிதறிப் போன ஆண்ட்ரு டாயிலின் முகம் அவள் கண்ணெதிரே சில கணங்கள் தோன்றியது. 'அப்பப்பா! எத்தனை பயங்கரமான தற்கொலை!' அன்று நிருபர்கள் கூட்டத்துக்கு வந்து முதலில் கதவைத் திறந்தவள் அவள்தான். அந்த நினைவில் இப்போதும் அவள் இலேசாக நடுங்கினாள்.

டாயிலின் மரணத்துக்குப் பின் வந்த புதிய அமெரிக்கத் தூதர் பதவி ஏற்றதுமே அவர் 'பி. பி. ஸி.யில் தனது டெலிவிஷன் நிகழ்ச்சியில் தோன்ற முடியுமா?' என்றுஅவன் ஃபோன் செய்து கேட்டான். 'அவன்



✖ பி.பி.ஸியின் டீவி நிலையம்—ஸ்டூடியோ நான்கில் டீவி நிருபர் கேட், பேட்டி காண்கிறாள் டேமியன் தார்னை-அவன்தான் சைத்தானின் மகன் என்பதை அறியாதவளாக!

கோரிக்கை பரிசீலிக்கப்படும்' என்று பதில் கிடைத்தது. பிறகுதான் இந்த வரவேற்புக்கு அழைப்பு வந்தது. அவன் நேரில் தனது கோரிக்கையை மறுபடி சமர்ப்பிக்க வாய்ப்பு அளித்திருக்கிறார்கள்.

மூக்குக்கண்ணாடி அணிந்து கடுமையாகத் தோற்றமளித்த ஒரு நபர் தன்னை அணுகுவதைப் பார்த்தான் கேட். ''ஹார்வி டீன்; தூதரின் அந்தரங்கக் காரியதரிசி'' என்று தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டான். கேட் தன்னை யார் என்று விளக்கினான். ''என் மனைவி பார்பரா'' என்று ஹார்வி அவனுக்குத் தன் மனைவியை அறிமுகம் செய்து வைத்தான். பிறகு கேட்டான்: ''அம்பாஸிடரை உனக்குப் பார்க்க வேண்டுமில்லையா?''

''ரொம்ப ஆர்வமாய் இருக்கிறேன்'' என்றான் கேட். அதற்காகத்தானே வந்திருக்கிறான்! ஏற்கனவே நீண்ட அறையின் மறுகோடியிலிருந்த அமெரிக்கத் தூதர் டேமியன் தார்ன் அவன் கண்ணில்தென்பட்டுவிட்டான். அவனிடமிருந்த கவர்ச்சியையும் உணரத் தொடங்கி விட்டான். கவர்ச்சி, அழகு, புத்திசாலித்தனமும் கூட! வேறென்ன? குறைபாடுகள்....? பழகினால்தான் தெரிய வரும்.

ஏகப்பட்ட விருந்தினருக்கிடையே வழி ஏற்படுத்திக் கொண்டு அவனை ஹார்வி அழைத்துப் போனான், டாமியனிடம். அறிமுகம் முடிந்ததும் கையில் மதுக் கிண்ணத்தை ஏந்தியபடி ''பிரிட்டன் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்றான் கேட்.

''ரொம்பப் பிடித்திருக்கிறது. இதுவரை நான் பார்த்த எல்லாமே அழகாக இருக்கின்றன'' என்றான் டாமியன், அவனைப் பார்வையால் மேலிருந்து கீழாக அளந்தபடி.

கேட் புன்னகைத்து அவன் பாராட்டை ஏற்றான். ''உங்களைச் சந்திக்க நான் அனுமதி வேண்டியிருக்கிறேன். அதாவது பி.பி.ஸி. சார்பில். அது உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''இதுவரை இது பற்றி எனக்கு யாரும் சொல்லவில்லையே? என்ன விவாதிக்க வேண்டும்? அரசியலா?''

''முக்கியமாக இளைஞர்கள் பற்றிய உங்கள் கருத்துக்களைக் கேட்டறிய விரும்புகிறேன். என் மகன் பீட்டர் உங்கள் விசிறி. அவனுக்குப் பன்னிரண்டு வயதுதான் ஆகிறது. ஆனால் யுவர்களைப் பற்றி நீங்கள் வெளியிடும் கருத்துக்களே உலகைக் காப்பாற்றக் கூடியதென்று நம்புகிறான்!''

ஹார்வி குறுக்கிட்டான். ''இஸ்ரேலியத் தூதர் கிளம்பிக் கொண்டிருக்கிறார்...''

டாமியன் அவன் கரத்தைப் பற்றினான். ''உன்னுடன் பேச ஆர்வமாயிருக்கிறேன். நாளை ஹார்விக்கு ஃபோன் செய். ஒரு நேரம் குறிப்பிடுவான். ஞாயிற்றுக் கிழமை சந்திப்போமா?...''

• • •

கண்காட்சிக்குச் சென்றால் ''காட்சிப் பொருளைத் தொடாதே'' என்ற அறிவிப்பு கண்ணில் படும். ஆனால் லண்டன் பிரிட்டிஷ் மியூஸியத்தில் அண்மையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு கண் காட்சி முக்கியமாகக் கண் பார்வையற்றவர்களுக்கு என உருவானது. இந்தக் கண்காட்சியில் பலதரப்பட்ட மிருகங்களின் சிலைகள் இடம் பெற்றிருந்தன. திருப்தி ஏற்படும் வரையில் இந்தச் சிலைகளைத் தொட்டுத்தடவிப் பார்த்து மகிழலாம். காட்சிப் பொருள்களில் ஒன்று ஆஞ்சநேயர் விக்கிரஹம்

தகவல்: ரிஸர்ச் அண்ட் ரெஃபரன்ஸ்



டிகார்லோவைச் சந்திக்க ஆறு பாதிரிகளும் வந்தனர். எல்லோரும் லண்டன் வந்தாயிற்று. அவர்களில் ஒருவனான மேட்டியஸ் பேசஆரம்பித்தான். ''அவனைப் பார்த்து விட்டேன்'' என்றான் மேட்டியஸ். ''சைத்தானின் மகனைச் சந்தித்து விட்டேன். நடைபாதையில் பூங்கா ஓரமாக வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்கள். அவன் — அவள் — அவள் மகன் — ஒரு நாய்.''

''யார் அந்த அவன்?''

''டெலிவிஷன் திருபர். ரொம்பப் பிரபலமானவன் போலும். பல பேர் வந்து அவனிடம் ஆட்டோகிராஃப் வாங்கினார்கள். தலைவரே! எனக்கு அனுமதி கொடுங்கள். சைத்தானின் மைந்தனை முதலில் பார்த்துவிட்டு வந்த எனக்கே அவனை அழிக்கும் பொறுப்பையும் வழங்குங்கள்!''

டிகார்லோ தலையசைத்தார். ''நீ அவனைப் பார்த்த கணத்திலேயே அவனும் உன் மனத்தைப் படித்திருப்பான். எதிர்பாராத தருணத்தில் அவனைத் தாக்க வேண்டும். அவன் அசையாதிருக்கும் நேரமாக இருக்க வேண்டும். உனக்குக் குறி தப்பாதிருக்க வேண்டும்.''

''அவன் உட்கார்ந்திருக்கும்போது அல்லது தூங்கும்போது அவனை அழிப்பது இலேசான காரியமில்லையே? தூதரகத்துக்குக் காவல் மிகுதி. அவன் வீட்டிலும் பலத்த காவல்.'' என்றார் பாதிரிகளில் ஒருவர்.

எல்லாரும் அமைதியானார்கள். யோசித்தார்கள். திடீரென்று மேட்டியஸ் சொன்னான்: ''அவன் அசையாமல் அமர்ந்திருக்கும் தருணம், மரணத்தை எதிர்பாராத தருணம் எனக்குத் தெரியும்... அதோ!''.

அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் அறையின் மூலையில் டெலிவிஷன் இருந்தது.

• • •

டெலிவிஷன் ஸ்டூடியோ வாசலில் டூரிஸ்ட் பஸ் வந்து நின்றது. அதிலிருந்து பலர் இறங்கி ஸ்டூடியோவைச் சுற்றிப் பார்க்க உள்ளே சென்றார்கள். அவர்களை அழைத்துப் போன 'கைட்' வாசலிலிருந்தே அவர்களுக்குப் பல விஷயங்களை விளக்கத் தொடங்கி விட்டான். டூரிஸ்டுகளில் ஒருவனாக நுழைந்தான் மேட்டியஸ். ஆனால் இப்போது அவன் பாதிரி உடையில் இல்லை. பெயரும் பெனிடோ என்று மாற்றிக் கொண்டிருந்தான். சுற்றுலாப் பயணிகளுள் ஒருவனாக டெலிவிஷன் ஸ்டூடியோவுக்குள் நுழைந்தவன் தருணம் பார்த்து, கவனங்கள் திரும்பியிருக்கையில் ''ஆண்கள்'' என்று அறிவித்த கதவைத் திறந்து நுழைந்தான். ஒரு கொட்டடிக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டான். தன்னுடன் வந்தவர்கள் எல்லாம் போய்விட்டிருப்பார்கள் என்ற நம்பிக்கை பிறக்கும்வரை காத்திருந்து பிரார்த்தித்தான். 'தன் அதிர்ஷ்டம் நீடிக்க வேண்டும்; டேமியன் தார்ன் அன்று டி.வி.நிலையம் வருகிறான்; கேட் அவனைப் பேட்டி காண்கிறாள்; ஆனால் அந்தப் பரந்து உயர்ந்த கட்டிடத்தில் எந்த மூலையில் எந்த ஸ்டூடியோவில் நடக்கிறது அந்த நிகழ்ச்சி?'

வெளியே வந்தான். டி.வி. நிலையத்திலேயே வேலை செய்யும் பலருள் ஒருவனைப் போல் — தன்னம்பிக்கையுடன் நடப்பது போல் — நடித்தான். பதினைந்து நிமிஷம் அலைந்த பிறகு ஒரு அறிவிப்புப் பலகை கண்ணில் பட்டது. அது சொல்லிற்று: ''டேமியன் தார்ன் பேட்டி — ஸ்டூடியோ நான்கு.'' நாலாம் நெம்பர் ஸ்டூடியோவைக் கண்டு பிடிக்க மேலும் பத்து நிமிஷங்கள் ஆயின. சுற்றி ஒரு நோட்டம் விட்டு விட்டுக் கதவைத் திறந்தான்; உள்ளே நுழைந்தான். இருட்டு அவனை வரவேற்றது. இனி அவன் செய்ய வேண்டியதெல்லாம் நிகழ்ச்சி ஆரம்பமாகும்வரை காத்திருப்பதுதான்.

நாற்பது நிமிஷங்கள் கழித்து டாமியன் தார்ன் வந்தான். காரியதரிசி ஹார்வி மன் பின்னோடு நடந்தான். மேக் அப் முடிந்ததும் அவனை ஒரு நிலைய உதவியாளன் அழைத்துப் போய் ஸ்டூடியோ நான்கில் கேட் அமர்ந்திருந்த நாற்காலிக்கு எதிர் நாற்காலியில் அமருமாறு சுட்டிக் காட்டினான். இதற்குள் கேட் முன்னுரையாகச் சில வார்த்தைகள் பேசியிருந்தாள். தார்னை நேயர்களுக்கு அறிமுகப்படுத்தி, புதிய அமெரிக்கத் தூதர் ஏற்கெனவே ஜான் எஃப் கென்னடியுடன் ஒப்பிடப்படுவதைத் தெரியப்படுத்தினாள்.



பல் வலியால் அவதியுற்ற மே. வங்க முதல்வர் ஜோதி பாசு, சமீபத்தில் கல்கத்தாவில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றபோது அதிர்ச்சியுற்றார்.

ஆம், பல் சம்பந்தமான சிகிச்சை அளிக்கும் ஒரு நூதன கருவி இங்கு கடந்த 10 வருடங்களாக ரிப்பேராக உள்ளது. இக்கருவிகளின் ஒயர்களை எலிகள் பாழடித்து விட்டனவாம்! அதுமட்டுமல்ல, இதனுள்ளிருந்த பல பாகங்கள் திருடப்பட்டு விட்டன! இக் கருவியின் விலை 35 ஆயிரம் ரூபாய்!

—சம்பத் குமாரி

ஆதாரம்: 'சண்டே'

அவரது வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளை வண்ணத் திரைப்படமாகக்காட்டி விளக்கினாள்.

இதற்கிடையில் அதே ஸ்டூடியோ நான்கில் உயரேயிருந்து தொங்கும் விளக்குகளின் குறுக்குச் சாரங்களின் மீதாக பெனிடோ மெல்ல மெல்ல நகர்ந்தான். கேட் இருக்கும் திசையில் இவன் நகர்ந்து கொண்டால்தான் அவளுக்கு எதிரே அமர்ந்திருக்கும் டாமியன் தார்னைக் குறிபார்க்க வசதி. இடுப்பில் உடைக்குள்ளே ஒளிந்திருந்த கத்தி உறைக்குள் இருந்தாலும் உறுத்தியது. சிறிது சிறிதாக யார் கவனத்தையும் கவராமல் இவன் சாரங்கள் மீதாக நகரவும் கேட் கூறிக் கொண்டிருந்தாள்: ''இதுவரை அமெரிக்கத் தூதர் தார்ன் வாழ்க்கையில் நடந்த சில முக்கிய சம்பவங்களைப் பார்த்தோம்; இப்போது அவரையே நேரில் பேட்டி காண்போம். இதோ, மிஸ்டர் தார்ன்!'' தார்னை நோக்கியிருந்த காமிரா இயங்கவும் அவர் திரையில் தோன்றினார். பிறகு மாறி மாறிப் பல காமிராக்கள் பல கோணங்களில் இயங்கப் பேட்டி தொடர்ந்தது.

''இவ்வளவு இளம் வயதில் வாழ்க்கையில் இவ்வளவு பெரிய பொறுப்புக்களா?'' என்று வியப்புடன் கேட்டாள் கேட்.

''அதற்கென்ன செய்ய? அலெக்ஸாண்டர் மாமன்னன் தனது ராணுவத்துக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றபோது அவனுக்கு வயது பதினாறுதானே!'' என்றான் டாமியன் தார்ன்.

மார்தட்டிக் கொள்வது போன்ற அவன் பேச்சு உயரே விளக்குகளுக்கிடையில் இருந்த பெனிடோவுக்குஅருவருப்பூட்டியது. கத்தியை உருவு முன்னர் இன்னும் சற்றே முன் நகர்ந்தான். தூரத்தைக் குறைக்க. அடுத்த கணம் அப்படியே உறைந்தான்! ஒரு இருகாணி கழன்று போயிருந்ததில் அவன் கனத்தைத் தாங்காமல் சாரம் சரிய. விளக்குகள் சில மடேர் மடேர் என்று தரையைத் தாக்கிக் குண்டு வெடிப்பது போன்ற பேரோசையுடன் பல்புகள் வெடித்துச் சிதற. கனமான நைலான் திரைகள் குப் குப்பென்று தீப் பற்றிக் கொள்ள, ஒரு கணம் திகைப்புக்குப் பின் அனைவரும் தப்பி ஓட முயல்கையில் ஒரே களேபரம்.

கீழே குதித்த பெனிடோ ஓட எத்தனிக்கையில் ஒரு விளக்குக் கேபிள் ஒயர் அவன்காலைச் சுற்றிக் கொண்டு தடுமாறச் செய்தது. தரையைத்தாக்கியவன் மீதுதிகுதிகுவென்றுஎரிந்து கொண்டிருந்த ஒரு திரைச் சீலை அறுந்து விழுந்தது. அதிலிருந்து தப்பிவிட முடியும் என்றுதான் அவன் நினைத்தான். ஆனால் முதலில் அவன் கேசம் தீப்பற்றிக் கொண்டது. பிறகு புருவங்கள், கண்ணிமைகள்... முகம்.. அவன் கூச்சலிட முயன்றான்: முடியவில்லை. குரல் எழுப்ப முடியாத அளவில் திக்குமுக்காடினான். புகை அவன் நெஞ்சை நிரப்பியது. அவன் எலும்புகள் மீதாகத் தசை நெருப்பில் வறுபட்டது.


டெக்னீஷியன்கள் இங்கு மங்கும் தலைதெறிக்க ஓட, டாமியன் அமைதியாகப் பார்த்தான் அந்தக் கருகிய சடலத்தை. அத்தனை கறுப்புக்கும்இடையில் வெண்மையாக ஏதோ பளபளத்தது. ஹார்வி டீனின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் அவ்வுடலை நெருங்கினான். குனிந்து அதை உருவி எடுத்தான். ஒரு கத்தி! சட்டென்று அதை மறைத்துக்கொண்டு ஹார்வி டீன் பின்தொடர, படர்ந்து வரும் நெருப்பிலிருந்து தப்பி, வெளியே ஓடினான் டேமியன் தார்ன்.

வீட்டை அடைந்து இரண்டு மிடறு ஜின்னை விழுங்கிய பிறகுதான் பேச முடிந்தது ஹார்வியினால். ''இப்படி ஒரு விபத்தை யார்தான் எதிர்பார்த்தார்கள்?'' என்றான்.

''விபத்து அல்ல அது: கொலை முயற்சி!'' என்றான் டேமியன் தார்ன். அவன் கரத்தில் ஏந்தி உயர்த்திப் பார்த்த கத்தி விளக்கொளியில் பளபளத்தது. டேமியனின் புன்னகை கொடூரமாயிருந்தது. (தொடரும்)

குமரி மாவட்டத்தில் 75000 தொழிலாளர்கள் முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கிறார்கள். இவர்களுக்கு ஆண்டில் 6 மாத காலம்தான் வேலை கிடைக்கிறது. மீதி 6 மாத காலம் கச்சாப்பொருள்கள் இல்லையென்று பூட்டி விடுகிறார்கள். கிலோ ஒன்றுக்கு 60 பைசா கூலி கிடைக்கிறது. மற்றபடி ஒரு தொழிலாளிக்கு நியாயமாக கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் கிடைப்பதில்லை. இந்தத் தொழிலாளிகளுக்கு நிரந்தர வேலை கிடைக்க வேண்டுமானால் மத்திய மாநில அரசுகள் முந்திரிப் பருப்பு இறக்குமதி செய்ய வழி வகை செய்ய வேண்டும்.

—தா. கொழுந்துவேல்






தென் ஆப்பிரிக்காவில் உள்ள தங்கச் சுரங்கங்களில் வேலைக்குச் சேரச் செல்லும் தொழிலாளர்களுக்குக் கடுமையான பயிற்சிகள் கொடுக்கப் படுகின்றன. ஒரு உஷ்ணமான அறையில் குதித்துக் குதித்துப் பழக வேண்டும். முதலில் நிமிடத்திற்கு 12 முறை குதித்துப் பழகும் இவர்கள் சில நாட்களில் நிமிடத்திற்கு 20 முறை குதித்துப் பழக வேண்டும். இதில் வெற்றி பெறுபவர்களையே வெப்பத்தையும், காற்று அழுத்தத்தையும் தாங்கக் கூடிய சக்தி படைத்தவர்கள் எனக் கருதி, சுரங்கங்களில் வேலை செய்ய அனுமதிக்கிறார்கள்.

—சாசவன்

நியூட்ரமுல் சக்தி.

சேம்பியன்கள் தேர்ந்தெடுக்கும் சக்தி.

நியூட்ரமுல். அமுல் பால்வளம். அருமையான மால்ட்.
ஆரோக்கிய வைட்டமின்கள். ஆர்வமிகு புரதம்.
ஆதார உலோகதாதுக்கள். சப்புக் கொட்டிட சாக்கலேட்...
இவ்வளவுக்கும் விலை மலிவு—போர்ன்விடா, பூஸ்ட்.
மால்டோவா எதனையும் விட. மறவாதீர்கள் ஐஎஸ்ஐ தர
முத்திரை தாங்கியது நியூட்ரமுல் ஒன்றுதான்.
விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.



உயரம், வலிமை, உடல்திடம்--
பெருக்குவது எப்படி ?

பார்த்தறியாச் சலுகை: பலம்பெருக்கப் புத்தகம்!

NUTRAMUL, P.O. BOX 10148, BOMBAY-400 001. kk
அன்புள்ள நியூட்ராமுல்,
தாராசிங்கின் "ஹெல்த் இன்க்ரீஸ், ஸ்ட்ரெங்த் அண்ட் ஃபிட்னஸ்" புத்தகத்தை தயவுசெய்து எனக்கு அனுப்பிவைக்கவும். ரூ. 1.50 மதிப்புள்ள தபால் வில்லைகளோடு, நியூட்ராமுல் 500 கிராம் டின் வாங்கியதற்கான ரொக்க ரசீதையும் இத்துடன் இணைத்துள்ளேன்.


பெயர் ______________________
(கொட்டை எழுத்துக்களில்)

முகவரி ______________________

விற்பதல் விடுப்பவர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/76/TM/82

அரசு நடத்தும் அநியாய வியாபாரம்



சமீபத்தில் ஒரு பேப்பர்க்கடையில் நான் கண்ட காட்சி என்னை அதிர்ச்சி யடைய வைத்தது.

குறிப்பிட்ட வாரப் பத்திரிகை ஒன்றைக் கேட்டு வந்தார் வாசகர் ஒருவர். அந்தப் பத்திரிகை வருவதற்குக் கொஞ்ச கால தாமதமாகும் என்று கடைக்காரர் சொல்ல, அதே கடையில் வைக்கப்பட்டிருந்த லாட்டரி சீட்டுக்கள் மீது வாசகர் பார்வை பாய்ந்தது. நீட்டிய ஒரு ரூபாய்த்தாளைப்பையில் திரும்பப் போடாமல் கடைக்காரரிடமே கொடுத்து ஒரு லாட்டரிச் சீட்டை உருவிக் கொண்டு போனார்.

அன்றைக்கோ அல்லது அடுத்த நாளோ அவர் தான் வாங்க நினைத்த வாரப் பத்திரிகையை வாங்கியிருப்பாரா என்பது சந்தேகமே!

பேப்பர்க் கடைக்காரரை விசாரித்தேன். அவர் நீளமாகக் கொடுத்த விளக்கம் என்னை அதிர்ச்சியடைய வைத்தது.

''பத்திரிகை வியாபரத்தை விட லாட்டரிச் சீட்டு வியாபாரத்தில் எனக்கு லாபம் அதிகம். சொல்லப் போனால் பத்திரிகை வாங்க வருபவரை விட லாட்டரிச் சீட்டு வாங்க வருபவரைத்தான் நான் அதிகமாகக் கவனிக்கிறேன். பத்திரிகை விற்பதால் எனக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் கம்மி. சீட்டு விற்பனையில் நிச்சயமான நிரந்தர வருமானம் உண்டு. பத்திரிகைகளில் சிலவற்றின்நியதிப்படி விற்பனையாகாதஅவற்றின் பிரதிகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதில்லை. ஆகவே அந்தப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை எனக்கு நஷ்டம்தான். லாட்டரிச் சீட்டுக்களைப் பொறுத்தவரை என்னிடம் தங்குவதில்லை. அப்படியே தங்கினாலும் ஏற்கனவே விற்பனைக் கமிஷன் கழித்துக் கொண்டுதான் அந்தச் சீட்டுக்களை வாங்குகிறோம் என்பதால் அந்த நஷ்டத்திலும் கொஞ்சம் லாபம் உண்டு.

லாட்டரிச் சீட்டுக்களைப் பொறுத்தவரை இன்னொரு லாபமும் உண்டு. என்னிடம் விற்பனையாகாத டிக்கட்டுக்களுக்குப் பரிசு விழலாம். அல்லது என்னிடம் விற்பனையான டிக்கட்டுகளுக்குப் பரிசு கிடைத்தால் எனக்குக் கணிசமான கமிஷன் தொகை கிடைக்கும்.

பத்திரிகை விற்பனை அப்படி இல்லையே! நாளுக்கு நாள் புதுப் புதுப் பத்திரிகைகளாக வந்து குவியக் குவிய வாசகர்களின் எண்ணிக்கை அதற்கேற்றாற்போல அதிகரிப்பது இல்லை. குறிப்பிட்ட ஒரு சில பத்திரிகைகளுக்கு ஆரம்ப நாள் முதலான தொடர்ந்த ஆதரவு எப்படியோ நீடித்துக் கொண்டு வருகிறது. புதுப் பத்திரிகைகளும் இத்தனை ஆயிரம் அச்சடித்தால் போதும் என்று குறைந்தபட்ச எண்ணிக்கையுள்ள விற்பனையோடு திருப்தி யடைந்து விடுகின்றன. புது வாசகர்கள் தனித் தனியே புத்தகம் வாங்கிப் படிப்பதை விட சர்குலேஷன் லைப்ரரியில் உறுப்பினராகி மாதா மாதம் குறைந்தபட்சத் தொகை செலுத்தி நிறையப் புத்தகங்கள் படிக்கும் வழக்கத்தை மேற்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட புது வாசகர்களில் சிலர் பத்திரிகையை எப்படியாவது ஓசியில் படித்து விடலாம்: அதிர்ஷ்டத்தைத் தான் ஒருவரால்தான் அடைய

முடியும், வேண்டும் என்ற கருத்தில் பத்திரிகை வாங்கும் காசில் லாட்டரிச் சீட்டு வாங்கிக்கொள்கிறார்கள்.

நானும் லாட்டரிச்சீட்டு முடிவைத்தெரிந்து கொள்வதில் அவர்கள் காட்டும் ஆர்வத்துக்குச் சற்றும் குறையாமல் ஆவல் உடையவனாக இருக்கிறேன். அதனால் பத்திரிகை வாங்குகிறவரை விட லாட்டரி சீட்டு வாடிக்கையாளரைக் கவனிப்பதில் குறியாக இருக்கிறேன். லாட்டரிச் சீட்டு விற்பனைதான் எனக்கு முதல்: பத்திரிகை விற்பனை இரண்டாம் பட்சம்தான்.''

பொருள் விற்பனையும் அதை வாங்குதலும் சமுதாயப் பொருளாதாரப் பரிவர்த்தனை. அந்த உயரிய பரிவர்த்தனையை லாட்டரி சீட்டு வியாபாரம் நகைப்புக்கிடமாக்கிவிட்டது. கொஞ்சம் கூட உழைப்பில்லாத நம்பிக்கை, கற்பனை, அதிர்ஷ்டம் இவற்றையே மூலதனமாகக் கொண்டு செய்யப்படும் லாட்டரிச் சீட்டு விற்பனைஏதோ ஒரு நிச்சயமான பிரதி பலனைக் கொடுக்கக் கூடிய பிற பொருள் வியாபாரத்தை நசித்து வருவது பயங்கரமான உண்மை.

பத்திரிகை விற்பனையை விடுங்கள்: பிற சிறு பொருள் வியாபாரிகளும் இதே போல லாட்டரிச் சீட்டு வாங்கி விற்க ஆரம்பித்தால் என்ன ஆவது?

லாட்டரிச் சீட்டு ஒழிக்கப்பட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் 'லாட்டரிச் சீட்டு விற்பவர் அதே கடையில் வேறு எந்தப் பொருளையும் விற்கக் கூடாது' என்று ஓர் உத்தரவையாவது அரசு பிறப்பிக்க வேண்டும்

பிரபு சங்கர்

புகைப்படம்: உத்ரா

இரண்டாவது தலைநகரம் திருச்சியா? நெய்வேலியா?

இரண்டாவது தலைநகராகக் கருதப்பட திருச்சியை விடப் பல விதங்களிலும் மேலான இடம் தமிழகத்தில் இல்லையா? உண்டு. அதுதான் நெய்வேலி. நெய்வேலிக்கு வடக்கில் பண்ருட்டிக்குத் தெற்கில் (சென்னை-தஞ்சாவூர் நெடுஞ்சாலை ஓரத்தில்) நெய்வேலி டவுன்ஷிப்பின் விரிவாக்கமாகப் புதிய தலைநகரை அமைக்கலாம். இவ்விடத்தில் உள்ள அனுகூலங்கள்:

1. தாராளமான மின் வசதி (சுமார் 3000 மெகாவாட்).

2. வானம் பொய்த்தாலும் கிருஷ்ணா, காவேரி, வரண்டாலும் தாராளமான நெய்வேலி நிலத்தடி நீர் வசதி. வீராணம் திட்டக் குழாய்களைப் பயன்படுத்தி வீராணம் நீரையும் உபயோகப்படுத்தலாம்.

3. உற்பத்தி செய்யப்படும் இடத்திலேயே மின்சாரத்தைப் பயன்படுத்தினால், மின்சாரத்தை எடுத்துச் செல்லும்போது வெப்ப ரூபமாக ஏற்படும் 20 சதவீத இழப்பு தவிர்க்கப்படும். மலிவு விலை மின் சாரத்தால் மின் அடுப்பு வைத்துக்கொள்ளலாம். நெய்வேலி லிகோலையும் பயன்படுத்தலாம்.

4. நெய்வேலி அருகில் தலைநகரம் அமைக்கச் செம்மண் தரிசு நிலங்களையும், முந்திரிக் காடுகளையும்தான் ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கும். (திருச்சி போல் நன்செய் நிலங்கள் பாதிக்கப்படாது).

5. பெரும் ஆறுகள் எதுவுமில்லை.எனவே வெள்ள அபாயம் இல்லை.

6. நெய்வேலியில் திருச்சி போலோ சென்னை போலோ அடைமழையோ, சூறாவளியோ, சித்திரைச் சுழலோ கிடையாது.

7. இங்குள்ள தட்ப வெப்ப நிலை எகிப்திய தட்ப வெட்பத்திற்கு இணையானது. காலரா, மலேரியா மற்றும் வியாதிக் கிருமி பரவுவதற்கு ஏதுவல்லாத 'ஆன்டி செப்டிக்' தட்ப வெப்பம்.

8. நெய்வேலி அருகில் நில அதிர்ச்சியோ, பூகம்பமோ ஏற்படுவதற்குப் பல லட்சம் ஆண்டுகள் கழித்துக்கூட வாய்ப்பில்லை.


9. 40 கி. மீ. தொலைவில் அண்ணாமலை பல்கலைக் கழகம் உள்ளது. இங்கு 7000 பேர் படிக்கலாம். ஏற்கனவே ஆயிரக் கணக்கான பேர் நெய்வேலி,பண்ருட்டி,கடலூர்,சீர்காழி மாயவரம் போன்ற இடங்களிலிருந்து அண்ணாமலை சென்று படித்து வருகிறார்கள்.

10. டீசல் பஸ்களைத் தவிர மின்சார பஸ்கள், மின்சார டிராம்கள், மின்சார ரெயில்கள், கயிற்று வழிகள் (Rope ways) போன்ற மலிவான மின்னல் வேக மின்சார போக்குவரத்துச் சாதனங்களை அமைக்கலாம்.

சுருக்கமாகச் சொன்னால், பஞ்சப் பாட்டில்லாத, ஆரோக்கியமான அழகான கனவு லோகமாக இந்நகரம் அமையும்.

-எம். பி. கிருஷ்ணராஜ்

நெய்வேலி படம் — நன்றி: நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், சென்னை.





கல்கி ஓவியர் திரு விநு அவர்களின் குமாரி சௌபாக்கியவதி இந்திராணிக்கும், திருச்சி லேட் திரு K. தியாகராஜன் (இந்துஸ்தான் லீவர்) அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ரெங்கசாமி என்கிற குமாருக்கும் சென்ற மாதம் 18ந்தேதி சென்னையில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திரு சதாசிவம் அவர்களும், திருமதி M. S. சுப்புலட்சுமி அவர்களும் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். மாலையில் நடந்த வரவேற்பிற்கும் மாஸ்டர் U. ஸ்ரீநிவாஸ், மாண்டோலின் கச்சேரிக்கும் ஏராளமான நண்பர்களும் பிரமுகர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்.

வீட்டுக்கு வீடு ஆலயம்


தெய்வ தரிசனம்

கேரள நாட்டைப் பற்றிப் பல சுவையான கதைகள் உண்டு. தமிழ் நாடாகவே விளங்கிய நாடு சேர நாடு. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற மணியாரத்தைத் தமிழ் மொழிக்கு வழங்கிய நாடு சேர நாடு–இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் அவன் தந்தை பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் இவர்கள் ஆண்ட நாடு.

பிற்காலத்தில் வடமொழி ஆதிக்கம் அதிகமாகி மொழி மாறுதல்களை அடைந்து மலையாளமாகிவிட்ட பிறகும் பல மகான்கள் அவதரித்த நாடாக விளங்குகிறது. ஆதி சங்கரர் அவதரித்த நாடு. நாராயண பட்டத்திரி போன்ற மேதைகள் உலவிய நாடு. பூந்தானத்தைப் போன்ற எளிய பக்தர்கள் வாழ்ந்த நாடு.

ஒரு காலத்தில் நாகரிகம் மிகுந்த உலக நாடுகளின் கவனம் முழுவதும் இந்தச் சேர நாட்டின் மீதே இருந்தது. கரும் பொன் என்று கூறப்பட்ட மிளகு, லவங்கம், ஏலம், அரிய இரத்தினங்கள் இவற்றை வெளி நாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்து வந்த நாடு சேர நாடு. இந்த மணமிக்க பொருள்களுக்காக எத்தனை கப்பல்கள்! எத்தனை படைகள்! எத்தனை யுத்தங்கள்! கோழிக்கோடு ஒரு முக்கிய துறைமுகமாக விளங்கியது.

சமுத்திரத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய கோழிக்கோடு அரசர்களை ஸாமுத்திரி என்று அழைத்தார்கள். சைலா அப்தீச்வரர் என்பது ஸாமுத்திரியாக மருவியது என்று கூறுவார்கள். கோழிக்கோடு குன்றிலிருந்து




சமுத்திரத்தை ஆண்டவர்கள் ஸாமுத்திரிகள்.

பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் கேரளத்தில் கோவில்களே அரசாட்சி செய்தன என்று கூறலாம். கோவிலில் குடிகொண்டுள்ள தெய்வம்தான் அரசர். எல்லாக் காரியங்களுமே அவர் பெயரால் செய்யப்பட்டன. கோவில் அதிகாரிகள் தளியாதிரிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஆட்சி முறை எப்படித் தொடங்கியது?

ஆழ்வார்களும் நாயன்மார்களும் நாடெங்கிலும் பாடிப் பரவச் செய்த பக்தி வெள்ளப் பெருக்கு கேரளத்திலும் பாய்ந்தது. அந்த வெள்ளத்தின் பயனாக ஆங்காங்கே இருந்த கிராம அதிகாரிகள் தங்கள் கிராமங்களைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்து விட்டனர். 'ஈச்வரனுடைய ஆட்சியில் அவன் சித்தப்படி நடப்போம்' என்ற சிறந்த ஒழுக்கத்துடன் மக்கள் வாழ்ந்தார்கள். திருச்சூர் மூன்று கிராமங்கள் சேர்ந்தும், குருவாயூர் ஐந்து கிராமங்கள் சேர்ந்தும் உருவாயிற்று என்று கூறுகிறார்கள்.

இறைவன் அரசரானபடியால் அன்றன்றைக்கு வரவு செலவுக் கணக்குகள் கூட அவரது சந்நிதியில் சுவடிகளில் எழுதிப் படிக்கப்பட்டது. உற்சவ காலங்களில் பொது மக்கள் தங்கள் குறைகளை அதிகாரிகளிடம் எடுத்துக் கூற வாய்ப்பளிக்கப்பட்டது. ஒரு பெண்ணுக்குத் தகுந்த வரன் கிடைக்கவில்லை என்று ஒரு தந்தை முறையிட்டால் அந்தக் கோயிலின் உற்சவமே நின்றுவிடும். தகுந்த வரன் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தபிறகே உற்சவம் நடக்கும்.



ஆனந்தி

கேரளத்திலும் கோயில்கள், கல்வி கலைகள், பண்பாடு, பக்தி இவற்றின் உறைவிடமாகத் திகழ்ந்தன. லஞ்சம் என்பது என்னவென்றே யாரும் அறிய மாட்டார்கள். கோவிலின் சொத்தில் யாராவது கை வைத்து விட்டால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்.


கோவில்கள் அரசாண்ட நாட்டில் வீட்டுக்கு வீடு தரவாடி அம்பலம் என்ற சிறு கோயில்கள் எழுந்தன. குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து இந்தக் கோவிலில் வழிபாடு நடத்தினார்கள். உற்சவங்கள் செய்து மகிழ்ந்தார்கள். இன்றுகூட தரவாடி அம்பலம் உள்ள வீட்டை விற்க நேர்ந்தால் வாங்கக் கூடியவர்கள் பூஜை முறைகளை வழுவாமல் செய்யக் கூடியவர்களா என்று தெரிந்து கொண்ட பிறகே விற்பார்களாம்.


கேரள நாட்டுக் கோயில்களில் ஒரு முக்கிய விசேஷம் அங்கே சைவ வைணவ பேதம் இல்லை. கோழிக்கோட்டில் தளி என்றழைக்கப்படும் ஆலயத்தில் சிவபெருமான், பெருமான் இருவருக்கும் சந்நிதிகள் எதிரும் புதிருமாக இருப்பதைக் காணலாம்.

எத்தனையோ அரசர்கள் கோவில்கள் கட்டியதைப் பற்றி அறிந்திருக்கிறோம். இந்தத் தளியைக் கட்டியவர் ஒரு அரசரல்ல, தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த பாக்கனார் என்ற ஞானி என்பதை அறியும்போது நெஞ்சில் ஒரு கிளர்ச்சியே உண்டாகிறது.

கோழிக்கோடு தளி எப்போது எழுந்தது என்பதைக் கூற முடியாது. நிச்சயமாக ஆயிரம் வருடங்களுக்கு மேல் ஆயிற்று என்று கூறலாம்.

அதிகாலை நேரம். வாத்திய முழக்கம் கேட்கிறது. ஆவலுடன் உள்ளே செல்கிறோம். பெரிய பிராகாரம். சற்று இடது புறமாக ஒரு சிறிய கோவில். அதில் நரசிம்ம மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். வலது புறம் வாத்திய முழக்கம் கேட்கிறது. ஸ்ரீமந் நாராயணனைத் துயில் எழுப்புகிறார்கள். ''தத மம் தததம்'' என்ற வாத்திய ஒலியைத் தவிர வேறு சப்தம் இல்லை. கூடியிருப்பவர்கள் தந்திரத்தால் கட்டுப்பட்டவர்கள் போல நிற்கிறார்கள். மணிக் கதவம் தான் திறந்து தீபாராதனை ஆகிறது. அதன் பிறகு சிவன் கோயிலின் உள்ளே சென்றால் நுழைந்த உடனே இரு புறமும் பெரிய திண்ணைகள். வண்ணம் பூசிய மரத் தூண்கள், மேல் கூரையைத் தாங்கி நிற்பது மிக அழகாக இருக்கிறது.





பிறகு நமஸ்கார மண்டபம். பிராகாரத்தை வலம் வரும்போது விநாயகப் பெருமானுக்கு இரண்டு சந்நிதிகள் இருப்பதைப் பார்க்கிறோம். கண நாயகருக்கு நெய் அப்பம் ரொம்பப் பிடிக்குமாம். காலையிலிருந்து மாலை வரை நெய்யப்பம் செய்து நைவேத்தியம் செய்து கொண்டே இருப்பார்களாம்.

பிரதட்சிணம் செய்துவிட்டு ஈசுவரனைத் தரிசனம் செய்கிறோம். முக மண்டபம் நீண்டு இருப்பதால் லிங்க வடிவம் சரியாகத் தெரியவில்லை. பலவித விளக்குகள் அமைதியாகச் சுடர் விட்டு மஞ்சள் நிறமாக எரிகின்றன. பிறைகளும் நாகமும் சூடி முக்கண்ணன் காட்சி தருகிறார்.

'தேடிக் கண்டு கொண்டேன்!
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணா தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்!''

என்ற அப்பர் சுவாமிகளின் வாக்கு நினைவுக்கு வருகிறது. ஒவ்வொரு கோவிலாகச் சென்று இறைவனை வழிபடுவதெல்லாம், அவனை உள்ளத்தில் கண்டு கொள்வதற்காகத்தான் என்ற உண்மை திடீரென்று புலனாகிறது.

இந்தக் கோவிலில் ஒரு வாள் உறையோடு வைக்கப்பட்டிருக்கிறது. தம்முடைய பரந்த ராஜ்ஜியத்தைத் துறந்து மெக்காவுக்குச் சென்றுவிட்ட சேரமான் பெருமாளின் வாள் இது என்று கூறப்படுகிறது. சேரமான் பெருமான் தன் ராஜ்யத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துத் தானம் செய்து விட்டார். காசிக்குச் சென்றிருந்த மானச்சன் விக்கிரமன் என்ற இருவரும் திரும்பி வந்து அரசரைப் பார்த்தபோது எஞ்சியிருந்தது கோழிக்கோடு குன்றும் அவருடைய உடைவாளும் தான். ஆகவே அந்தக் குன்றை அவர்களுக்குக் கொடுத்து வாளையும் கொடுத்து ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொள்ளும்படி அருளினார். அவர்களில் மானச்சன் வீர சுவர்க்கம் எய்தவே விக்கிரமன் அரசராகி மான விக்கிரமன் என்ற பெயரில் ஆட்சி செய்தார். மிகவும் பிரசித்தியடைந்து ஸாமுத்திரி என்று புகழ் பெற்றார்.

ஒரு சமயம் இந்தத் தளி, போல நாட்டு அதிபதியான பொருளாதிரியின் வசம் இருந்தது. ஸாமுத்திரி வழிபடுவதற்காகத் தளிக்கு வந்தார். பொருளாதிரி அவரைச் சரியாக வரவேற்று உபசரிக்கவில்லை. இதனால் கோபமடைந்த ஸாமுத்திரி தன் மந்திரியிடம் யோசனை கேட்டார். ''க்ஷத்திரியர்கள் செய்யக் கூடியது இரண்டுதான். ஒன்று பணம் கொடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது யுத்தம் செய்து ஜெயிக்க வேண்டும்'' என்றார் மந்திரி.

நூறு காவலர்கள் பாதுகாத்த கோயிலை ஸாமுத்திரியின் ஆறு நம்பிக்கையான ஆட்கள் பிடித்துக் கொடுக்கச் சித்தமானார்கள். நூறு பேரையும் வென்று ஸாமுத்திரியை வழிபாட்டுக்கு அழைத்தார்கள். ஸாமுத்திரி கோவிலுக்கு ஏகப்பட்ட மான்யங்களை வழங்கினார்.

கோவிலில் பட்டதானம் என்ற ஒரு விழா மார்கழி மாதம் ரேவதி நட்சத்திரத்தில் நிகழும். தென்னிந்தியா முழுவதிலுமிருந்து சிறந்த பண்டிதர்கள் வந்து குழுமிவிடுவார்கள். வாதப் பிரதி வாதங்கள் நடைபெறும். இதில் வென்றவருக்கு பை நிறையப் பொற்காசுகளை அளித்துக் கௌரவிப்பார், அரசர்.

ஒரு சமயம் இந்தப் பட்டதானம் நடந்தபோது காஞ்சிக்கருகிலிருந்து ஒரு பெரிய பண்டிதர் வந்தார். உத்தண்ட சாஸ்த்திரிகள் என்பது அவர் பெயர். தன் கோலைத் தூக்கிப் பிடித்து வாதத்துக்கு அழைப்பாராம். ஆகவே உயர்ந்த கோலையுடையவர் என்றே பெயர் வந்து விட்டது அவருக்கு. இவர் பல தடவை பட்டதானப் பரிசைத் தட்டிக் கொண்டு போய் விட்டார். (பட்டருக்குக் கொடுக்கப்படும் தானம் பட்டதானம்)

உத்தண்ட சாஸ்திரிகளை ஜெயிக்க வேண்டுமென்று நம்பூதிரிகளுக்கு ஆசை. உருவத்தில் மிகவும் சிறியவரான காகசேரி தாமோதர பட்டத்திரி என்பவரை வாதம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். இவருடைய உருவத்தைப் பார்த்த உத்தண்ட சாஸ்திரிகள் பரிகாசமாக ''ஆகாரம் ஹ்ரஸ்வ'' (உருவம் சிறியது) என்று கூறினாராம். உடனே தாமோதர பட்டத்திரி ''ஆகாரம் திர்க்க'' (ஆவன்று நீண்ட ஒலியுடையது) என்று கூறினாராம். அதிலேயே அவர் வெற்றி தொடங்கி விட்டது. எல்லா வாதப் பிரதி வாதங்களையும் ஜெயித்து பட்டதானத்தைப் பெற்றார் பட்டத்திரி.

தளியில் சீவேலி நடக்கும் அழகு மனத்தைக் கவருகிறது. முதலில் பலி பீடங்களுக்குப் பூஜை செய்து பலி தூவல் என்ற சடங்கை முடிக்கிறார் நம்பூதிரி. தூவப்படும் அன்னத்தைக் காக்கைகள் கொத்துகின்றன. உடனேயே பலிபீடம் சுத்தம் செய்யப்படுகிறது. இதன் பிறகு வாத்திய முழக்கத்துடன் உத்ஸவ மூர்த்தியைத் தூக்கிக் கொண்டு பிராகாரத்தில் மும்முறை வலம் வருகிறார்கள். பிரபையுடன் கூடிய சிறிய மூர்த்தியை சர உடையோடு அன்போடு பெருமிதத்தோடு அணைத்துத் தூக்கிக்கொண்டு நம்பூதிரி வலம் வருவது ஈசனுடைய அருளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கொடுப்பது போல் இருக்கிறது.

இதைப் போலவே ஸ்ரீமந் நாராயண மூர்த்திக்கும் சீவேலி முடிந்த பிறகு சந்தனம் பிரஸாதமாக வழங்கப்படுகிறது.

''தலையே நீ வணங்காய். கைகாள் கூப்பித் தொழீர் வாயே வாழ்த்து கண்டாய்'' என்று பாடிக் கொண்டே வெளியே வருகிறோம். வாதில் மாடத்தில் ஒரு பகவதி சந்நிதி இருக்கிறது. அதைத் தொழுகிறோம்.

இந்த மண்டபத்தில்தான் சாக்கியார் கூத்து, கூடியாட்டம் முதலிய நாட்டிய நாடகங்கள் நடைபெறுகின்றன.

கூடியாட்டம் என்பது பரத முனிவருடைய நாட்டிய சாஸ்திரத்தைப் பின்பற்றி இன்றும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த நாடகத்துக்குப் பெரு மதிப்பு உண்டு.

விதூஷகனுக்கு முக்கிய பங்கு அளிக்கப்படுகிறது. தவறு செய்கின்ற எவரையும் பரிகசித்து அதன் மூலம் திருத்தும் உரிமை விதூஷகனுக்கு உண்டு. ஒருவர் தாமதமாக வந்தால் அதைக் கூடச் சுட்டிக் காட்டுவான் விதூஷகன். ஸாமுத்திரியைக் கூடக் கிண்டல் செய்வான். அதிகாரிகள் தவறு செய்தால் எள்ளி நகையாடுவான். இப்படி அரசர்களையும் அதிகாரிகளையும் விமரிசிக்கும் சர்வ சுதந்திரம் நாடகக் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்டிருந்ததை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. நாகரிகம் மிகுந்த இந்த நாளில், ஜனநாயக நாட்டில் பத்திரிகை சுதந்திரத்துக்காகவும் அரசை விமரிசிக்கும் உரிமைக்காகவும் போராடும் நிலையில் இருக்கிறோம் நாம்.

சாக்கியார் கூத்திலும் இந்த உரிமையை அளித்திருந்தார்கள். அவர்கள் இடித்துக் காட்டினால்கூட அரசர் அவர்களை எதுவும் செய்துவிட முடியாது.

இப்படிக் கலைகள் மூலம் பொதுமக்களுக்கும், அரச குடும்பத்தினருக்கும் தொடர்பு ஏற்படுத்தும் கூடமாகவும் கோவில்கள் திகழ்ந்தன. இந்தப் பெரும் பாரம்பரியத்தை நாம் பெருமையுடன் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

புகைப்படம்: முகுந்த் பத்மநாபன்

மனைவி (டைரக்டரிடம்): என்னங்க ராத்திரி தூக்கத்திலே சத்தம் போட்டீங்க!

டைரக்டர்: நான் ஆவிகளைப் பற்றிப் படமெடுக்கிறது தெரிஞ்சு ஒரு ஆவி இராத்திரி வந்து சான்ஸ் கேட்டுச்சு!

—ஆ. ராஜேந்திரன்



டில்லியிலிருந்து...



பறிப்பு

நுழைவு வரியைப் பத்திரிக்காரசாரமாயும் (சில சமயம் சாரமில்லாமலும்) தமிழ்நாட்டில் விவாதித்துக் கொண்டிருக்கும் இச்சமயம் டில்லியில் 'ஆக்ட்ராய்' இருக்கும் செய்தியை எழுதுவது பொருத்தம் என எண்ணுகிறேன்.

ஆக்ட்ராய் சாவடிகளில் எல்லாம் யார் யார் எப்படிப் ''பணி'' புரிகிறார்கள் என்ற விவரங்களை எழுதப் போவதில்லை. புதுடில்லி ரயில்வே ஸ்டேஷனில் ஒரு சாவடி இருக்கிறது. உங்கள் பழைய ஸ்கூட்டரைக் கொண்டு வந்தால்கூட வரி கட்ட வேண்டும் என்பார்கள். சொந்த உபயோகத்துக்கு என்று சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அந்தச் சமயம் திடீரென்று ஒரு ஆசாமி தோன்றுவார். கிசுகிசுப்பார். அப்புறம் என்ன? பேரம்தான். ''அதெப்படிங்க கட்டுப்படியாகும்? நாலு பேருங்களாச்சே'' என்பார். இரண்டு நாள் பயணம் செய்த களைப்பின் காரணமாகவும், ''எவ்வளவோ செலவு செய்கிறோம் போகட்டும்'' என்ற எண்ணத்தாலும் பர்ஸைத் திறக்கிறார்கள் பலர்.

சில சமயம் பிளாட்பாரத்தில் உங்கள் சாமான்களை இறக்கியவுடனே, போர்ட்டர்கள், டெம்போக்காரர்கள் சூழ்ந்து கொண்டு ''மொத்தமாகப் பேசி முடித்து'' விடுவார்கள். பேக்கேஜ் டீல்!

டில்லிக்கு வந்தவர்களைக் கேட்டால் கதை கதையாகச் சொல்வார்கள், தங்கள் 'ஆக்ட்ராய்' அனுபவத்தை!

எரிப்பு

எட்டரை மாதப் பிள்ளைத் தாய்ச்சிப் பெண்ணை ஈவிரக்கமில்லாமல் உயிருடன் கொளுத்திய குற்றத்துக்காக அவளது கணவன், மைத்துனன், மாமியார் ஆகிய மூவருக்கும் தூக்குத் தண்டனையை டில்லி நீதிபதி விதித்திருக்கிறார். அற்புதமான ஜட்ஜ்மெண்ட். நெருப்பில் எரிந்து கொண்டிருக்கும் பெண்ணைக் காப்பாற்றச் சென்ற அண்டை வீட்டார், கம்பளம் தருமாறு கேட்டபோது, இந்த மும்மூர்த்திகளும் கொடுக்க மறுத்து விட்டனராம். இவர்கள் நீதிபதியிடம் தங்கள் குற்றத்திற்குக் கருணை காட்டும்படி வேண்டிக் கொண்டார்களாம்! குற்றத்தை மறைக்க உடந்தையாக இருந்த போலீஸ் அதிகாரிகளையும் டாக்டரையும் நீதிபதி நன்றாகச் சாடியிருக்கிறார். வரதட்சணைக் கொடுமையை இந்தத் தீர்ப்பு குறைக்கும் என்று எதிர்பார்ப்போமாக.

சிறப்பு

அகில இந்திய அளவில் திருச்சி பி. எச். இ. எல் பள்ளி மாணவி மாதவி அதிக மதிப்பெண் பெற்றுள்ளாள். டில்லி மாநில 'ப்ளஸ்டூ' பரீட்சையில் முதல் இடம் பெற்றிருப்பவள் லதா நாராயணன் (400க்கு 386) டில்லித் தமிழ்ப் பள்ளி (மந்திர் மார்க் கிளை) மாணவி. இந்தப் பள்ளியின் மாணவ மாணவியர்கள் ஆண்டுதோறும் மெரிட் லிஸ்டில் இடம் பெறுவது பாராட்டுக்குரியது.

—பி.எஸ்.ஆர்.

O மாதவி



எடுப்பான மேலட்டை

வண்ணப்படம் எடுத்தவர்:

உத்ரா



எதிரொலி



கோமதி ஸ்வாமிநாதன்

தொலைக்காட்சி எதிரொலி நிகழ்ச்சியில் எனது கதாபாத்திரங்களான பஞ்சாமிர்தத்தையும், பெரியநாயகியையும் நுழைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசையின் விளைவு:

தொலைக்காட்சி நிலையத்தில் எதிரொலி நிகழ்ச்சி தொடங்குகிறது. பஞ்சாமிர்தமும் பெரியநாயகியும் அமர்ந்திருக்கின்றனர்.

பஞ்சாமிர்தம்: எதிரொலி நேயர்களுக்குப் புதிய வணக்கம்! வணக்கத்திலே புதியது பழையது என்று உண்டா என்ற சர்ச்சையில் இறங்க வேண்டாம்! நான் புதிது. அவ்வளவுதான்!... வந்திருக்கிற கடிதங்களைப் படிக்கிறீங்களா?

பெரியநாயகி: என்ன கையெழுத்து?... எல்லாம் கோழி கிண்டியிருக்கிறது மாதிரி இருக்கு... நல்லபடியாக,

பஞ்சாமிர்தம்: கோழி வளர்ப்புத் திட்டத்தைப் பற்றி டாக்டர் சேவல் துரை கொடுத்த விளக்கங்களைப் பாராட்டிப்பல கோழியன்பர்கள் நிலையத்துக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலையத்தின் சார்பில் நன்றி.

பெரியநாயகி: என்னது? திடீர்னு குறுக்கே கோழி விரட்டுகிறீர்கள்? அப்படி ஏதும் கடிதம் வந்திருப்பதாக இன்னும் நான் சொல்லவில்லையே!

பஞ்சாமிர்தம்: மன்னிக்கணும். இந்த மாதிரி பதில்களை என் முன்னோர்கள், இல்லை! இல்லை! இதற்கு முன் இந்த நிகழ்ச்சிகளில் பதில் சொல்லியதைக் கேட்டுக் கேட்டுப் பழக்கம்! தொலைக் காட்சி நேயர்களே! எனக்குக் கோழியைப் பற்றி ஒன்றும் தெரியாது... மேலே படியுங்கள்.

பெரியநாயகி: இந்தக் கடிதத்தைப் படிக்கிறேன். ஆலங்குடி அப்பாசாமி என்பவர் எழுதியிருக்கிறார்.

பஞ்சாமிர்தம்: யாரு? மறுபடியும் பேரைச் சொல்லுங்க.

பெரியநாயகி: ஆலங்குடி அப்பாசாமி. இவரை உங்களுக்குத் தெரியுமா? ரொம்ப அக்கரையாக் கேட்கறீங்களே?

பஞ்சாமிர்தம்: ஆலங்குடி அப்பாசாமி... அவரை நிச்சயமாக சத்தியமாக எனக்குத் தெரியாது. அவர் இப்போது எங்கேயாவது தொலைக் காட்சிப் பெட்டி முன் உட்கார்ந்து தன் பெயர் சொல்லப்படுகிறதா என்று கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்! ஒரு தடவைக்கு மூன்று தடவை சொல்லியாயிற்று. ஆலங்குடி அப்பாசாமி அவர்களே! உங்கள் ஜன்மம் சாபல்யமாயிற்று? ... சரி! அவர் என்ன எழுதியிருக்கிறார், படியுங்கள்.

பெரியநாயகி: சென்ற செவ்வாய்க் கிழமை தமிழ்ச் செய்தி வாசித்தவரின் மீசை அவர் முகத்தையே மறைத்துக்கொண்டிருந்தது. இது அவசியம்தானா?

பஞ்சாமிர்தம்: எது அவசியம்தானா என்று கேட்கிறார்? செய்தியா? மீசையா?... ஒருவேளை இந்த நேயருக்குச் செய்தியின் முக்கியத்துவத்தை விட மீசையின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கவலையா?... மீசை இல்லாமல்தான் தொலைக் காட்சியில் செய்தி வாசிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. மீசையோடும் வாசிக்கலாம் மீசை இல்லாமலும் வாசிக்கலாம். அடுத்த கடிதம்?

பெரியநாயகி: உங்கள் விளக்கம் சரியில்லை. வழவழ கொழ கொழ என்று இருக்கிறது. விளக்கம் பளிச்சென்று இருக்க வேண்டாமோ?

பஞ்சாமிர்தம்: உஷ்! இது நம்ப வீட்டுக் கூடம் இல்லை! இது தொலைக் காட்சி நிலையம். மறந்து விடாதே! அடுத்த கடிதம்.

பெரியநாயகி: சென்ற வாரம் நடந்த ஜெகஜ் ஜோதி என்ற நாடகத்தைப் பற்றிய விஷயம்.

பஞ்சாமிர்தம்: பாராட்டி நிறைய நேயர்கள் எழுதியிருப்பார்களே?

பெரியநாயகி: குசப்பேட்டை குந்தி தேவி யமுனாநகர் ஜமுனா ராணி, காவாடிப் பேட்டை கௌசல்யா...

பஞ்சாமிர்தம்: எல்லோருக்கும் நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெரியநாயகி: ஏன் அவசரப்படறீங்க? அதே நாடகத்தைத் தாக்கி நூத்திப் பத்துக் கடிதங்கள் வந்திருக்கின்றன.

பஞ்சாமிர்தம்: கோவிந்தா!... நாடகத்திற்கு டிபாசிட்டே போச்சு!... அதைப் பார்த்த போது நானே நினைச்சேன்...

பெரியநாயகி: குன்றத்தூர் குமரேசன், பூவிருந்தமல்லி கதிரேசன்!....

பஞ்சாமிர்தம்: அத்தனை பேர்களையும் படிக்கணும்னா, நாம் இந்த எதிரொலி நிகழ்ச்சியைத் தேசிய ஒலிபரப்புக்கு அப்புறமும் தொடரணும். அவ்வளவு லேட்டா வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டா எனக்கு ஒத்துக்காது!... நேரமாயிட்டே இருக்கு. ஒரு முக்கியமான அறிவிப்புக்காக நேயர்கள் காத்துக்கிட்டு இருக்காங்கன்னு தெரியும்... அடுத்த வாரத் திரைப் படம்....

பெரியநாயகி: கொஞ்சம் மூச்சு விட்டுப் பேசுறீங்களா? நீங்க சொல்லாமலேயே நான் அந்த விஷயத்திற்குத்தான் வந்திருக்கேன்... இது பற்றி குன்றத்தூர் குமரேசன்....

பஞ்சாமிர்தம்: அப்படியா?... படிங்க! படிங்க!....

பெரியநாயகி: அடுத்த வாரத் திரைப் படத்தைப் பற்றி நீங்க அறிவிக்காமல் இருப்பதே மேல். அன்று காலை வரை விளாவது நல்ல படம் காண்பிக்கப்படும் என்ற நம்பிக்கையில் இருப்போம். எங்கள் ஏமாற்ற நேரத்தை இப்படிக் குறைக்கலாமே!

பஞ்சாமிர்தம்: நிலையத்தின் சார்பில் குமரேசனுக்கு நன்றியைத் தெரிவித்தாகவேண்டும். அவர் இப்போது பெரிய உதவி செய்திருக்கிறார்.

பெரியநாயகி: மனுஷன் இண்டலோ இண்டல்னு எழுதியிருக்கிறார். உதவி செய்திருக்கிறார் என்று....

பஞ்சாமிர்தம்: அடுத்த வாரத் திரைப்படம் இன்னும் நிச்சயமாகவில்லை என்று சொல்லத்தானே நான் காத்திருந்தேன். அவர் சரியான கேள்வி போட்டு என் பதிலை வாங்கி விட்டாரே...

பெரியநாயகி: நாசமாப் போச்சு...

பஞ்சாமிர்தம்: இது டி.வி.யில் தவிர்க்கப் பட வேண்டிய சொல். இன்னும் ஏதாவது கடிதங்கள் இருக்கின்றனவா?

பெரியநாயகி: சென்ற வாரம் கண்மணிப் பூங்காவில் நடனம் ஆடிய சித்ரலேகா...

பஞ்சாமிர்தம்: நன்றாக ஆடினாள் என்று எழுதியிருக்கிறார்களா?

பெரியநாயகி: ஆயம்பாக்கத்திலிருந்து ஆறு பேர் கையெழுத்துப் போட்டுப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

பஞ்சாமிர்தம்: அந்தச் சிறுமியின் சொந்தக்காரர்கள் அந்த உதவிகூடச் செய்ய மாட்டார்களா?... சரி! நேரமாகி விட்டது. கடையை மூடலாமா? மன்னிக்கணும்!... நேயர்களுக்கு வணக்கம். அடுத்த வாரம் மீண்டும்... இல்லை! இல்லை! வேறு யாராவது உங்களைச் சந்திப்பார்கள். வணக்கம்.

(எழுந்திருக்கிறார்கள்)



வாசகர் விமர்சனம் போட்டி முடிவு

முதல் மூன்று பரிசுகள் தவிர, ஆறுதல் பரிசாகக் கல்கி விடுமுறை மலர் '83 நூறு கல்கி வாசகர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டன. ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பட்டியல் - இரண்டாம் பகுதி:

(51) பி. பொன்னம்மாள், 5-ஏ, பத்மாவதி பவனம், வாலிபாளையம் 3வது தெரு, திருப்பூர்-638601: (52) ஆர். வி. ராதாகிருஷ்ணன், ஏ-3-77, கைலாயபுரம், திருச்சி-14: (53) எஸ். சேதுராமன், 100, காங்கேயநல்லூர் ரோடு, காந்திநகர், வேலூர் 632006: (54) திருமதி கே. வசந்தா, W/o ஈ.எஸ். பாஸ்கரன்,E-133-A, S.P.B. காலனி, ஈரோடு-638010: (55) ஆர். பாலசுப்பிர மணியன், கிழக்குபட்டமுடையபுரம், அய்ய னூர்குளம் அஞ்சல், திருநெல்வேலி-627853: (56) சி. விஸ்வநாதன், 33-153, சக்தி நகர், ராமகிருஷ்ணாபுரம், அஞ்சல்: செகந்திராபாத் -56: (56) எஸ். பிரேமா, 7, எஸ். டி. சிங் ப்ளாட்ஸ், கோவிந்த நகர், கோட்மா அஞ் சல், ஜம்ஷெட்பூர்-831005: (58) வி. ஜாஸ் மின் வின்சென்ட், 9-3-27, பாபிஜேனி, வாரி தெரு, பாபட்லா அஞ்சல்-522101: (59) ஆர். உமாமகேஸ்வரி,W/o எஸ். ராம கிருஷ்ணன், மளிகை, தாசவ நாயக்கன் பேட்டை அஞ்சல், வெள்ளக்கோயில் (வழி) 638111: (60) டி. எம். சந்திரசேகரன், கிரிஷக் பாரதி கோ-ஆபரேட்டிவ் லிமிடெட், முதல் மாடி, ராஜேஸ்வரி அபார்ட்மெண்ட்ஸ் திருமலையவார்ட்: நான்புரா, சூரத்-395001: (61) எஸ். மகாலிங்கம், மேலாளையூர், கூட வாசல் (வழி) 612601: (62) எஸ். நெடுஞ் செழியன்,1072-27-பி,சண்டிகார்-160013: (63) பி. பாபுசங்கர், 3-1, டபிள்யு. கந்த சாமி செட்டி தெரு, ஓமலூர்-636455: (64) வி. நடராஜன், ரேடியோ கெமிஸ்ட்ரி டிவி ஷன்,B.A.R.C. பம்பாய்-85:(65) பி.சங்கரன், 12/10, கிழக்குத் தெரு, நாட்டமங்கலம், சேலம், 636010; (66) கே. எஸ். வைத்திய நாதன், 4, ராஜபாதர் தெரு, பெரம்பூர், சென்னை-11; (67) எஸ்.பர்வதம், W/o வி. சம்பத், 190, தேரு தெரு, அவிநாசி, கோயம் பத்தூர்; (68) ஆர். கிருஷ்ணகுமார், 11, சென்ட்ரல் ஸ்டுடியோ காலனி,சிங்கநல்லூர் கோயம்பத்தூர் மாவட்டம்; (69) குமாரி கண்ணகிராமசாமி, 57, ஹரியப்ப ஆசாரி காலனி, இல்லைபுரம், நாமக்கல், சேலம் மா வட்டம்; (70) எம். எஸ். ராமகிருஷ்ணா, 718, 6வது மெயின் ரோடு, கோகுலம் எக்ஸ் டென்ஷன், யஷ்வந்த்புரம், பெங்களூர்-22: (71) ஆர்.மூலம், 12-11-173/1, நாமல குண்டு, செகந்திராபாத்-61; (72) ஜே. உமாவதி, 147, துரைசாமி நகர், பள்ளப் பட்டி, சேலம் மாவட்டம்-636009: (73) டி. என். சுப்பிரமணியன், XII/204 மெயின் ரோடு, திருபுனிதுரா, கேரளா-682301:(74) முத்துலட்சுமி நடராஜன், 47, சுப்பிரமணிய சுவாமி கோவில் தெரு, கொஸபேட்டை, வேலூர்-1: (75) ஆர். நடராஜன், 2, காஸிம் அலி 2வது தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5: (76) எஸ். ஜெயம், எம்.ஏ., ஹோட்டல் கோகுலம், மெயனூர் ரோடு, ஐந்து ரோடு அருகில், சேலம்-636004; (77) சித்ரா நடராஜன், சி-1, நானுலால்ப்ளாட்ஸ், ஜுடியல் காலனி எதிரில், மணிநகர், அஹமதா பாத்-8: (78) விஷ்ணு ரேவதி, 28, அண்ணா நகர், சென்னை-40; (79) வி. விஸ்வநாதன், டி-66, குறிச்சி ஹவுஸிங் யூனிட், கோயம் பத்தூர்-641024: (80) ஜே. நரசிம்மன், 50, வினோபாஜி தெரு, குமாரமங்கலம்காலனி சென்னை-82; (81) எஸ். நெடுமாறன், ப்ளாட் நெ. 23, லக்ஷ்மி நகர், பொழிச்சலூர் அஞ்சல், சென்னை-74; (82) ஏ. முருகு ஸ்வாமிநாதன், 46, தெற்குத் தெரு, அம்பா சமுத்திரம், திருநெல்வேலி-627401: (83) சாரதா, 2/5, பழைய ராஜேந்திரன் நகர், இரண்டாவது மாடி,புதுடில்லி-10;(4)நல்லந் திஸ்வரி, கண்ணபுரம், ஒளபாளையம் அஞ்சல், காங்கயம் (வழி): (85) கே. துரைசாமி, 17, முதல் குறுக்குத் தெரு,கோபால ரெட்டி காலனி, சென்னை-82; (86) டி. சி. ராஜு, 1-96-பி, சாயிநகர், மல்கஜ்கிரி, ஹைதரா பாத்-500047; (87) எஸ். ரகுநாதன், 30, 46வது தெரு, அசோக்நகர், சென்னை-83 (88) பி. கிரிராஜன், சி-83, கே. வி. ஆர். தெரு, காந்திநகர், உடுமலைப்பேட்டை-642126: (89) ஏ. ஆர். நாகராஜன், 18, ஆசிரியர்கள் காலனி, புதுக்கோட்டை-622001; (90) ஜி. நாராயணசாமி, 5, திருவள்ளுவர் தெரு, ரங்கராஜபுரம், சென்னை 24: (91) சீதா துரைசெல்வம், தொகர பள்ளி அஞ்சல், மேட்டூர் (வழி) தர்மபுரி மாவட்டம்; (92) தேவகி முருகேசன், 40, நாடார் தெரு, ஆண்டிப்பட்டி, மதுரை மா. வட்டம்; (93) சி. வி. மோகன், 27B, திரு வள்ளுவர் தெரு, ராமாபுரம், அம்பத்தூர், சென்னை-53; (94) அன்னபூரணி கணேசன், B-1, வயர்லெஸ்ரிசீவிங்ஸ்டேஷன், பெஹ்ராம் புதுதில்லி-30: (95) ஏ. டி. கபிலன், ஆர்-5, செங்குளம் காலனி, மன்னார்புரம், திருச்சி-20 (96) தங்கம் கோபாலகிருஷ்ணா, எம். ஐ. ஜி.4 புது காந்தாரா, அர்ஸ் ரோடு, சரஸ்வதிபுரம், மைசூர்-9: (97) கமலா ஸ்ரீநிவாசன், B-10, கெமிகல் காலனி, மேட்டூர் டேம்-2, சேலம் மாவட்டம்; (98) ராஜலட்சுமி ராமமூர்த்தி 156, பேக்பே ரெக்ளமேஷன், பம்பாய்-20: (99) எஸ். ராஜரத்தினம், C/o வி. கிருஷ்ண மூர்த்தி, 471, 8வது மெயின் 15வது குறுக்கு வில்சன் கார்டன், பெங்களூர்-27: (100) ஆர். சிவகாமி, டி.எஸ். 25, லக்ஷ்மி இல்லம், ராமகிருஷ்ணாபுரம்,கரூர்,திருச்சி மாவட்டம்.

கலைஞரைக் கேட்கிறார் கிட்டப்பா

[மாயவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா சமீபத்தில் தி.மு.க. வை விட்டு அ.தி.மு.க. வுக்குக் கட்சி மாறினார். 1967 லிருந்து சட்டமன்ற உறுப்பினராக உள்ள கிட்டப்பா சட்ட சபையில் கிட்டத்தட்ட 3500 கேள்விகள் கேட்டு 'கேள்வி மன்னன்' என்று பெயர் வாங்கியவர். தான் தி.மு.க. வை விட்டு விலகிய காரணங்களை அடிப்படையாக வைத்து கலைஞரைக் கேள்விகள் கேட்கிறார் கிட்டப்பா]

(1) 'நெருக்கடி நிலை' காலத்தில் கட்சி நலனை மட்டும் மனத்தில் நிறுத்தி கட்சியைக் காப்பாற்றிய கலைஞரே, இப்போது தி.மு. கழகத்தை உங்கள் குடும்பச் சொத்தாகப் பாவித்துச் செயல்படுவது ஏன்?

(2) இந்தியாவிலேயே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தும் ஒரே கட்சி தி. மு. க. தான் என்று கூறிக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உங்கள் மகனை அனுப்பி இன்னார்தான் செயலாளராக வரவேண்டும் என்று கட்டளை அனுப்பினீர்களே! இது சரி தானா?

(3) எம். ஜி. ஆர். ஆட்சியை ஊழல் என்கிறீர்களே! அதைச் சொல்ல உங்களுக்குத் தகுதி இருக்கிறதா?

(4) அரசு பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும்போது அரசியல் ஆதாயத்துக்காக அவைகளை எதிர்ப்பது எந்த விதத்தில் நியாயமானது?

(5) அடிக்கடி ஏதாவது போராட்டங்கள் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதனால் மிகவும் பாதிக்கப்படுவது அடிமட்டத் தொண்டர்களே! நீங்கள் அரசியலில் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகத் தொண்டர்களைச் சிரமப்படுத்துவது நியாயம் தானா?

(6) தி. மு. க. – அ. தி. மு. க. இணைப்புக்குக் குறுக்கே நிற்பது உங்கள் சுயநலம் ஒன்றுதான். அண்ணா வழியில் நடந்து வரும் எம். ஜி. ஆர். பலம் பெற உங்கள் சுயநலத்தைக் குழி தோண்டிப் புதைத்தால் என்ன?

(7) மாற்றுக் கட்சியினர் உங்களை 'கலைஞர்' என்று குறிப்பிடுவதை விரும்பும் நீங்கள், தி. மு. க. வில் யாராவது எம். ஜி. ஆரை புரட்சித் தலைவர் என்றால் மட்டும் அவர்மீது எரிந்து விழுவது ஏன்? இந்தச் சின்ன விஷயத்தைச் சகித்துக் கொள்ள முடியாதவாறு உங்கள் மனநிலை தளர்ந்தது ஏன்?

(8) கடைசியாக, ஆட்சிக் கட்டிலை அனுபவித்துவிட்ட தாங்கள் இனியும் பதவி ஆசையால் அலையாமல் உங்களுக்குள்ள தமிழ் அறிவை அரசியலுக்குப் பயன்படுத்தாமல், தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாமே?

தொகுப்பு: நமது நிருபர்

புகைப்படம்: சுபா

அடுத்த வாரம்: கிட்டப்பாவுக்குச் சில கேள்விகள்!



அமரர்கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி'83



அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறு கதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ.**	**1000**
இரண்டாவது பரிசு	**ரூ.**	**500**
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 250 வீதம்)	**ரூ.**	**500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழ்ங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

✲ கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

✲ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

✲ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

✲ கதைகளை அனுப்பக் கடைசி தேதி ஜூன் 15.

✲ உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

✲ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.


✲ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

✲ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

✲ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

✲ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032



சிவப்பு சூரியன்

அன்பான குழந்தைகளே,

இன்றைக்கு நாம் சூரியனைப் பற்றித் தெரிந்து கொள்ளப் போகிறோம்... சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கிற தூரம் எவ்வளவு தெரியுமா? 1495 லட்சம் கிலோ மீட்டர். சூரியன்லயே ரொம்ப ரொம்பக் குளுமையா இருக்கிற எடத்தோட வெப்பம் 6000 டிகிரி செல்ஷியஸ். சூரியனோட சைஸ் என்ன தெரியுமா? நம்ம பூமியைப் போல 13 லட்சம் மடங்கு பெரிசு.

நமக்கெல்லாம் வெளிச்சம் கொடுப்பதற்காக ஒவ்வொரு நிமிஷமும் சூரியன் தன் உருவத்திலிருந்து 240 மில்லியன் டன்னை இழக்கிறது. இருந்தும் சூரியன் தன்னை முழுக்கக் கரைத்துக் கொள்ள வேண்டுமென்றால் இன்னும் 1500 லட்சம் மில்லியன். வருடங்கள் போக வேண்டும்.

மேலும்....

''ஐயோ ஐயோ! நிறுத்துங்க. சிவப்பு சூரியன் சினிமாவுக்கு விமரிசனம் எங்கே?'' என்று கேட்பவர்களுக்கு:


இந்தப் படத்துக்கு விமரிசனம் எழுதுவானேன், ரஜினி ரசிகர்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்வானேன்.

வடக்கில்தான் ரஜினியை ஆதரிக்கிற மாதிரி பாசாங்கு செய்து அமுக்கப் பார்க்கிறார்கள் என்று கேள்வி. தெற்கிலுமா?

ஒன்று நிச்சயமய்யா!

இந்த மாதிரி இன்னும் நாலு படங்கள் வேண்டாம், இரண்டு படங்களில் ரஜினி நடித்தாரானால் போதும், சூப்பர் ஒரு பக்கமும், ஸ்டார் ஒரு பக்கமுமாய்க் கழன்று போகும்.

-ஜெய மன்மதன்



''எழுதுவது என்பது ஒரு கடினமான செயல்தான். எழுத்தாளனாக இருப்பது சுலபமல்ல. திறமையுள்ள எழுத்தாளன் கூட தங்கள் எழுத்துக்களில் நிறைய சொந்தக் கலப்பது வருந்தத் தக்கது. நான் அதிகம் படிப்பதில்லை. அனுபவங்களைத்தான் எழுதுகிறேன். பேட்டிகள் கொடுப்பதைக் கூடியவரை தவிர்க்கிறேன். ஏனெனில் என்னைப் பற்றியே நான் பேசுவதை வெறுக்கிறேன்.''

(ஒரு பேட்டியில் பிரபல ஆங்கில எழுத்தாளர் ஆர். கே. நாராயணன் கூறியது).

அனிதா ராமச்சந்திரன்

இந்திரா சென்னையில் போட்டியிடுவாரா?



1985லா அல்லது 1984லேயா என்று இழுபறியில் இருக்கும் நாடாளு மன்றத் தேர்தலுக்குக் கோலாகல கிருஷ்ணா நீர்வைபவம் தமக்கு உதவிகரமாக இருக்கும் என்று எம். ஜி. ஆர். நம்பலாம். ஆனால் இதே நம்பிக்கை அம்மையார் உள்ளத்திலும் துளிர் விட்டுள்ளதே!

யானைக்கு முன் மணியோசை

யானைக்கு முன் மணியோசையாக ராஜீவ் காந்தி தமிழ் நாட்டுக்கு வந்தார். இளவரசரை வராமல் தடுக்க எடுத்த முயற்சிகள் வீணாயின. வந்தவர் தமிழ் நாட்டில் அ. இ. அ. தி. மு. க. செய்யத் தவறிய விஷயங்களைப்பட்டியல்போட்டுப்பேசிவிட்டுபோதாக் குறைக்கு தந்தை பெரியார் சிலைக்கும் மாலை அணிவித்து ஒரு பக்கா அரசியல்வாதியாகத் திரும்பி யிருக்கிறார். அந்தச் சூடு தணியாத நிலையில் இருக்கும்போதே 25—5—83 அன்று கிருஷ்ணா நதி திட்ட விழா நிகழ்ச்சியைச் சாக்காக வைத்துக் கொண்டு வந்த இந்திரா, தமது காங்கிரஸ் ஊழியர் கூட்டத்திலும் கலந்து கொண்டு உணர்ச்சியூட்டினார்.

விளம்பரத்தால் யாருக்கு லாபம்?

முதலமைச்சர் எம். ஜி. ஆர். தெரிந்தோ தெரியாமலோ பிரதமர் இந்திராவுக்கு எந்த அளவுக்கு விளம்பரம் செய்ய முடியுமோ அந்த அளவு செய்து தமது 'மித்திர' பலத்தைக் காட்டிக் கொண்டார். சென்னை நகரமே விழாக் கோலம். அலங்கார வளைவுகள், கட் அவுட்கள், வண்ண வண்ண விளக்குகள், வீதிக்கு வீதி கலரில் முழு உருவ இந்திரா போஸ்டர்கள். இந்திரா காங்கிரஸாரால் கூட இந்த அளவு செய்ய முடியாது. எங்கு பார்த்தாலும் இந்திரா இந்திராதான்!

இதன் பலாபலன் என்னவாக இருக்கும்? இந்திரா இந்தப் புகழ்ச்சிக் கெல்லாம் மயங்கி விடுபவரா? ஊகும். எம். ஜி. ஆர். செய்த விளம்பரத்தை அவர் தமக்குப் பயன் படுத்திக் கொள்கிறார்.

சென்னைக் கூட்டங்களில் பிரதமர் இந்திரா எம். ஜி. ஆருக்கு அனுசரணையாகப் பேசுவார் என்று எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் இந்திராவோ எவரும் எதிர்பாரா வகையில் 'கிருஷ்ணா நீர் என் திட்டம்! அ. தி. மு. க. அரசு தாமதப்படுத்தியது'', ''மதிய உணவுத் திட்டம் மலிவான பிரசாரம்!'' ''தமிழகத்தில் எல்லாத் துறையிலும் நிர்வாகம் சீரழிந்தது'' என்று அடுக்கடுக்காகக் குறைகளைக் கூறியதோடு, ''அ. இ. அ. தி. மு. க. அரசு குறைகளைப்பிரசாரம் செய்ய காங்கிரஸ் ஊழியர்கள் பாதயாத்திரை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னையில் இந்திரா போட்டி!

மொத்தத்தில் பிரதமரின் பேச்சு அரசியல் வட்டாரத்தில் புயலைக் கிளப்பியுள்ளது. இவரது பேச்சின் பின்னணி எதுவாக இருக்கும்? நம் நாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் பிடிப்பில்லாத மாநிலமாக இருந்தாலும், இந்திரா காந்திக்குத் தனிப்பட்ட செல்வாக்கு இருக்கிறது. அதனால் தேர்தல் வரை எந்தக் கட்சி கூட்டுமின்றி இந்திரா காங்கிரஸை வளர்ப்பது, தேவைப்பட்டால் தேர்தல் சமயத்தில் ஏற்கனவே செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தப்படி கூட்டு வைத்துக் கொள்வது.

இந்திரா காந்தி சிக்மகளூர், மேடக் ஆகிய தென் மாநிலத் தொகுதிகளில் போட்டியிட்டாகி விட்டது. இந்த முறை தமிழ்நாட்டில் சென்னை நகரத் தொகுதிகள் ஒன்றில் போட்டியிட எண்ணமாம்! இது சாணக்கியம்தான். இப்படிச் செய்வதன் மூலம் தமது கட்சியையும் அவர் இங்கே பலப்படுத்த முடியும்.

விசிட்டர் அனந்த்

ஏன் உட்கார்ந்தாய்?

அது ஒரு கோ-எஜுகேஷன் பள்ளி. உடனிருந்த மாணவர்களுக்கு பயங் கலந்த ஒரு ஆர்வம் ஏற்பட, இருக்கையிலிருந்தே எட்டிப் பார்த்தார்கள்.

''என்னாச்சு அவளுக்கு? உனக்காவது தெரிஞ்சாச் சொல்லு!'' — சுசீலாவை அதட்டினார் ஆசிரியர்.

''சார் நான் போய் ஜோஸ்பின் டீச்சரைக் கூட்டிட்டு வரட்டுமா சார்?''

''என்னோட வகுப்பிலே எங்கிட்டச் சொல்லாம ஜோஸ்பின் டீச்சர் கிட்ட என்ன சமாசாரம்?'' கோபத்தோடு அவர் இரைச்சல் போட,

தற்செயலாக அந்த வகுப்பைக் கடந்த ஜோஸ்பின் டீச்சர் தன் பெயர் அடிபடுவது காதில் விழ, ''எக்ஸ்யூஸ் மீ'' என்றாள் வாசலில்.

''வாங்க மிஸஸ் ஜோஸ்பின்! இந்தப் பொண்ணு அழுது. என்னு கேட்டா எழுந்திருக்க நிக்காம, ஒரு மரியாதை இல்லாம...''

அந்த முகத்தின் கலவரமும், உட்கார்ந்த நிலையும் ஜோஸ்பினுக்கு உண்மையை உணர்த்த ஆறுதலாக லக்ஷ்மியின் தோளைப் பிடித்து அழுத்தினாள். பின் பக்கத்தில் மாணவர்களின் ஆர்வக் கண்களைக் குறித்துக்கொண்டாள்.

''சார், வகுப்பை இதோட முடிச்சு, சின்னதாக ஒரு பிரேக் விட்டுடுங்க'' என்று சொல்லி மீதியைச் சன்னமான ஆங்கிலத்தில் சொன்னாள்.

''ஓ....ஐ'ம் சாரி மேடம். நான் இதை எதிர்பார்க்கல்ல. ஐ'ம் வெரி ஸாரி. 'ஸ்டுடண்ட்ஸ், அடுத்த வகுப்புக்கு நீங்கல்லாம் வந்தாப் போதும். இப்பப் போகலாம்.'' அவரும் சரேலென இடத்தை விட்டு நகர்ந்தார்.

அத்தனை பிள்ளைகளும் போன பின்பு, லக்ஷ்மியை மெல்ல எழுப்பி, கண்களைத் துடைத்து விட்டாள் ஜோஸ்பின்.

''பயமாருக்கு டீச்சர்!''

''எதுக்குப் பயம்? அசடு மாதிரி அழக்கூடாது. சுசீலா கிட்ட ஆட்டோ கூட்டி வரச் சொல்லியிருக்கேன். நானே வீட்டுக்கு வர்றேன். முகத்தைத் துடைச்சுக்கோ.''

ஆட்டோ போனவுடன் அந்த வகுப்புப் பையன்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஏண்டா அவ எழுந்திருக்கவே இல்லே?''

ஒரு விஷமக்காரப் பையன், ''அவ ஒக்காந்துட்டா தெரியுமா?'' என்றான்.

''நாங்கதான் பாத்தமே. நீ வேற புதுசாச் சொல்லணுமா? வாத்தியார் கூப்டக் கூப்ட உட்கார்ந்துகிட்டுத்தானே இருந்தா!''

''அதில்லடா. 'அவ ஒக்காந்துட்டா!' கண்களைச் சிமிட்டிக் கொச்சையான வேறொரு வார்த்தையை மெல்லச் சொன்னான்.

பத்து வயதுப் பையன் ஒருவன் வெட்கத்தோடு சிரிக்க, ''நீ ஏண்டா ராம் வெட்கப்படுறே? நீயும் ஒக்காந்திட்டியா?'' மற்றவர்கள் கவீரெனச் சிரிக்க,

இவன் அவமானத்தில் முகம் கருங்கி ஓடிப்போனான்.

''என்னது வாசல்ல ஆட்டோ? ஜானகி, நீ போய்ப் பாரு!'' அம்மா பதற,

தேவிபாலா

அதற்குள் லக்ஷ்மியோடு ஜோஸ்பின் டீச்சர் உள்ளே நுழைந்தாள்.

''என்னடி லக்ஷ்மி இது? உனக்கென்னாச்சு?''

''ஏன் கூச்சல் போடறீங்க? எல்லாம் நல்ல செய்திதான். உங்க கையால ஸ்வீட் சாப்டுட்டுத்தான் நான் போகப் போறேன்.''

புரிந்துகொண்ட அம்மா சட்டென அழுதாள். உதடுகள் துடிக்க, உடம்பு பதற மளமளவென அழுதாள்.

''ஏம்மா இப்படி அழறே?'' — ஜானகி.

''நீயும் அம்மாவானா அது தெரியும்டீ. உட்காருங்க டீச்சர். காஃபி கொண்டு வர்றேன்.''

''வேணாம்மா. நான் சும்மா சொன்னேன். எனக்கு வேலை நிறைய இருக்கு. போகணும். ஒரு வாரத்துக்கு லீவு போட்டுடுங்க. சடங்கெல்லாம் முடிச்சுத்தானே அனுப்புவீங்க!

''நான் வரட்டுமா?''

டீச்சர் போன பின்பு அப்பா வெளியே வந்தார். அதற்குள் பக்கத்து வீட்டுப் பெண்கள் மூக்கு வியர்த்து முன்னால் வந்து நிற்க,

சடுதியில் செய்தி தெருவில் பரவ,

ஜானகியைக் கூப்பிட்டு காதோடு சொன்னாள் அம்மா: ''அக்காவுக்கு ஆபீசுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிடு. உடனே போ.''

ஆபீசிலிருந்து வித்யா வந்தவுடன்,

அப்பா கூச்சல் போட்டார். ''எதுக்காக இப்படி ஊரைக் கூட்டறேள்? இதெல்லாம் நார்மல். பொண்ணாப் பொறந்தா ஒரு நாளைக்கு ஆயித்தானே தீரணும். விஷயத்தை ஏன் கொச்சைப்படுத்தணும்?''

''இதுல என்ன தப்பு?'' அம்மா குறுக்கே வர,

''எதுடி தப்பு இல்லே? எம் பொண்ணு ரெடியாயிட்டான்னு ஊர்ப் பசங்களுக்குப் பத்திரிகை வச்சு வம்பை விலைக்கு வாங்கணுமா?''

''எதுக்கும்மா சண்டை இப்ப?'' — வித்யா.

''சண்டை இல்லே வித்யா. நாலாம் நாள் ஆத்துக்கு அழைச்சு, புட்டு சுத்தி, நாலு சுமங்கலிப் பெண்டுகளைக்கூப்பிட்டு வெத்தலை பாக்குக் குடுத்து, மணைல வச்சுப் பாடறது உண்டா இல்லையா? இதென்ன ரகசியமா? ஆம்பளைப் பசங்க படிக்கற பள்ளிக் கூடத்துல பட்டப் பகல்லதானே ஒக்காந்தா. யாருக்குத்



வண்ணப் படக்கதை: பக்கத்தைப் புரட்டினால் வண்ணப்படம்

தெரியலேன்னு கேக்கறேன். ஒண்ணும் செய்யாம விட்டா, அக்கம் பக்கத்து மனுஷா கேவலமா நெனேப்பா!''

''சரி, என்ன செய்யணும்?''

''அவளுக்கு ஒரு புடவையும் ரவிக்கைத் துண்டும் எடுக்கணும்.''

அப்புறமா...

அம்மா லிஸ்ட் விட,

அப்பா....

நாலு பெண்களைப் பெற்ற காசில்லாத அப்பா.... ஓசைப்படாமல் உள்ளே நழுவ,

அம்மா தரும் லிஸ்டை மௌனமாக வித்யா வாங்கிக் கொண்டாள்.

செருப்பை மாட்டிக் கொண்டாள்.

''இப்பத்தானே வித்யா உள்ள நுழைஞ்சே அதுக்குள்ள கிளம்பிட்டியா?''

''நீ தர்ற பட்டியலுக்குக் குறைஞ்சது ஐநூறு வேணும். யாருகிட்டக் கடன் வாங்கலாம்னு இப்பவே வலை போட்டாத்தானே அகப்படும்.'' குரலில் சலிப்பு எட்டிப் பார்க்க அறுந்த செருப்போடு காலைச் சாய்த்துச் சாய்த்து நடக்கத் தொடங்கினாள்.

நாலாம் நாள் காலை....

மஞ்சள் நீர் வார்த்து, புதுப் புடவையைக் கட்டிக் கூட்டிக் கொண்டு வந்தார்கள் லக்ஷ்மியை. வித்யா பார்த்தாள். அடிப்பக்கம் கத்தரித்து விடப்பட்ட கேசம் தென்றலில் அலைய, பார்டர்போல பசுக்களின் படம் போட்ட டி ஷர்ட்டும் சின்னப் புன்னகையும் அணிந்து பால் வடியும் முகமும் கையில் பால் டம்ளருமாக நிற்பாளே, அதே லக்ஷ்மியா இது! அந்தக் குழந்தைத்தனமெல்லாம் எங்கே ஓடி ஒளிந்தன? புசுபுசுவென்று புதுப் புடைவையைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு முகம் முழுவதும் பொறுப்பும் கலக்கமும் அப்பிக்கிடக்க எப்படி உருமாறிப் போய்விட்டாள்!

சுமங்கலிப் பெண்கள் ஒவ்வொருவராகச் சடங்குகளை முடித்து, வெற்றிலை பாக்கு பெற்றுக்கொண்டு, சாப்பாட்டுக்குப் போக,

இலை போட்டு அவர்களுப்பரிமாறிக்கொண்டிருந்தாள் வித்யா.

''என்ன வித்யா ஏதானும் செட்டிலாச்சா?''

ஆகவில்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு அமர்த்தலாகக் கேட்கும் அந்த மாமியைக் கோபமாகப் பார்த்தாள் வித்யா.

தூரத்தில் பேச்சுக் கேட்டது.

'தோ, சாதம் போடறாளே மஞ்சப் புடவை கட்டின பொண்ணு அவதான்வித்யா. மங்களம் மாமியோட மூத்த பொண்ணு. முப்பதுக்கு மேலாச்சு. ஒரு வரனும் சரியா அமையறதில்லே.'

'அமைஞ்சாலும் ஏராளமாக் கேக்கறா. குடுக்க சக்தி யில்லே. மேலும் இதுதானே அந்தக் குடும்பத்தையே தாங்கறது. ரெண்டாவது பொண்ணு இந்திரா 'சேல்ஸ் கேர்ள்' வேலை பார்க்கறதாம். காலேஜ் படிக்கிற ஜானகி.... இப்பக் கடைக்குட்டியும் ஒக்காந்தாச்சு.''

சுற்றி வந்த திசை யெல்லாம் ஒருவித அனுதாப கோஷங்கள் சுழன்று வர,

தளர்ந்துபோனாள் வித்யா....

அவ்வளவும் முடிந்து, ஆட்களெல்லாம் போன பின்பு, அம்மா பெருமூச்சு விட்டாள்.

''நீ ஒண்ணுமே சொல்லலியேக்கா....'' எதிரே புதுப் புடவையோடு நின்றாள் லக்ஷ்மி.

''என்ன சொல்லணும்?'' — வித்யா.

''நான் புடவையில ரொம்ப அழகா இருக்கேனாம். எல்லாரும் சொல்றா. நீ ஒண்ணுமே சொல்லலியே!''

புதிய மினுமினுப்போடு, அக்காவின் அபிப்பிராயத்துக்கு ஆவலோடு காத்திருக்கும் அந்தப் பதின்மூன்று வயதுக் குழந்தையைத் தலையோடு கால் மறுபடியும் பார்த்த போது...

குபீரென்று வயிற்றுக்குள் ஒரு ஜ்வாலை எழ, உடம்பு முழுக்கத் தீயாகத் தகிக்க,

'செடிலேயே கருகிப் போக ஏண்டி பூத்தே? அடிப் பாவி, இந்தப் பதிமூணு வயசுக் கிளர்ச்சிகளை யெல்லாம் தாண்டி முப்பதுக்கு வந்தவதாண்டீ நானும். மூணேநாலா ஒப்பாரி வைக்க, குமைஞ்சு, குமைஞ்சு அழ, நீயும் ஏண்டி எங்க வரிசைல சேர்ந்தே?'

உள்ளுக்குள்ளே மறுகி மறுகி, முடியாமல் வெடித்துச் சிதறி...

சட்டென லக்ஷ்மியைப் பிடித்து உலுக்கி, ''ஏண்டீ ஒக்காந்தே, ஏண்டீ ஒக்காந்தே?'' என்று ஆவேசம் வந்தவள் போல வித்யா அழத் தொடங்க,

காரணம் புரியாமல் லக்ஷ்மியும் அழ ஆரம்பித்தாள்.

சமீபத்தில் மதுரைக்கு ஒரு நாடக விழாவுக்காக வந்திருந்த நடிகை மனோரமாவிடம்,

''இப்போதைய படங்களிலே ஹாஸ்யக் காட்சி எடுபடுவதில்லை என்று பரவலான கருத்து நிலவுகிறதே அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு,


''எதையும் நினைப்பதற்கு நேரமில்லை என்ற வேகத்தில் படங்கள் தயாராகின்றன. எதையும் விவரமாக அலசி ஆராய்ந்து நன்கு திட்டமிட்டுச் செய்வதில்லை. எங்கும் வேகம், எதிலும் வேகம்தான். ஆனால் விவேகம்தான் குறைந்து விட்டது.'' என்றார். கூடவே, ''காமெடி முற்றிலுமாக எடுபடுவதில்லை என்று நான் சொல்ல மாட்டேன்'' என்று சமாளித்தார்.

—ஒ.எல். ரவிச்சந்திரன்



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

கரை கடந்தது அம்மா உங்கள் கவனிப்பு.

பார்லே

பரபரப்பு வேளையிலும் பாராட்டி சீராட்டுகின்றீர் பாப்பாவை...



நாடித்
தேர்ந்-
தெடுத்தீர்
பாப்பாவுக்கு
நலமான
பிஸ்கட்.



சுவைமிக்கது பார்லே க்ளுகோ, காசுரப்பானது. உங்கள் பாப்பாவின் ஊட்டத் தேவைகளுக்கு உரித்தான பிஸ்கட். சுகாதாரமிக்கதாய் இதனைப் படைப்போர் இந்தியாவிலேயே அதிகளவு பிஸ்கட் தயாரிப்பாளர்கள். தரத்திற்கு உலக விருதுகளை வென்றவர்கள். பாப்பாவுக்கு உங்கள் பாசத்தை உணர்த்த இதனிலும் மிஞ்சியது ஏதுமில்லை பாரிலே... பார்லே க்ளுகோ.

பார்லே
க்ளுகோ

உலகத் தேர்விலே
விருது வென்றது

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தைப் பராமரிப்பு பிஸ்கட்.

everest/82/PP/416-tm